## இந்திய கணக்காய்வு மற்றும்
## தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை

# இணக்கத் தணிக்கை (வருவாய்)
# மார்ச் 2021-உடன் முடிந்த ஆண்டிற்கானது

लोकहितार्थ सत्यनिष्ठा
Dedicated to Truth in Public Interest

**தமிழ்நாடு அரசு**
**அறிக்கை எண் 8 - 2022**

# இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை

## இணைக்கத் தணிக்கை(வருவாய்)

**மார்ச் 2021-உடன் முடிந்த ஆண்டிற்கானது**

தமிழ்நாடு அரசு
அறிக்கை எண் 8 - 2022

பொருளடக்கம்


| விவரங்கள் | பத்தி எண் | பக்கம் எண் |
|---|---|---|
| **முகவுரை** | | v |
| **கண்ணோட்டம்** | | vii |
| அத்தியாயம்-I - பொது | | |
| வருவாய் வரவுகளின் நிலை | 1.1 | 1 |
| வருவாய் நிலுவையின் பகுப்பாய்வு | 1.2 | 4 |
| வரி மதிப்பீட்டில் நிலுவைகள் | 1.3 | 5 |
| துறையினால் கண்டுபிடிக்கப்பட்ட வரி ஏய்ப்பு | 1.4 | 6 |
| திருப்புகை இனங்களில் நிலுவை | 1.5 | 6 |
| தணிக்கைக்கு துறைகள் மற்றும் அரசின் மறுமொழி | 1.6 | 7 |
| துறை வாரியாக நிலுவையில் இருந்த ஆய்வு அறிக்கைகள் மற்றும் தணிக்கை குறிப்புகள் | 1.6.1 | 8 |
| துறை சார்ந்த தணிக்கைக்குழு கூட்டங்கள் | 1.6.2 | 9 |
| வரைவு தணிக்கை பத்திகளுக்கு துறைகளின் மறுமொழி | 1.6.3 | 9 |
| தணிக்கை அறிக்கைகள் மீதான தொடர் நடவடிக்கை | 1.6.4 | 9 |
| தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் குறித்து பதிவுத் துறையின் நடவடிக்கை பற்றிய பகுப்பாய்வு | 1.7 | 10 |
| ஆய்வு அறிக்கைகளின் நிலைமை | 1.7.1 | 10 |
| ஏற்கப்பட்ட இனங்களில் வருவாய் மீட்பு | 1.7.2 | 10 |
| தணிக்கையை திட்டமிடுதல் | 1.8 | 11 |
| தணிக்கையின் முடிவுகள் | 1.9 | 12 |
| இத்தணிக்கை அறிக்கையின் செயற்பரப்பு | 1.10 | 12 |

| விவரங்கள் | பத்தி எண் | பக்கம் எண் |
|---|---|---|
| அத்தியாயம்-II<br>சரக்குகள் மற்றும் சேவைகள் வரி | | |
| வரி நிர்வாகம் | 2.1 | 13 |
| உள் தணிக்கை | 2.2 | 13 |
| தணிக்கையின் முடிவுகள் | 2.3 | 14 |
| "சரக்குகள் மற்றும் சேவைகள் வரி திருப்புகைகளின் செயலாக்கம்" மீதான பொருள் குறித்த இணக்கத் தணிக்கை | 2.4 | 14 |
| அத்தியாயம்-III<br>முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் | | |
| வரி நிர்வாகம் | 3.1 | 35 |
| உள் தணிக்கை | 3.2 | 35 |
| தணிக்கை மேற்கொண்ட முறை மற்றும் தணிக்கையின் முடிவுகள் | 3.3 | 36 |
| பதிவுத் துறையில் "இந்திய முத்திரைச் சட்டம் 1899, பிரிவு 47-A-ன் கீழ் மதிப்பிட்டு முடிக்கப்பட்ட ஆவணங்கள்" என்ற தலைப்பில் இணக்கத் தணிக்கை | 3.4 | 37 |
| **பிற தணிக்கைக் குறிப்புகள்** | | |
| சொத்தின் குறைவான மதிப்பீட்டினால் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் குறைவாக வசூலித்தமை | 3.5 | 47 |
| சொத்தின் இருப்பிடம் பற்றிய தவறான விவரங்களை வழங்கியதன் காரணமாக சொத்தின் குறைவான மதிப்பீடு | 3.6 | 49 |
| தீர்வையை பாகப்பிரிவினை என தவறாக வகைப்பாடு செய்தமை | 3.7 | 50 |
| விற்பனை மதிப்பினை குறைவாக தெரிவித்ததன் காரணமாக முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தின் குறைந்த வசூல் | 3.8 | 51 |
| விக்கிரையம்-மற்றும்-குத்தகை ஒப்படைத்தல் ஆவணத்தை வெறும் குத்தகை ஒப்படைத்தல் ஆவணமாக வகைப்படுத்தியமை | 3.9 | 52 |

| விவரங்கள் | பத்தி எண் | பக்கம் எண் |
|---|---|---|
| **அத்தியாயம் -IV**<br>வாகனங்கள் மீதான வரி விதிப்பு | | |
| வரி நிர்வாகம் | 4.1 | 55 |
| உள் தணிக்கை | 4.2 | 55 |
| தணிக்கையின் முடிவுகள் | 4.3 | 55 |
| **தணிக்கை குறிப்புகள்** | | |
| பசுமை வரி விதிக்கப்படாமை | 4.4 | 56 |

# இணைப்புகள்


| இணைப்பு எண் | விவரங்கள் | பக்கம் எண் |
|---|---|---|
| 3.1 | சொத்தின் குறைவான மதிப்பீடு காரணமாக முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தின் குறைவான வசூல் | 59 |
| 3.2 | சொத்தின் குறைவான மதிப்பீடு காரணமாக முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தின் குறைவான வசூல் | 60 |
| 3.3 | சொத்தின் இருப்பிடத்தின் தவறான விவரங்களை வழங்கியதன் காரணமாக சொத்தின் குறைவான மதிப்பீடு | 61 |
| 3.4 | சொத்தின் இருப்பிடத்தின் தவறான விவரங்களை வழங்கியதன் காரணமாக சொத்தின் குறைவான மதிப்பீடு | 62 |
| 3.5 | தீர்வையை பரிவினை என்று தவறாக வகைப்படுத்தியமை | 63 |
| 3.6 | விற்பனை அளவைக் குறைத்து தெரிவித்ததன் காரணமாக முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தின் குறைவான வசூல் | 64 |
| 3.7 | விக்கிரையம்-மற்றும்-குத்தகை ஒப்படைத்தல் ஆவணத்தை வெறும் குத்தகை ஒப்படைத்தல்ஆவணம் என்று தவறாக வகைப்படுத்தியமை | 65 |
| 4.1 | போக்குவரத்து வாகனங்களுக்கு பசுமை வரி விதியாமை | 66 |
| 4.2 | போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கு பசுமை வரி விதியாமை | 67 |

# முகவுரை

இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் 31 மார்ச் 2021 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்த அறிக்கை, இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் பிரிவுக் கூறு 151(2)ன் படி, தமிழ்நாடு மாநில ஆளுநருக்கு சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறை மற்றும் உள்துறை (போக்குவரத்து) ஆகியவற்றின் வரவுகள் மற்றும் செலவினங்களைக் குறித்த தணிக்கையின் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகளை உள்ளடக்கியது.

2020-21 ஆம் ஆண்டின் கணக்குகளை தெரிவுத் தணிக்கை செய்தபோது அறியப்பட்ட நேர்வுகளும், முந்தைய ஆண்டுகளில் கண்டறியப்பட்டு சென்ற ஆண்டுகளின் அறிக்கைகளில் சேர்க்கப்படாத நேர்வுகளும் இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. 2020-21 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலத்தில் அறியப்பட்ட குறிப்புகளும் தகுந்த இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த தணிக்கை, இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் (கடமைகள், அதிகாரங்கள் மற்றும் பணி முறைமைகள்), 1971, சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரால் வெளியிடப்பட்டுள்ள தணிக்கை நெறிமுறைகளை சார்ந்தே தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மொழி மாற்றம் செய்யப்பட்ட இவ்வறிக்கையில் ஐயம் ஏதும் ஏற்படின், ஆங்கில அறிக்கையே அதிகாரபூர்வமானது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

# கண்ணோட்டம்

அறிக்கையின் இப்பகுதி ₹ 396.30 கோடி மதிப்பிற்கு, வரி, வட்டி, தண்டத் தொகை முதலியவற்றின் விதியாமை/குறைவான விதிப்பு குறித்த எட்டு பத்திகளை கொண்டதாகும். சில முக்கிய கண்டுபிடிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## I பொது

2020-21 ஆம் ஆண்டின் மாநில அரசின் மொத்த வருவாய் வரவினங்களான ₹ 1,74,076.30 கோடி, வரி வருவாய் ₹ 1,06,152.96 கோடி மற்றும் வரியல்லாத வருவாய் ₹ 10,421.85 கோடியை உள்ளடக்கியதாகும். இந்திய அரசின் வரி வருவாயிலிருந்து மாநிலத்தின் வரிப் பங்காக பெறப்பட்ட தொகை ₹ 24,924.51 கோடி. மானிய உதவியாகப் பெறப்பட்ட தொகை ₹ 32,576.98 கோடி. விற்பனை வரி, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி ((₹ 81,431.41 கோடி), மாநில அரசின் வரி வருவாயில் பெரும் பங்கு (77 விழுக்காடு) வகிக்கிறது. வட்டி வரவுகள், ஆதாயப் பங்குகள், ஆதாயங்கள் மற்றும் பிற வரவினங்கள் (₹ 7,836.86 கோடி) வரி அல்லாத வருவாயில் 75 விழுக்காடு வகிக்கிறது

**(பத்தி 1.1; பக்கம் 1)**

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி, முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் மற்றும் நில வருவாய் சம்மந்தமான பதிவுருக்களை 2020-21ஆம் ஆண்டில் தேர்வாய்வு செய்ததில், 1,079 இனங்களில் ₹ 675.87 கோடிக்கு குறைவான வரி மதிப்பீடுகள், குறைவாக வரி விதித்தல், வருவாய் இழப்பு மற்றும் பிற குறித்துரைகள் தெரியவந்தன.

**(பத்தி 1.9; பக்கம் 12)**

## II சரக்குகள் மற்றும் சேவைகள் வரி

“சரக்குகள் மற்றும் சேவைகள் வரி திருப்புகைகளின் செயலாக்கம்” மீதான பொருள் குறித்த இணக்கத் தணிக்கை பின்வருவனவற்றைத் வெளிப்படுததியது:

- வெளிநாட்டு பணவனுப்பல்கள் வசூலின் அளவிற்குத் திருப்புகையை கட்டுப்படுத்தவும், வழங்கப்பட்ட மானியத்தின் விகிதத்தில் ஐடிசியை அனுமதிக்காமல் இருக்கவும் சட்டத்தில் வழிமுறைகள் இல்லை.

**(பத்திகள் 2.4.3.1 மற்றும் 2.4.3.2; பக்கங்கள் 17 & 18)**

- தற்காலிக திருப்புகை மற்றும் இறுதிப் திருப்புகை அளிப்பதில் தாமதங்கள் ஏற்பட்டன.

**(பத்திகள் 2.4.4.2 மற்றும் 2.4.4.3; பக்கம் 22)**

- தகுதியான ஐடிசியை தவறாக நிர்ணயம் செய்ததன் காரணமாக ₹ 366.88 கோடி அதிகமாகத் திருப்புகை அளிக்கப்பட்டது.

**(பத்தி 2.4.4.4; பக்கம் 23)**

- பூஜ்ஜிய விற்றுமுதல் கொண்ட வரி செலுத்துநர்களுக்கு ₹ 9.87 கோடி அளவுக்கு அதிகமாகத் திருப்புகை அளிக்கப்பட்டது.

**(பத்தி 2.4.4.5; பக்கம் 26)**

- தலைகீழ் வரி கட்டமைப்பின் கீழ் வரி செலுத்துவோருக்கு ₹ 9.89 கோடி அதிகமாகத் திருப்புகை அளிக்கப்பட்டது.

**(பத்தி 2.4.4.6; பக்கம் 28)**

- திருப்புகைகளின் பிந்தைய தணிக்கை தாமதமாக மேற்கொள்ளப்பட்டன/நடத்தப்படாமல் இருந்தன.

**(பத்தி 2.4.5 (இ); பக்கம் 32)**

## III முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம்

பதிவுத் துறையில் “இந்திய முத்திரைச் சட்டம் 1899, பிரிவு 47-A-ன் கீழ் மதிப்பிட்டு முடிக்கப்பட்ட ஆவணங்கள்” என்ற தலைப்பில் இணைக்கத் தணிக்கை பின்வருவனவற்றைத் வெளிப்படுததியது:

- ஆவணங்களை மதிப்பிடுவதில் தாமதங்கள் மற்றும் முரண்பாடுகள் இருந்தன. 131 இனங்களில், டிஆர்ஓ (முத்திரைகள்) /எஸ்டிசி (முத்திரைகள்) சொத்துகளின் மதிப்பை இறுதி செய்ய ஒரு வருடத்திற்கும் மேலாக எடுத்துக் கொண்டனர். இருப்பினும், 107 இனங்களில், ஒரே நாளில் மதிப்பீடுகள் முடிக்கப்பட்டன.

**(பத்தி 3.4.2.1; பக்கம் 40)**

- மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோர்களால் மதிப்பிடப்பட்ட நிலங்களின் தன்மை, பதிவு செய்யும் அதிகாரியால் குறிப்பிடப்பட்ட நிலங்களின் தன்மையிலிருந்து வேறுபட்டது. இது சொத்துக்களை குறைவான மதிப்பீட்டிற்கு வழிவகுக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியது.

**(பத்தி 3.4.2.2; பக்கம் 41)**

சார் பதிவாளர் அலுவலகங்களின் தணிக்கை பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

- சொத்துக்களைக் குறைத்து மதிப்பிட்டதால், முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தின் வசூல் ₹ 3.53 கோடி குறைந்திருந்தது.

**(பத்தி 3.5; பக்கம் 47)**

## IV வாகனங்கள் மீதான வரி விதிப்பு

வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களின் தணிக்கையில் கீழ்க்கண்டவை கண்டறியப்பட்டன

- போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கு ₹ 4 கோடி பசுமை வரி விதிக்கப்படவில்லை.

**(பத்தி 4.4; பக்கம் 56)**

# அத்தியாயம் -I

## பொது

# அத்தியாயம்-I

## பொது

### 1.1 வருவாய் வரவுகளின் நிலை

**1.1.1** 2020-21ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு, வரி மற்றும் வரியல்லாத வரவினங்கள் மூலம் ஈட்டிய வருவாய், மத்திய அரசிடமிருந்து பகிர்ந்தளிக்கப்படும் மாநில அரசின் நிகர வரி, தீர்வைப் பங்கு மற்றும் மானிய உதவி மூலமாக பெற்ற வருவாய் ஆகியவற்றின் விவரங்கள் முந்தைய நான்கு ஆண்டுகளுக்கான விவரங்களுடன் **அட்டவணை 1.1**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.1 - வருவாய் வரவுகளின் நிலை**

**(₹ கோடியில்)**

| வ எண் | விவரங்கள் | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 |
|---|---|---|---|---|---|---|
| 1 | **மாநில அரசினால் ஈட்டப்பட்ட வருவாய்** | | | | | |
| | • வரி வருவாய் | 85,941.40 | 93,736.60 | 1,05,549.90 | 1,07,462.28 | 1,06,152.96 |
| | • வரியல்லாத வருவாய் | 9, 913.76 | 10,764.01 | 14,200.02 | 12,887.84 | 10,421.85 |
| | *மொத்தம்* | *95,855.16* | *1,04,500.61* | *1,19,749.92* | *1,20,350.12* | *1,16,574.81* |
| 2 | **இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட வருவாய்** | | | | | |
| | • மத்திய அரசின் வரி வருவாயில் மாநிலத்தின் பங்கு | 24,537.77 | 27,099.71 | 30,623.03 | 26,392.41 | 24,924.51[1] |
| | • மானிய உதவி | 19,838.20 | 14,679.44 | 23,368.21 | 27,783.37 | 32,576.98 |
| | மொத்தம் | 44,375.97 | 41,779.15 | 53,991.24 | 54,175.78 | 57,501.49 |
| 3 | மாநில அரசின் மொத்த வருவாய் (1 + 2) | 1,40,231.13 | 1,46,279.76 | 1,73,741.16 | 1,74,525.90 | 1,74,076.30 |
| 4 | 3ல் 1ன் விழுக்காடு | 68 | 71 | 69 | 69 | 67 |

(ஆதாரம்: தமிழக அரசின் நிதிக்கணக்கு)

2020-21ஆம் ஆண்டில், மாநில அரசு ஈட்டிய வருவாய், (₹ 1,16,574.81 கோடி) மொத்த வருவாயில் 67 விழுக்காடாக இருந்தது. 2020-21ஆம் ஆண்டு வருவாயின் மீதமுள்ள 33 விழுக்காடு (₹ 57,501.49 கோடி) மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டது.

**1.1.2** 2016-17 முதல் 2020-21 வரையிலான ஆண்டுகளில், வரியினங்கள் மூலம் ஈட்டப்பட்ட வருவாய், பின்வரும் **அட்டவணை 1.2**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

[1] விவரங்களுக்கு அறிக்கை எண் 14 - தமிழக அரசின் 2020-21ஆம் ஆண்டிற்கான நிதிக்கணக்கின் குறுந்தலைப்பின் கீழுள்ள விரிவான வருவாய் அறிக்கைகளை பார்க்கவும். நிதிக் கணக்குகளில் 'A - வரி வருவாயில்' பல்வேறு தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட 'மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் நிகர வருவாய் பங்கு', மாநிலத்தில் ஈட்டப்பட்ட வருவாயிலிருந்து நீக்கப்பட்டு, இந்த அறிக்கையில் 'மைய அரசின் வருவாயிலிருந்து பெறப்பட்ட மாநில அரசின் பங்கில்' சேர்க்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.2: ஈட்டப்பட்ட வரி வருவாய் விவரங்கள்**

(₹ கோடியில்)

| வ எ ண் | வருவாய் தலைப்புகள் | 2016-17 | | 2017-18 | | 2018-19 | | 2019-20 | | 2020-21 | | 2019-20 ஆண்டை விட 2020-21ல் உயர்வு (+) அல்லது குறைவின் (-) விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு | வரவு | மதிப்பீடு | வரவு | மதிப்பீடு | வரவு | மதிப்பீடு | வரவு | மதிப்பீடு | வரவு | |
| 1 | மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி | - | - | | 24,589.31 | 29,748.45 | 38,533.09 | 48,157.40 | 38,376.19 | 46,195.55 | 37,942.10 | (-) 1.13 |
| 2. | விற்பனை, வர்த்தகம் மீதான வரிகள் | 64,835.04 | 63,233.58 | 73,959.25 | 46,356.15 | 44,427.04 | 42,701.07 | 48,033.65 | 44,515.44 | 56,046.29 | 43,489.31 | (-) 2.31 |
| 3. | மாநில ஆயத் தீர்வை | 6,636.08 | 6,248.16 | 6,902.91 | 5,815.30 | 6,997.83 | 6,863.12 | 7,262.32 | 7,205.97 | 8,133.80 | 7,821.66 | (+) 8.54 |
| 4. | முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் | 9,858.17 | 7,236.65 | 8,219.52 | 9,194.63 | 10,935.67 | 11,066.18 | 13,122.81 | 10,855.65 | 14,435.09 | 11,675.04 | (+) 7.55 |
| 5. | வாகனங்கள் மீதான வரி | 4,793.91 | 4,854.29 | 5,418.03 | 5,362.63 | 6,211.75 | 5,572.80 | 6,510.70 | 5,674.64 | 6,897.73 | 4,561.17 | (-) 19.62 |
| 6. | நில வருவாய் | 315.27 | 153.40 | 354.46 | 152.30 | 282.39 | 177.99 | 357.29 | 258.30 | 328.39 | 211.19 | (-) 18.24 |
| 7. | வேளாண்மை நிலங்கள் தவிர்த்து அசையா சொத்துக்கள் மீதான வரி (நகர்ப்புற நில வரி) | 18.09 | 10.20 | 18.09 | 8.36 | 13.00 | 10.34 | 13.65 | 8.83 | 13.65 | 8.16 | (-) 7.59 |
| 8. | மற்ற வரவுகள்[2] | 4,235.30 | 4,205.12 | 4,717.87 | 2,257.92 | 1,378.38 | 625.31 | 1,355.24 | 567.26 | 1,479.80 | 444.33 | (-) 21.67 |
| | மொத்தம் | **90,691.86** | **85,941.40** | **99,590.13** | **93,736.60** | **99,994.51** | **1,05,549.90** | **1,24,813.06** | **1,07,462.28** | **133,530.30** | **1,06,152.96** | |

(ஆதாரம்: தமிழக அரசின் நிதிக்கணக்கு)

2020-21 ஆண்டின் மாநில மொத்த வருவாயில் (₹ 1,74,076.30 கோடி) வரி வருவாய் (₹ 1,06,152.96 கோடி) 60.98 விழுக்காடாக இருந்தது. 2020-21ஆம் ஆண்டில் மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி ( 1.13 விழுக்காடு), விற்பனை, வர்த்தகம் மீதான வரிகள் (2.31 விழுக்காடு), வாகன வரிகள் (19.62 விழுக்காடு) மற்றும் நில வருவாய் (18.24 விழுக்காடு), வேளாண்மை நிலமல்லாது மற்ற அசையா சொத்து வரி-நகர்ப்புற நில வரி (7.59 விழுக்காடு) மற்றும் ஏனையவை (21.67 விழுக்காடு) ஆகியவற்றின் வசூல் குறைந்த காரணத்தால், மாநிலத்தின் வருவாய் (₹ 1,06,152.96 கோடி) முந்தைய ஆண்டு வருவாயை (₹ 1,07,462.28 கோடி) விட ₹ 1,309.32 கோடி (1.22 விழுக்காடு) குறைந்தது.

(i) மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (ii) கட்டணம் மற்றும் (iii) கோவிட்-19 பெருந்தொற்றின் முதல் அலையின் எதிரிடை விளைவுகளினால், உள்ளீட்டு வரி வரவானது, மாநில மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகளிடையே குறுக்குப் பரிமாற்றம் செய்யப்பட்டதாலும் உண்டான குறைந்த வரவினால், மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி வரவு குறைந்தது. மதுபானம் மற்றும் பெட்ரோலியம் பொருட்களின் விற்பனை சரிந்ததினால் விற்பனை மற்றும் வர்த்தக வரி வரவு குறைந்தது. கோவிட்-19 பெருந்தொற்றினைக் கட்டுப்படுத்த ஊரடங்கு அறிவிக்கப்பட்டதால் மத்திய வணிக வரி வரவு குறைவு ஏற்பட்டது. இந்திய மோட்டார் வாகன வரி சட்டம் மற்றும் மாநில மோட்டார் வாகன வரியமைப்புச்சட்டம் ஆகியவை மூலம் வசூலிக்கப்பட்ட தொகை குறைந்ததால் வாகன வரி வரவு குறைந்தது. "தரிசு நில விற்பனை மற்றும் நில வரி" குறைந்ததால் நில வருவாய் குறைந்தது.

அயல் நாட்டு மதுபான வகைகள் மீது வரி வருவாய் அதிகரித்ததே மாநில ஆயத் தீர்வை உயர்விற்கு காரணம் ஆகும். (i) முத்திரைத்தாள் விற்பனை (ii) முத்திரை

---

[2] 'மற்ற வரவுகள்' என்பது (i) வேளாண்மை வருவாய், (ii) சரக்குகள் மற்றும் பயணிகள், (iii) மின்சாரம் மற்றும் (iv) பண்டங்கள் மற்றும் பணிகள் தலைப்புகளின் கீழ் பெறப்பட்ட வரி வரவுகளை உள்ளடக்கியவை ஆகும்.

பொறிக்கப்பட்ட ஆவணங்களின் மீதான தீர்வைமற்றும் (iii) ஆவண பதிவுக் கட்டணம் ஆகியவை மூலம் வரவு அதிகரித்ததால் முத்திரைத்தாள் மற்றும் பதிவுக்கட்டண வரவு அதிகரித்தது.

**1.1.3** 2016-17 முதல் 2020-21 வரையிலான ஆண்டுகளில் வரியல்லாத இனங்களின் மூலம் ஈட்டப்பட்ட வருவாய் **அட்டவணை 1.3-ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.3 - ஈட்டப்பட்ட வரியல்லாத வருவாய் விவரங்கள்**

**(₹ கோடியில்)**

| வ எண் | வருவாய் தலைப்புகள் | 2016-17 | | 2017-18 | | 2018-19 | | 2019-20 | | 2020-21 | | 2019-20 ஆண்டை விட 2020-21ல் உயர்வு (+) அல்லது குறைவின் (-) விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு | வரவு | மதிப்பீடு | வரவு | மதிப்பீடு | வரவு | மதிப்பீடு | வரவு | மதிப்பீடு | வரவு | |
| 1 | வட்டி வரவுகள், ஆதாயப் பங்குகளும், ஆதாயங்களும் | 2,874.85 | 4,503.90 | 3,816.36 | 5,357.15 | 4,086.26 | 7,031.19 | 4,631.01 | 4,547.74 | 5,596.49 | 3,729.44 | (-) 17.99 |
| 2 | பயிர் வளர்ப்பு | 128.46 | 56.94 | 123.40 | 76.47 | 59.82 | 185.06 | 62.16 | 53.12 | 76.27 | 75.42 | (+) 41.98 |
| 3 | காடு வளர்ப்பும் வன விலங்கும் | 158.59 | 34.22 | 161.72 | 57.51 | 103.07 | 145.46 | 48.63 | 83.38 | 83.69 | 94.70 | (+) 13.58 |
| 4 | இரும்பு அல்லாத கனிமங்களை அகழ்ந்தெடுத்தல் மற்றும் உலோகவியல் தொழில்கள் | 1,180.99 | 983.90 | 1,186.10 | 1,146.11 | 1,452.27 | 1,057.45 | 1,987.50 | 1,150.12 | 2,222.35 | 765.24 | (-) 33.46 |
| 5 | கல்வி, விளையாட்டு, கலை மற்றும் பண்பாடு | 2,404.56 | 1,195.23 | 1,606.50 | 1,153.45 | 1,448.99 | 1,592.36 | 1,264.59 | 1,792.96 | 1,919.96 | 1,649.63 | (-) 7.99 |
| 6 | மற்ற வரவுகள்[3] | 2,976.50 | 3,139.57 | 5,423.92 | 2,973.32 | 4,150.70 | 4,188.50 | 5,333.01 | 5,260.52 | 6,000.05 | 4,107.42 | (-) 21.92 |
| | **மொத்தம்** | **9,723.95** | **9,913.76** | **12,318.00** | **10,764.01** | **11,301.11** | **14,200.02** | **13,326.90** | **12,887.84** | **15,898.81** | **10,421.85** | |

(ஆதாரம்: தமிழக அரசின் நிதிக்கணக்கு)

2020-21 ஆண்டின் மாநில மொத்த வருவாயில் (₹ 1,74,076.30 கோடி) வரியல்லாத வருவாய் (₹ 10,421.85 கோடி) 5.99 விழுக்காடாக இருந்தது. 2020-21ஆம் ஆண்டில் வட்டி வரவுகள், ஆதாயப் பங்குகள், இலாபங்கள் (17.99 விழுக்காடு), இரும்பு அல்லாத கனிமங்களை அகழ்ந்தெடுத்தல் மற்றும் உலோகவியல் தொழில்கள் (33.46 விழுக்காடு), கல்வி, விளையாட்டு, கலை மற்றும் பண்பாடு (7.99 விழுக்காடு), மற்ற வரவுகள் (21.92 விழுக்காடு) ஆகிய தலைப்புகளின் கீழ் வசூல் குறைந்ததே, மாநிலத்தின் வருவாய் முந்தைய ஆண்டு வருவாயைவிட (₹ 12,887.84 கோடி) ₹ 2,465.99 கோடி (19.13 விழுக்காடு) குறைவுக்கு காரணமாகும்.

பொதுத் துறை நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட குறைந்த ஆதாயம் மற்றும் பண இருப்பை முதலீடு செய்ததில் கிடைக்கப்பெற்ற குறைந்த வட்டி ஆகிய காரணங்களே வட்டி வரவுகள், ஆதாயப் பங்குகள், இலாபங்கள் தலைப்பில் வருவாய் குறைவுக்கு காரணமாகும். கனிம சலுகை கட்டணம், குத்தகை மற்றும் உரிமத்தொகைகள் குறைவு வசூல் காரணத்தினால் இரும்பு அல்லாத கனிமங்களை அகழ்ந்தெடுத்தல் மற்றும் உலோகவியல் தொழில்கள் மற்றும் இதர இனங்கள் மூலம் கிடைக்கும் வருவாய் குறைந்திருந்தது. தொழில் நுட்பக் கல்வி, உயர்நிலை கல்வி மற்றும் சேவை மூலம் வரவு மற்றும் சேவைக் கட்டணங்கள் குறைந்த

[3] 'மற்ற வரவுகள்' என்பது (i) காவல்; (ii) இதர பொது சேவைகள்; (iii) மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம்; மற்றும் (iv) நகர்புற வளர்ச்சி மற்றும் ஏனைய தலைப்பின் கீழ் பெறப்பட்ட வரி அல்லாத வரவுகளை உள்ளடக்கியவை ஆகும்.

காரணத்தினால், கல்வி, விளையாட்டு, கலை மற்றும் பண்பாடு தொடர்பான வரவு குறைந்தது.

(i) உர விற்பனை மூலம் வரவு (ii) தாவர பாதுகாப்பு மற்றும் (iii) வணிக பயிர்கள் மூலம் வரவுகள் உயர்ந்த காரணத்தினால் பயிர் வளர்ப்பின் கீழ் வரவு அதிகரித்தது. (i) பிற வரவுகள் மற்றும் (ii) "சுற்றுச் சூழல் சார்ந்த காடு வளர்ப்பும் வன விலங்குகளும்" தலைப்பில் அதிக வருவாய் ஈட்டியதால் காடு வளர்ப்பும் வன விலங்கும் தலைப்பின் கீழ் வருவாய் உயர்ந்தது.

## 1.2 வருவாய் நிலுவையின் பகுப்பாய்வு

சில முதன்மையான வருவாய் இனங்களில், 31 மார்ச் 2021 அன்று உள்ளபடியான நிலுவைத் தொகை ₹ 38,124.75 கோடியாகும். அவற்றுள், ₹ 19,273.15 கோடி ஐந்து வருடங்களுக்கு மேலாக நிலுவையில் இருந்தது. இதன் விவரங்கள் **அட்டவணை 1.4**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.4: வருவாய் நிலுவை**

**(₹ கோடியில்)**

| வ எண் | வருவாய் தலைப்பு | 31 மார்ச் 2021 அன்று நிலுவையில் இருந்த மொத்த தொகை | 31 மார்ச் 2021 அன்று ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் இருந்த தொகை | துறையின் பதில் |
|---|---|---|---|---|
| 1 | மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி | 495.48 | 0.00 | ₹ 29.56 கோடி தொகையின் மீட்பு உயர் நீதிமன்றம் மற்றும் ஏனைய நீதித்துறை அதிகார அமைப்புகளினால் நிறுத்தி வைக்கப்பட்டது. தள்ளுபடி செய்ய உத்தேசிக்கப்பட்ட தொகை ₹ 2.69 கோடி. பல்வேறு மீட்பு நடவடிக்கைகளின் மூலம் வசூலிக்கப்பட வேண்டிய மீதமுள்ள நிலுவைத் தொகை ₹ 463.23 கோடி. |
| 2 | விற்பனை, வர்த்தகம் மீதான வரிகள் | 29,951.56 | 15,645.09 | வருவாய் மீட்புச் சான்றிதழ்கள் மூலம் வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ₹ 10,028.14கோடி. ₹ 6,678.02 கோடி தொகையின் மீட்பு உயர் நீதிமன்றம் மற்றும் ஏனைய நீதித்துறை அதிகார அமைப்புகளினால் நிறுத்தி வைக்கப்பட்டது. ₹ 112.80 கோடி தொகையின் மீட்பு அரசினால் நிறுத்தி வைக்கப்பட்டது. வணிகர்கள் நொடித்துப்போனதன் காரணத்தினால் ₹ 45.38 கோடி நிலுவையில் உள்ளது. தள்ளுபடி செய்ய உத்தேசிக்கப்பட்ட தொகை ₹ 643.28 கோடி. பல்வேறு மீட்பு நடவடிக்கைகளின் மூலம் வசூலிக்கப்பட வேண்டிய மீதமுள்ள நிலுவைத் தொகை ₹ 10,091.72 கோடி. மீதமுள்ள தற்போதய நிலுவைத் தொகை ₹ 2,352.22 கோடி |
| 3 | முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம். | 432.84 | 365.48 | ₹ 432.79கோடியின் மீட்பு, மீட்புச் சான்றிதழ்களின் மூலம் பெறப்பட வேண்டியுள்ளது. ₹ 0.05 கோடியின் மீட்பு உயர்நீதிமன்றம் மற்றும் பிற நீதித்துறை அதிகார அமைப்புகளினால் நிறுத்தி வைக்கப்பட்டது. |
| 4 | மாநில ஆயத் தீர்வை | 32.49 | 32.49 | ₹ 15.95 கோடியின் மீட்பு, மீட்புச் சான்றிதழ்களின் மூலம் பெறப்பட வேண்டியுள்ளது. ₹ 1.11 கோடியின் மீட்பு, நீதி மன்றம் மற்றும் ஏனைய நீதித்துறை அமைப்புகளினால் நிறுத்தி வைக்கப்பட்டது. வணிகர்கள் நொடித்துப் போனதன் காரணத்தினாலும், திருத்த/மறு ஆய்வு விண்ணப்பங்களினால், ₹ 0.69 கோடி நிலுவையில் உள்ளது. தள்ளுபடி செய்ய உத்தேசிக்கப்பட்ட தொகை ₹ 2.25 கோடி. பல்வேறு மீட்பு நடவடிக்கைகளின் வாயிலாக வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ₹ 12.49 கோடி. |

(₹ கோடியில்)

| வ எண் | வருவாய் தலைப்பு | 31 மார்ச் 2021 அன்று நிலுவையில் இருந்த மொத்த தொகை | 31 மார்ச் 2021 அன்று ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் இருந்த தொகை | துறையின் பதில் |
|---|---|---|---|---|
| 5 | வாகனங்கள் மீதான வரி | 0.33 | 0.00 | ₹ 0.19கோடியின் வசூல் உயர்நீதிமன்றம் மற்றும் ஏனைய நீதித்துறை அமைப்புகளினால் நிறுத்தி வைக்கப்பட்டது. பல்வேறு மீட்பு நடவடிக்கைகளின் வாயிலாக வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ₹ 0.14 கோடி |
| 6 | மின்சார வரி | 620.96 | 455.18 | வருவாய் மீட்புச் சான்றிதழ் வழங்குவதன் மூலம் ₹ 169.59 கோடி வசூலிக்கப்படுகிறது. ₹ 370.26 கோடியின் மீட்பு உயர் நீதிமன்றம் மற்றும் ஏனைய நீதித்துறை அதிகார அமைப்புகளினால் நிறுத்தி வைக்கப்பட்டது. ₹ 19.23 கோடி மீட்பு அரசினால் நிறுத்தி வைக்கப்பட்டது. வணிகர்கள் நொடித்துப் போனதன் காரணமாக வசூலிக்க இயலாத தொகை ₹ 4.68 கோடி. பல்வேறு மீட்பு நடவடிக்கைகளின் வாயிலாக பெறப்பட வேண்டிய மீதமுள்ள நிலுவைத் தொகை ₹ 57.20 கோடி. |
| 7 | நகர்ப்புற நில வரி | 199.58 | 91.80 | ₹ 17.09கோடியின் மீட்பு உயர் நீதிமன்றம் மற்றும் ஏனைய நீதித்துறை அதிகார அமைப்புகளினால் நிறுத்தி வைக்கப்பட்டது. ₹ 3.75 கோடியின் மீட்பு அரசினால் நிறுத்தி வைக்கப்பட்டது. பல்வேறு மீட்பு நடவடிக்கைகளின் வாயிலாக பெறப்பட வேண்டிய மீதமுள்ள நிலுவைத் தொகை ₹ 178.74 கோடி. |
| 8 | இரும்பு அல்லாத கனிமங்களை அகழ்ந்தெடுத்தல் மற்றும் உலோகவியல் தொழில்கள் | 6,391.51 | 2,683.11 | வருவாய் மீட்புச் சான்றிதழ் வழங்குவதன் மூலம் ₹ 277.00 கோடி வசூலிக்கப்படுகிறது. ₹ 3,604.04 கோடியின் மீட்பு உயர் நீதிமன்றம் மற்றும் ஏனைய நீதித்துறை அதிகார அமைப்புகளினால் நிறுத்தி வைக்கப்பட்டது. ₹ 58.52 கோடியின் மீட்பு அரசினால் நிறுத்தி வைக்கப்பட்டது. ₹ 5.62 கோடி தொகை திருத்த/ மறு ஆய்வு மனுக்களின் பேரில் நிலுவையில் உள்ளது. பல்வேறு மீட்பு நடவடிக்கைகளின் வாயிலாக பெறப்பட வேண்டிய மீதமுள்ள நிலுவைத் தொகை ₹ 2,446.33 கோடி. |
| | மொத்தம் | **38,124.75** | **19,273.15** | |

(ஆதாரம்: சம்பந்தப்பட்ட துறை அளித்த விவரங்கள்)

31 மார்ச் 2021ன் படி வசூலிக்கப்படாமல் நிலுவையிலிருந்த தொகை, 2020-21ஆம் ஆண்டில் அரசினால் ஈட்டப்பட்ட மொத்த வருவாயில் 31 விழுக்காடு ஆகும் என்பதை **அட்டவணை 1.4** சுட்டிக்காட்டுகிறது. 2020-21 ஆம் ஆண்டின் ஈட்டப்படாத வரவான ₹ 38,124.75 கோடித் தொகையானது 2019-20ஆம் ஆண்டின் தொகையான ₹ 30,908.32 கோடியை விட 23 விழுக்காடு அதிகம் ஆகும். அரசு நிலுவைத்தொகையை விரைந்து வசூல் செய்ய ஆணையிடுவதோடு வசூல் திறம்பட செய்யத் தேவையான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

## 1.3 வரி மதிப்பீட்டில் நிலுவைகள்

மத்திய விற்பனை வரி மற்றும் வணிகவரித் துறையில் நிலுவையில் உள்ள பிறவரிகள் தொடர்பான மதிப்பீடுகளின் விவரங்கள் **அட்டவணை** 1.5ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 1.5 – மதிப்பீடுகளின் நிலுவை

| விவரம் | மத்திய வணிக வரி மற்றும் இதர மதிப்பீடுகள் |
|---|---|
| முந்தைய ஆண்டு 01-04-2020 அன்று வரை இருந்த ஆரம்ப நிலுவை | 12,270 |
| இந்த மதிப்பீட்டாண்டு 2020-21ல் மதிப்பீடு செய்யப்படவேண்டிய இனங்கள் | இல்லை |
| மொத்தம் | 12,270 |
| 2020-21 ஆம் ஆண்டு முடிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 11,294 |
| ஆண்டு முடிவில் 31-03-2021 அன்று மதிப்பீடுகளின் இறுதி நிலுவை | 976 |

(ஆதாரம்: சம்பந்தப்பட்ட துறை அளித்த விவரங்கள்)

1 ஜூலை 2017 முதல் புதிய வரி விதிப்பு (மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி) நடைமுறைக்கு வந்துவிட்டதால், நிலுவையிலுள்ள மதிப்பீடுகளை விரைந்து முடிக்க துறைக்கு அரசு அறிவுறுத்த வேண்டும்.

## 1.4 துறையினால் கண்டுபிடிக்கப்பட்ட வரி ஏய்ப்பு

வணிக வரித் துறையினால் கண்டுபிடிக்கப்பட்ட மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மற்றும் ஏனைய வரி ஏய்ப்பு நிகழ்வுகள் மற்றும் உள்துறை (போக்குவரத்து) துறையினால் கண்டுபிடிக்கப்பட்ட வாகனங்கள் மீதான வரி ஏய்ப்பு நிகழ்வுகள், அவற்றுள் இறுதி செய்யப்பட்டவை, அதன் காரணமாக எழுப்பப்பட்ட கூடுதல் கேட்புத்தொகை குறித்து துறைகளினால் தெரிவிக்கப்பட்ட விவரங்கள், **அட்டவணை 1.6**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 1.6 - வரி ஏய்ப்பு

| வ. எண் | வருவாய் தலைப்பு | 31 மார்ச் 2020 அன்று நிலுவையில் இருந்த இனங்கள் | 2020-21ல் கண்டு பிடிக்கப்பட்ட இனங்கள் | மொத்தம் | வரி மதிப்பீடு/விசாரணை முடிக்கப்பட்ட இனங்கள் மற்றும் அதன் காரணமாக எழுப்பப்பட்ட கூடுதல் கேட்பு/தண்டத்தொகை | | 31 மார்ச் 2021 அன்று நிலுவையில் இருந்த இனங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | இனங்களின் எண்ணிக்கை | கேட்புத் தொகை (₹ கோடியில்) | |
| 1 | மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி | 127 | 3,597 | 3,724 | 3,618 | 1,268.13 | 106 |
| 2 | விற்பனை, வணிகம் போன்றவை (மதிப்பு கூட்டுவரி) | 2,648 | 0 | 2,648 | 797 | 3,064.46 | 1,851 |
| 3. | வாகனங்கள் மீதான வரி | 0 | 8 | 8 | 8 | 0.06 | 0 |

(ஆதாரம்: சம்பந்தப்பட்ட துறைகள் அளித்த விவரங்கள்)

மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரியில் 94 விழுக்காடு வரி ஏய்ப்பு இனங்களை வணிக வரித்துறை இறுதி செய்துள்ளது. ஆனால், விற்பனை மற்றும் வணிக வரியில் துறையானது 30 விழுக்காடு வரி ஏய்ப்பு இனங்களை மட்டுமேஇறுதி செய்துள்ளது. துரிதமாக முடிக்க வணிக வரித் துறையை அரசாங்கம் வலியுறுத்திகிறது.

## 1.5 திருப்புகை இனங்களில் நிலுவை

வணிக வரித்துறை (மதிப்புக் கூட்டு வரி மற்றும் மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி), உள் (மாநில ஆயத் தீர்வை) மற்றும் உள் (போக்குவரத்து)

துறைகளில் 2020-21ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நிலுவையில் இருந்த இனங்கள், ஆண்டில் பெறப்பட்ட கோரிக்கைகள், ஆண்டில் திருப்புகை இனங்கள், 2020-21ஆம் ஆண்டின் இறுதியில் நிலுவை ஆகியவை பற்றிய துறைகளினால் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் **அட்டவணை 1.7**ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.7 - திருப்புகை இனங்களின் நிலுவை குறித்த விவரங்கள்**

**(₹ கோடியில்)**

| வ. எ ண் | விவரங்கள் | மதிப்புக் கூட்டு வரி | | மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி | | மாநில ஆயத் தீர்வை | | வாகனங்கள் மீதான வரி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | இனங்களின் எண்ணிக்கை | தொகை | இனங்களின் எண்ணிக்கை | தொகை | இனங்களின் எண்ணிக்கை | தொகை | இனங்களின் எண்ணிக்கை | தொகை |
| 1 | ஆண்டின் ஆரம்பத்தில் நிலுவையில் இருந்த கோரிக்கைகள் | 443 | 28.65 | 644 | 73.01 | 1 | 0.01 | 22 | 0.09 |
| 2 | ஆண்டில் பெறப்பட்டவை | 5,464 | 188.78 | 25,571 | 3,357.22 | 0 | 0.00 | 173 | 1.39 |
| 3 | மொத்தம் (1+2) | 5,907 | 217.43 | 26,215 | 3,430.23 | 1 | 0.01 | 195 | 1.48 |
| 4. | ஆண்டில் திருப்பிக் கொடுக்கப் பட்டவைகள் (மறுக்கப்பட்ட இனங்கள் உட்பட) | 1,239 | 126.06 | 25,964 | 3,404.08 | 0 | 0.00 | 195 | 1.48 |
| 5 | ஆண்டின் இறுதியில் நிலுவையிலிருந்த இனங்கள் | 4,668 | 91.37 | 251 | 26.15 | 1 | 0.01 | 0 | 0.00 |

(ஆதாரம்: சம்பந்தப்பட்ட துறைகளின் பதிலுரைகள்)

தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரி மற்றும் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டங்களில் தாமதமாக அளிக்கப்படும் திருப்புகைகளுக்கு வட்டி அளிக்கப்பட வேண்டுமென்பதால், திருப்புகை கோரிக்கைகளை, துறை, விரைந்து முடித்தல் வேண்டும்.

## 1.6 தணிக்கைக்கு துறைகள் மற்றும் அரசின் மறுமொழி

வணிக நடவடிக்கைகளை தேர்வாய்வு செய்வதற்கும் முக்கியமான கணக்கு வழக்குகள் மற்றும் பதிவேடுகள் விதிமுறைகளுக்கேற்ப பராமரிக்கப்படுகிறதா என்பதை சரிபார்ப்பதற்கும், தேவையான கால அளவிலான ஆய்வுகளை அரசுத் துறைகளில் நடத்துவதற்கான ஏற்பாட்டை தமிழ்நாடு முதன்மை கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-I) மேற்கொண்டு வருகிறார். தணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டு, உடனுக்குடன் தீர்வு செய்யப்படாத முறைகேடுகள், அலுவலகத் தலைமை அதிகாரிக்கும் இதர துறை அதிகாரிகளுக்கும், சரியான தீர்வு நடவடிக்கை எடுப்பதற்காக ஆய்வு அறிக்கைகள் மூலம் தெரியப்படுத்தப்படுகின்றன. ஆய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தவறுகள் மற்றும் விடுபடல்களை சரி செய்து ஆய்வு அறிக்கை அனுப்பப்பட்ட ஒரு மாதத்திற்குள் அலுவலகத் தலைவர்கள் /அரசு, மாநில கணக்காய்வுத் தலைவருக்கு பதிலுரைஅனுப்ப வேண்டும். முக்கிய நிதி முறைகேடுகள், துறைத் தலைவர்கள் மற்றும் அரசுக்கு தெரிவிக்கப்படுகின்றன.

31 டிசம்பர் 2020 வரை அனுப்பப்பட்ட ஆய்வு அறிக்கைகளை ஆராய்ந்ததில், ஜூன் 2021 இறுதியில், 5,543 ஆய்வு அறிக்கைகளில், ₹ 5,485.67 கோடி தொகைக்கு இடம்பெற்றிருந்த 31,264 பத்திகள் தீர்க்கப்படாமல் நிலுவையில் இருந்தன என்பது கண்டறியப்பட்டது. அவை, முந்தைய இரண்டு ஆண்டுகளுக்கான விவரங்களுடன் **அட்டவணை 1.8**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை **1.8:** நிலுவையில் உள்ள ஆய்வு அறிக்கைகளின் விவரங்கள்

| விவரங்கள் | ஜுன் 2019 | ஜுன் 2020 | ஜுன் 2021 |
|---|---|---|---|
| நிலுவையிலுள்ள ஆய்வறிக்கைகளின் எண்ணிக்கை | 5,784 | 5,978 | 5,543 |
| தீர்க்கப்படாத தணிக்கை குறிப்புகளின் எண்ணிக்கை | 32,600 | 35,462 | 31,264 |
| உள்ளடக்கப்பட்ட தொகை (₹ கோடியில்) | 6,225.78 | 6,654.05 | 5,485.67 |

(ஆதாரம்: தமிழ்நாட்டின் முதன்மைக் கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-I) மற்றும் கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-II)அலுவலகங்களில் பேணப்படும் தரவுகளின்படி)

### 1.6.1 துறை வாரியாக, நிலுவையில் இருந்த ஆய்வு அறிக்கைகள் மற்றும் தணிக்கை குறிப்புகள்

30 ஜுன் 2021 அன்றுள்ளபடியான, 31 டிசம்பர் 2020 வரை அனுப்பப்பட்ட ஆய்வு அறிக்கைகள், தணிக்கை குறிப்புகள் மற்றும் அவை உள்ளடக்கிய தொகைகளின் விவரங்கள் துறை வாரியாக **அட்டவணை 1.9**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 1.9 –துறைவாரியான ஆய்வறிக்கைகளின் விவரங்கள்

**(₹ கோடியில்)**

| வ. எ ண் | துறையின் பெயர் | வரவினங்களின் தன்மை | நிலுவையில் உள்ளஆய்வு அறிக்கைகள் | நிலுவையில் உள்ள தணிக்கை குறிப்புகள் | உள்ளடக்கப்-பட்ட தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | வணிக வரி மற்றும் பதிவு | மதிப்புக் கூட்டு வரிமற்றும் பிற வரிகள் | 1,761 | 18,932 | 3,362.56 |
| | | முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் | 1,712 | 5,749 | 759.17 |
| 2. | வருவாய் | நில வருவாய் | 933 | 3,751 | 148.92 |
| | | நகர்ப்புற நில வரி | 114 | 224 | 15.67 |
| 3. | உள் (போக்கு-வரத்து) | வாகனங்கள் மீதான வரி | 401 | 1,091 | 51.59 |
| 4. | உள் (மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை) | மாநில ஆயத் தீர்வை | 227 | 489 | 653.50 |
| 5. | தொழில் | சுரங்கம் மற்றும் கனிமங்கள் | 228 | 583 | 232.35 |
| 6. | எரிசக்தி | மின்சார வரி | 102 | 214 | 261.91 |
| 7. | நிதி | நிதி மற்றும் திட்டமிடல் | 65 | 231 | 0.00 |
| | மொத்தம் | | **5,543** | **31,264** | **5,485.67** |

(ஆதாரம்: தமிழ்நாட்டின்முதன்மைக் கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-I) மற்றும் கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-II)அலுவலகங்களில் பேணப்படும் தரவுகளின்படி).

பதிலுரைகள் வரப்பெறாததால், தீர்க்கப்படாமல் நிலுவையில் உள்ள ஆய்வு அறிக்கைகளின் மிகுதியான போக்கு, கணக்காய்வுத் தலைவரின் ஆய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட முறைகேடுகள் மற்றும் தவறுகளை நிவர்த்தி செய்ய துறைத் தலைவர்கள் மற்றும் அலுவலகத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகிறது. தணிக்கைக் குறிப்புகளுக்கு விரைந்து பதிலளிக்கவும் நிலுவையிலுள்ள பத்திகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கவும் துறைகளுக்கு அரசு அறிவுறுத்த வேண்டும்.

### 1.6.2 துறை சார்ந்த தணிக்கைக்குழு கூட்டங்கள்

ஆய்வறிக்கைகளில் தீர்க்கப்படாமல் நிலுவையில் உள்ள தணிக்கைப் பத்திகளை விரைந்து முடிக்கத் தேவையான துறை சார்ந்த தணிக்கை குழுக்கள் (பல்வேறு காலத்தில்)அரசால் அமைக்கப்பட்டுள்ளன. இந்த துறை சார்ந்த தணிக்கை குழு கூட்டங்களில், நிலுவை இனங்களை விவாதித்த பின் துரிதமான நடவரிக்கைகளை மேற்கொண்டு நிலுவையில் இருக்கும் தணிக்கை பத்திகளை முடிவுக்கு கொண்டுவரும்படி துறைத் தலைவர்களுக்கு துறை செயலர்கள் உத்தரவிடுவார்கள். கோவிட்-19 பெருந்தொற்று காலமாதலால் 2020-21 ஆம் ஆண்டு துறை சார்ந்த தணிக்கைகுழு கூட்டங்கள் நடைபெறவில்லை. நிலுவையில் இருக்கும் தணிக்கை பத்திகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அனைத்து துறைகளும் அவ்வப்போது கூட்டங்கள் நடத்த அரசு அறிவுறுத்தும் படி பரிந்துரைக்கப்படுகிறது.

### 1.6.3 வரைவு தணிக்கை பத்திகளுக்கு துறைகளின் மறுமொழி

இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் சேர்ப்பதற்காக உத்தேசிக்கப்படும் வரைவுத் தணிக்கைப் பத்திகள், சம்பந்தப்பட்ட துறைகளின் முதன்மை செயலாளர்களுக்கு மாநில முதன்மை கணக்காய்வுத் தலைவரால், தணிக்கை கண்டுபிடிப்புகளின் மீது அவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக, அனுப்பப்பட்டு ஆறு வாரங்களுக்குள் அவர்களது பதிலை அனுப்புமாறு வேண்டப்படுகிறது. துறைகளிடமிருந்து பதில் பெறப்படாத விவரம், தணிக்கை அறிக்கையில் சேர்க்கப்பட்ட ஒவ்வொரு பத்தியின் இறுதியிலும் சுட்டிக்காட்டப்படுகிறது.

மார்ச் 2021 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் சேர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட எட்டு வரைவுத் தணிக்கைப் பத்திகள், வணிக வரி மற்றும் பதிவுத் துறை மற்றும் உள் (போக்குவரத்து) துறை செயலர்களால் ஜனவரி மற்றும் மே 2022க்கு இடைப்பட்ட காலத்தில் அனுப்பப்பட்டன. அரசு ஆறு இனங்களில் மட்டுமே தெளிவுரை அளித்தது. இரண்டு இனங்களில் தெளிவுரை அளிக்கப்படாதலால், இந்த பத்திகள், துறை பதிலுரை மற்றும் நிறைவுக் கூட்டத்தில் அரசின் பொது பதிலுரை ஆகியவை உள்ளடக்கப்பட்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

### 1.6.4 தணிக்கை அறிக்கைகள் மீதான தொடர் நடவடிக்கை

இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கை துறைத் தலைவரின் அறிக்கையில் இடம்பெற்றுள்ள எல்லா பத்திகள் குறித்தும் செயலாக்கத் துறையின் பொறுப்பினை உறுதி செய்யும் பொருட்டு, சட்டப் பேரவையில் அறிக்கை சமர்பிக்கப்பட்டவுடன், துறைகள் தணிக்கை பத்திகள் மீதான நடவடிக்கை எடுத்து, குழுவிற்கு விளக்கக் குறிப்புகளை இரண்டு மாதங்களுக்குள் அனுப்ப வேண்டும் என்று பொது கணக்குக் குழு 1997ல் அறிவுறுத்தியிருந்தது. எனினும், அறிக்கைகளில் இடம்பெற்றுள்ள தணிக்கை பத்திகள் மீதான விளக்கக் குறிப்புகளை சமர்ப்பிப்பதில் அளவு கடந்த காலதாமதம் ஏற்படுகிறது. மார்ச் 2019 வரையிலான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கைகளில் இடம்பெற்றுள்ள 199 பத்திகள் பொது கணக்குக் குழுவால் விவாதிக்கப்படவில்லை என்பதை நாங்கள் அறிந்தோம். அவற்றுள் 111 பத்திகளுக்கான விளக்கக் குறிப்புகளை துறைகள் சமர்ப்பிக்கவில்லை. இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள பத்திகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த செயல்படுத்தும் குறிப்புகளை ஆராய்ந்ததில், 31 மார்ச் 2022 அன்று உள்ளபடி பொதுக் கணக்குக் குழுவினால் விவாதிக்கப்பட்ட 375 தணிக்கை பத்திகள் குறித்த 1,558 பரிந்துரைகளுக்கு துறைகள், நடவடிக்கை குறித்த செயல்படுத்தும் குறிப்புகளை அனுப்பவில்லை என்று தெரியவந்தது. இந்த

1,558 பரிந்துரைகளுள், 163 பரிந்துரைகளைப் பொறுத்த வரையில், ஒரு முறைகூட நடவடிக்கை குறித்த செயல்படுத்தும் குறிப்புகள் பெறப்படவில்லை. இவற்றுள், மிகப் பழைய பரிந்துரை, 1986-87 ஆண்டு தணிக்கை அறிக்கைக்குரியது.

## 1.7 தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் குறித்து பதிவுத் துறையின் நடவடிக்கை பற்றிய பகுப்பாய்வு

ஆய்வு அறிக்கைகள் / தணிக்கை அறிக்கைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை துறைகள் / அரசு எவ்வாறு அணுகுகிறது என்பதை ஆராயும் நோக்கில், ஒரு துறை குறித்து, கடந்த 10 ஆண்டுகளில் தணிக்கை அறிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள பத்திகள் மற்றும் செயலாக்கத் தணிக்கை குறிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை, மதிப்பாய்வு செய்யப்பட்டு தணிக்கை அறிக்கையில் சேர்க்கப்படுகிறது.

### 1.7.1 ஆய்வு அறிக்கைகளின் நிலைமை

கடந்த 10 ஆண்டுகளில், முத்திரை வரி மற்றும் பதிவுத்துறை கட்டணம்குறித்து, வணிகவரி மற்றும் பதிவுத் துறைக்கு அனுப்பப்பட்ட ஆய்வு அறிக்கைகளின் சுருக்கம், அந்த அறிக்கைகில் சேர்க்கப்பட்ட பத்திகள், 31 மார்ச் 2021 அன்று அவற்றின் நிலைமை ஆகியவை **அட்டவணை 1.10**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.10: ஆய்வு அறிக்கைகளின் நிலைமை**

**(₹கோடியில்)**

| வருடம் | ஆரம்ப இருப்பு | | | நடப்பு ஆண்டில் சேர்ந்தவை | | | நடப்பு ஆண்டில் தீர்க்கப்பட்டவை | | | முடிவில் இருப்பு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆய்வு அறிக்கைகள் | பத்திகள் | தொகை | ஆஆய்வு அறிக்கைகள் | பத்திகள் | தொகை | ஆய்வு அறிக்கைகள் | பத்திகள் | தொகை | ஆய்வு அறிக்கைகள் | பத்திகள் | தொகை |
| 2011-12 | 1,474 | 4,279 | 374.18 | 258 | 1,094 | 149.91 | 171 | 610 | 4.06 | 1,561 | 4,763 | 520.03 |
| 2012-13 | 1,561 | 4,763 | 520.03 | 157 | 462 | 1,174.15 | 125 | 764 | 70.00 | 1,593 | 4,461 | 1,624.18 |
| 2013-14 | 1,593 | 4,461 | 1,624.18 | 179 | 667 | 154.18 | 94 | 405 | 9.33 | 1,678 | 4,723 | 1,769.03 |
| 2014-15 | 1,678 | 4,723 | 1,769.03 | 165 | 746 | 115.74 | 51 | 258 | 14.33 | 1,792 | 5,211 | 1,870.44 |
| 2015-16 | 1,792 | 5,211 | 1,870.44 | 134 | 749 | 109.08 | 139 | 437 | 159.41 | 1,787 | 5,523 | 1,820.11 |
| 2016-17 | 1,787 | 5,523 | 1,820.11 | 116 | 759 | 51.40 | 89 | 343 | 34.62 | 1,814 | 5,939 | 1,836.89 |
| 2017-18 | 1,814 | 5,939 | 1,836.89 | 20 | 94 | 11.41 | 30 | 235 | 4.61 | 1,804 | 5,798 | 1,843.69 |
| 2018-19 | 1,804 | 5,798 | 1,843.69 | 9 | 78 | 64.42 | 10 | 77 | 1.17 | 1,803 | 5,799 | 1,906.94 |
| 2019-20 | 1,803 | 5,799 | 1,906.94 | 69 | 695 | 16.44 | 5 | 47 | 0.42 | 1,867 | 6,447 | 1,922.96 |
| 2020-21 | 1,867 | 6,447 | 1,922.96 | 57 | 493 | 104.09 | 297 | 1,387 | 1,140.99 | 1,627 | 5,553 | 886.06 |

(ஆதாரம்: முதன்மை கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-I), தமிழ்நாடு அலுவலகத்தில் பேணப்படும் தரவுக,ளின்படி)

2011-12ல் ஆரம்ப நிலை இருப்பாக இருந்த ₹ 374.18 கோடி மதிப்புடைய 4,279 பத்திகள், 2020-21 முடிவில் ₹ 886.06 கோடி மதிப்புள்ள 5,553 பத்திகளாக உயர்ந்துள்ளன. இது ஆய்வு அறிக்கைகளுக்கான பதிலுரைகள் எதிர்பார்த்த அளவில் இல்லை என்பதை உணர்த்துகிறது. நிலுவையிலுள்ள ஆய்வு அறிக்கைகள் மற்றும் பத்திகளை முடிவுக்கு கொண்டு வர, துறை தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

### 1.7.2 ஏற்கப்பட்ட இனங்களில் வருவாய் மீட்பு

2011-12 முதல் 2018-19 வரையிலான காலத்தில், இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கை துறைத் தலைவரின் வருவாய் பிரிவு, தமிழ்நாடு அரசு, அறிக்கையில் ₹ 1,102.68 கோடிகளை உள்ளடக்கிய ஒரு செயலாக்கத் தணிக்கை உட்பட

ஐம்பத்தி ஐந்துவரைவுப் பத்திகள் சேர்க்கப்பட்டுள்ளன. ₹ 54.37 கோடிகளை உள்ளடக்கிய 44 தணிக்கை குறிப்புகளை ஏற்றுக்கொண்ட துறை, ₹ 24.49 கோடியை வசூலித்தது / சரி கட்டியது. இவ்வனைத்து 55 பத்திகளும் (2011-12 முதல் 2018-19 வரை) இதுவரை பொதுக் கணக்கு குழுவினால் விவாதிக்கப்படவில்லை. இந்த 55 பத்திகளில் 2016-17 முதல் 2018-19 வரையான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கை துறைத் தலைவரின் தணிக்கை அறிக்கைகளில் இடம் பெற்றுள்ள ஒன்பது பத்திகளுக்கு அரசு இன்னும் விளக்கவுரை அளிக்கவில்லை.

ஒப்புக்கொண்ட இனங்களில், வருவாய் வசூலின் முன்னேற்றத்தை கண்காணிப்பதில், அரசு அதிக கவனம் செலுத்தி, சிறப்பு முயற்சிகள் மூலம் வருவாயை மீட்க வேண்டும். மேலும், பத்திகளுக்கு விளக்கவுரைகளை அளிக்க துறையை அறிவுறுத்தி அதற்கான காலக்கெடுவை அரசு நிர்ணயிக்க வேண்டும்.

## 1.8 தணிக்கையை திட்டமிடுதல்

பல்வேறு துறைகளின் கீழ் உள்ள அலுவலகங்கள், அவற்றின் வருவாய் நிலை, முந்தைய தணிக்கை குறிப்புகளின் நிலை, மற்றும் அதன் தன்மை அதன் பரிவர்த்தனைகளின் அளவுகோல்களுக்கு இணங்க உயர்தர, நடுத்தர மற்றும் குறைந்த அளவு முறைகேடுகள் / விதிமீறல்களை கொண்டவை என்று வகைப்படுத்தப்படுகின்றன. வருடாந்திர தணிக்கைத் திட்டம், இக்கணிப்பீடு முறையை சார்ந்து தயாரிக்கப்படுகிறது. அது, கடந்த ஐந்து ஆண்டுகளில் திரட்டப்பட்ட வருவாய்களின் புள்ளி விவர ஆய்வு, வரி நிர்வாகத்தின் அம்சங்கள், கடந்த ஐந்து ஆண்டுகளில் தணிக்கையின் அளவு மற்றும் அதன் தாக்கம் போன்ற முக்கிய விஷயங்களை உள்ளடக்கியது.

2020-21ஆம் ஆண்டில் தணிக்கை செய்யப்பட வேண்டிய மொத்த அலுவலகங்கள் 1,880 ஆகும். அவற்றுள், 123 அலுவலகங்கள் தணிக்கை செய்ய திட்டமிடப்பட்டு, 113 அலுவலகங்கள், அதாவது ஆறு விழுக்காடு, தணிக்கை செய்யப்பட்டன. அதன் விவரம் **அட்டவணை 1.11**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.11 : 2020-21 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட மற்றும் மேற்கொள்ளப்பட்ட தணிக்கையின் விவரங்கள்**

| வ. எ ண் | துறையின் பெயர் | செலவுகளின் தன்மை | தணிக்கை செய்யப்பட வேண்டிய அலுவலகங்கள் | தணிக்கைக்கு திட்டமிடப் பட்ட அலுவலகங்கள் | தணிக்கை செய்யப்பட்ட அலுவலகங்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | நிதி | கருவூலம் மற்றும் ஓய்வூதியம் | 105 | 3 | 3 |
| 2 | வணிக வரி மற்றும் பதிவு | மாநில சரக்குகள் மற்றும் சேவை வரிகள், மதிப்பு கூட்டு வரிகள், விற்பனை வரி மற்றும் பிற வரவினங்கள் | 397 | 2 | 2 |
| | | முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் | 646 | 53 | 53 |
| 3 | வருவாய் | நகர்ப்புற நில வரி | 26 | 0 | 0 |
| | | நில வருவாய் | 402 | 26 | 26 |
| 4 | உள் துறை (போக்குவரத்து) | வாகனங்கள் மீதான வரி | 103 | 13 | 9 |
| 5 | போக்குவரத்து | மோட்டார் வாகன பராமரிப்பு நிறுவனம் | 23 | 3 | 2 |
| 6 | உள் துறை (மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை) | மாநில ஆயத் தீர்வை | 75 | 0 | 0 |
| 7 | தொழில் | சுரங்கம் மற்றும் கனிமங்கள் | 33 | 6 | 1 |
| 8 | எரிசக்தி | மின் தீர்வை | 25 | 17 | 17 |
| 9 | திட்டமிடுதல் | திட்டமிடல், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் | 45 | 0 | 0 |
| மொத்தம் | | | **1,880** | **123** | **113** |

## 1.9 தணிக்கை முடிவுகள்

### இவ்வாண்டில் நடத்தப்பட்ட தணிக்கை விவரங்கள்

2020-21ஆம் ஆண்டில், 113 அலுவலகங்களின் பதிவுருக்கள் தேர்வாய்வு மேற்கொள்ளப்பட்டு 1,079 இனங்களில், ₹ 675.87 கோடிக்கு குறைவான வரிமதிப்பீடு, குறைவான வரிவிதிப்பு, வருவாய் இழப்பு மற்றும் இதர குறைபாடுகள் கண்டறியப்பட்டன. இந்த ஆண்டில், துறைகள், குறைவான வரிமதிப்பீடு மற்றும் இதர குறைபாடுகள் உள்ளடக்கிய 184 நேர்வுகளை ஏற்றுக்கொண்டு ₹ 13.73 கோடியை வசூலித்தது / சரி செய்தது. இவற்றில், ₹ 13.72 கோடி மதிப்புள்ள 178 நேர்வுகள் முந்தைய ஆண்டுகளில் சுட்டிக்காட்டப்பட்டவை ஆகும்.

## 1.10 இத்தணிக்கை அறிக்கையின் செயற்பரப்பு

இந்த அறிக்கையில் ₹ 396.30 கோடிகளை உள்ளடக்கிய எட்டு தணிக்கைக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. இதில் ₹ 7.94 கோடி மதிப்புடைய தணிக்கை குறிப்புகள் அரசு/துறைகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதில் ₹ 0.43 கோடி துறைகளினால் வசூலிக்கப்பட்டுள்ளது. இவை பின்வரும் II-IVஅத்தியாயங்களில் விவாதிக்கப்பட்டுள்ளன. அடுத்து வரும் அத்தியாயங்களில் விவாதிக்கப்பட்டுள்ள தணிக்கைக் குறிப்புகள் தெரிந்தெடுக்கப்பட்ட அலுவலகங்களின் பதிவுருக்களின் மாதிரி சோதனையில் கண்டறியப்பட்டவையாகும். தெரிந்தெடுக்கப்படாத அலுவலகங்களில் இதே போன்ற குறைவான வரிவிதிப்பு /குறைபாடுகள் இருக்கக்கூடும். எனவே, துறை இந்த அலுவலகங்களில் உள் தணிக்கை மேற்கொண்டு இதே போன்ற தவறுகள் மற்றும் குறைபாடுகள் இருப்பின் அவை கண்டுபிடிக்கப்பட்டு சரி செய்யப்பட்டன என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

# அத்தியாயம் -II

## சரக்குகள் மற்றும் சேவைகள் வரி

# அத்தியாயம்-II

# சரக்குகள் மற்றும் சேவைகள் வரி

## 2.1 வரி நிர்வாகம்

தமிழ்நாட்டில், மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட வரி செலுத்துவோர் தொடர்பான மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (SGST) வணிக வரிகள் துறை (CTD) மூலம் நிர்வகிக்கப்படுகிறது. வணிக வரிகள் துறையின் தலைவர் மாநில வரி ஆணையர் (ஆணையர்) ஆவார். அவருக்கு கூடுதல் ஆணையர்கள் மற்றும் இணை ஆணையர்கள் (JCs) உதவி செய்கிறார்கள். இணை ஆணையர்கள் தலைமையில் பன்னிரண்டு[1] பிராந்தியப் பிரிவுகள் உள்ளன மற்றும் இந்த பிராந்திய பிரிவுகளின் கீழ் உதவி ஆணையர்கள் (AC), மாநில வரி அதிகாரிகள் (STO) மற்றும் துணை மாநில வரி அதிகாரிகள் (DSTO) ஆகியோர் கூட்டாக 'முறையான அதிகாரிகள்' (POகள்) என அழைக்கப்படுகின்றன. இவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் மதிப்பிடும் பிரிவுகள் செயல்படுகின்றன. இணை ஆணையர் (உளவுத்துறை) தலைமையில் ஒன்பது[2] புலனாய்வுப் பிரிவுகள் வாகனங்களை இடைமறித்து சோதனையிட திரிவுக் குழுக்களையும் (Roving squads), அவற்றினால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட சரக்கு மற்றும் வாகனங்களைதொடர்பான குறைபாடுகளை தீர்ப்பதற்கான தீர்ப்புக் கலங்களையும் கொண்டுள்ளன. CTD, வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையின் செயலரின் தலைமையில் கண்காணிக்கப்படுகிறது.

## 2.2 உள் தணிக்கை

பரிந்துரைக்கப்பட்ட அமைப்புகள் ஒழுங்கான முறையில் செயல்படுகின்றன என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள ஒரு நிறுவனத்திற்கு உள் தணிக்கை ஒரு முக்கிய அங்கமாகும். சரக்குகள் மற்றும் சேவைகள் வரிவிதிப்பில் (GST) தனிப்பட்ட உள் தணிக்கை பிரிவு ஏதும் இல்லை. உள் தணிக்கை தொடர்பான விவகாரங்கள் 01 ஜூன் 2019 முதல் மறுஆய்வு, மேல்முறையீடு மற்றும் மரபுப் பிரிவில் கையாளப்படுகிறது. இந்தப் பிரிவில் உதவி ஆணையர்கள், மாநில வரி அதிகாரிகள் மற்றும் துணை மாநில வரி அலுவலர்கள் உள்ளனர். 2019-20 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தணிக்கைக் குழுக்களின் எண்ணிக்கை 42 ஆகும்.

2019-20 ஆம் ஆண்டில், தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய 339 அலுவலகங்களில், 327 அலுவலகங்கள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 154 அலுவலகங்கள் மட்டுமே தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டன. உதவி ஆணையர்கள் மற்றும் துணைப் பணியாளர்களின் காலிப் பணியிடங்களே உள் தணிக்கை நிலுவைக்கான காரணமாகத்துறை கூறியது. உள் தணிக்கையை வலுப்படுத்துவது குறித்து துறை பரிசீலிக்கலாம், இதனால் தணிக்கை செய்யப்பட வேண்டிய அனைத்து அலகுகளும் குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்கப்படும்.

**அட்டவணை 2.1ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி, 31 மார்ச் 2021ன் முடிவில் ₹ 467.92 கோடி பண மதிப்பில் 22,090 பத்திகள் நிலுவையில் இருப்பதாக தணிக்கை குறிப்பிடுகிறது.

---

[1] சென்னை சென்டரல், சென்னை கிழக்கு, சென்னை வடக்கு, சென்னை தெற்கு, கோயம்புத்தூர், ஈரோடு, நிறைய வரி செலுத்துவோர் பகுதி, மதுரை, சேலம், திருநெல்வேலி, திருச்சி மற்றும் வேலூர்.

[2] சென்னை I, சென்னை II, கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, சேலம், திருநெல்வேலி, திருச்சி மற்றும் வேலூர்.

அட்டவணை2.1: உள் தணிக்கை குறிப்புகளின் விவரங்கள்

(₹கோடியில்)

| ஆண்டு | ஆய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை | தணிக்கை குறிப்புகளின் எண்ணிக்கை | பண மதிப்பு |
|---|---|---|---|
| 2018-19வரை | 743 | 14,800 | 296.06 |
| 2019-20 | 131 | 3,562 | 122.02 |
| 2020-21 | 108 | 3,728 | 49.84 |
| மொத்தம் | **982** | **22,090** | **467.92** |

(ஆதாரம்: துறையினால் அளிக்கப்பட்ட பதிலுரைகள்)

2010-11 முதல் நிலுவையில் உள்ள பழைய குறிப்புகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்படுகிறது.

## 2.3 தணிக்கை முடிவுகள்

“சரக்குகள் மற்றும் சேவைகள் வரி திருப்புகைகளின் செயலாக்கம்” மீதான பொருள் குறித்த (subject specific) இணக்கத் தணிக்கை இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. இதன் கண்டுபிடிப்புகள் பின்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

## 2.4 “சரக்குகள் மற்றும் சேவைகள் வரி திருப்புகைகளின் செயலாக்கம்” மீதான பொருள் குறித்த இணக்கத் தணிக்கை

### 2.4.1 முன்னுரை

உரிய நேரத்தில் திருப்புகை வழங்கும் வழிமுறையானது வரி நிர்வாகத்தின் ஒரு முக்கிய அங்கமாகும், ஏனெனில் இது மூலதன விரிவாக்கம் மற்றும் தற்போதுள்ள வணிகத்தின் நவீனமயமாக்கல் ஆகியவற்றின் பொருட்டு முடக்கப்பட்ட நிதிகளை வெளியிடுவதின் மூலம் வர்த்தகத்தை எளிதாக்குகிறது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டங்களில் உள்ள திருப்புகை தொடர்பான விதிகள், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிப்பின் கீழ், திருப்புகை அளிக்கும் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதையும் தரப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. அதேநேரத்தில், வருவாய் கசிவு மற்றும் தேவையற்ற செறிவூட்டலைத் தடுக்க, சட்டவிரோத / தவறான திருப்புகை கோரல்களை வலுவான வரிவிதிப்பு முறையானது அடையாளம்காணவேண்டும்.மின்னணு பணப் பேரேட்டில் உள்ள அதிகப்படியான இருப்புகளின் திருப்புகை, வ ரியற்ற பொருட்கள்/சேவைகளின் ஏற்றுமதி காரணமாக பயன்படுத்தப்படாத உள்ளீட்டு வரி வரவின் திருப்புகை, வரி செலுத்துதலுடன் ஏற்றுமதி சேவைகளுக்கு செலுத்தப்பட்ட வரியின் திருப்புகை, வரி செலுத்தல்கள் இல்லாத SEZ அலகுகள் / SEZ மேம்படுத்துநர்க்கு செய்யப்பட்ட விநியோகத்தினால் ஏற்பட்ட பயன்படுத்தப்படாத உள்ளீட்டு வரி வரவின் திருப்புகை, வரி செலுத்தல்களுடன் கூடிய SEZ அலகுகள்/SEZ மேம்படுத்துனர்க்கு செய்யப்பட்ட விநியோகத்திற்கு செலுத்தப்பட்ட வரியின் திருப்புகை, தலைக்கீழ் வரியமைப்பின் காரணமாக ஏற்பட்ட பயன்படுத்தப்படாத உள்ளீட்டு வரி வரவின் திருப்புகை, ஏற்றுமதியாக கருதப்படும் வழங்குகைகளின் செலுத்தப்பட்ட வரியை வழங்குநர்களுக்கு திருப்புகை செய்தல், ஏற்றுமதியாக கருதப்படும் வழங்குகைகளின் மீது செலுத்தப்பட்ட வரியை பெறுநர்களுக்கு திருப்புகை செய்தல், அதிகப்படியாக செலுத்தப்பட்ட வரியின் திருப்புகை, உள் மாநில வழங்கல்களாக வகைப்படுத்தப்பட்டு பின்னர் மாநிலங்களுக்கு இடையேயான விநியோகம் என மாற்றி கருதப்பட்ட நேர்வுகளிலும் அதற்கு நேர் மாறான நேர்வுகளிலும் செலுத்தப்பட்ட வரியின் திருப்புகை, மதிப்பீடு/தற்காலிக மதிப்பீடு/மேல்முறையீடு/பிற ஆணைகளின் அடிப்படையில் திருப்புகை, “வேறு ஏதேனும்” காரணத்தின் அடிப்படையிலான திருப்புகை, தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம் 2017ன் பிரிவு 54(2)ன் படி,பிரிவு 55ன் கீழ்

அறிவிக்கப்பட்ட UNO போன்ற நிறுவனங்களின், பொருள்கள் அல்லது சேவைகள் அல்லது இரண்டிற்கான உள்ளீட்டு வழங்கல்கள் மீது விதிக்கப்பட்ட வரியைத் திருப்புகை செய்தல், ஆகியவை பலதரப்பட்ட திருப்புகைகள்ஆகும்.

### துறை அமைப்பு

தமிழ்நாட்டில், மாநிலத்திற்கென்று ஒதுக்கப்பட்ட வரி செலுத்துநர் தொடர்பானசரக்குகள் மற்றும் சேவைகள் வரியானது, வணிக வரிகள் துறை மூலம் நிர்வகிக்கப்படுகிறது. வணிக வரிகள் துறையின் தலைவர் மாநில வரி ஆணையர் (ஆணையர்) ஆவார். இணை ஆணையர்கள் (JCs) தலைமையில் பன்னிரண்டு[3] பிராந்தியப் பிரிவுகள் உள்ளன. துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், மாநில வரி அலுவலர்கள், துணை மாநில வரி அலுவலர்கள் ஆகியோர் கூட்டாக 'முறையான அதிகாரிகள்' (POகள்) என அழைக்கப்பட்டு, வரி மதிப்பீடு மற்றும் வரி வசூலிப்பதற்க்கான பொறுப்பு வகிக்கின்றனர். CTD, வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையின் செயலரின் தலைமையில் கண்காணிக்கப்படுகிறது.

### தணிக்கை நோக்கங்கள்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிப்பின் திருப்புகை நேர்வுகளின் மீதான தணிக்கை பின்வருவனவற்றை மதிப்பிடுகிறது.

- திருப்புகை தொடர்பாக வெளியிடப்பட்ட சட்டம், விதிகள், அறிவிப்புகள், சுற்றறிக்கைகள் போன்றவற்றின் போதுமான தன்மை;
- நிலவும் விதிகளுக்கு வரி அதிகாரிகளின் இணங்குகின்றனரா? மேலும், வரி செலுத்துநர் இவ்விதிகளுக்கு இணங்குவதை உறுதிசெய்வதற்கான செயல்திறன் உள்ளதா?
- திருப்புகை விண்ணப்பங்களை பரிசீலிப்பதில், துறை அதிகாரிகளின் செயல்திறனைச் சரிபார்க்க, பயனுள்ள உள் கட்டுப்பாட்டு உள்ளதா?

### தணிக்கையின் பரப்பு

ஜூலை 01, 2017 முதல் 31 மார்ச் 2019 வரையிலான காலகட்டத்தில் செயலாக்கப்பட்ட வரிபணத் திருப்புகை விண்ணப்பங்களின் ஆய்வை உள்ளடக்கிய இணக்கத் தணிக்கை, 2019-20 ஆம் ஆண்டில் "சரக்குகள் மற்றும் சேவைகள் வரி திருப்புகைகளின் செயலாக்கம்"என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்டது. மேலும், இது இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின், 31 மார்ச் 2019ல் முடிவடைந்த அறிக்கையில் பத்தி 2.4ல் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, இந்த அறிக்கையில் 1 ஏப்ரல் 2019 முதல் 31 மார்ச் 2021 வரையிலான தணிக்கை காலக்கட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஜூலை 2, 2021 அன்று வணிக வரித் துறையின் அரசாங்கச் செயலாளருடன் நுழைவுக் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் தணிக்கையின் நோக்கங்கள், அளவுகோல்கள், பரப்பு மற்றும் முறைமை விளக்கப்பட்டன. 29 மார்ச் 2022 அன்று நிறைவுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசு மற்றும் துறையால் வழங்கப்பட்ட கருத்துக்கள், அறிக்கையில் பொருத்தமான இடங்களில் இணைக்கப்பட்டுள்ளன.

### மாதிரித் தெரிவு

ஏப்ரல் 01, 2019 முதல் மார்ச் 31, 2021 வரையிலான காலகட்டத்தில், மொத்தம் 33,038 திருப்புகை விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, வரி செலுத்துநர்களுக்கு

---

3 சென்னை சென்டரல், சென்னை கிழக்கு, சென்னை வடக்கு, சென்னை தெற்கு, கோயம்புத்தூர், ஈரோடு, நிறைய வரி செலுத்துவோர் பகுதி, மதுரை, சேலம், திருநெல்வேலி, திருச்சி மற்றும் வேலூர்.

₹ 10,761.44 கோடி திருப்புகை செய்ய ஒப்பளிப்புகள் அளிக்கப்பட்டன. ஜூலை 2021 முதல் பிப்ரவரி 2022 வரை மேற்கொள்ளப்பட்ட தற்போதைய தணிக்கையில், 704 திருப்புகை இனங்கள் (2019-20ஆம் ஆண்டில் கைமுறையாக செயலாக்கப்பட்ட 73 இனங்கள் உட்பட), பல்வேறு இடர் அளவுருக்களின் அடிப்படையில் அடுக்கு மாதிரி முறையை பயன்படுத்தி விரிவான ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. கோரப்பட்ட திருப்புகைப் பணம், பல்வேறு நிலைகளில் திருப்புகை ஒப்பளிப்பில் தாமதம், ஒப்பளிக்கப்பட்ட திருப்புகை / கோரப்பட்ட திருப்புகையின் விகிதம் மற்றும் வழங்கப்பட்ட குறைபாடு குறிப்பாணை போன்ற இடர் அளவுருக்கள் பயன்படுத்தப்பட்டன. மாதிரியானது அனைத்து 12 பிராந்திய பிரிவுகளையும் உள்ளடக்கியது. மேலும், 396 வட்டங்களில், தானியங்கு மாதிரிக்கு முன்பான 73 இனங்களில், 41[4] வட்டங்களும், தானியங்கு மாதிரிக்குப் பின்பான 631 இனங்களில், 158[5] வட்டங்களும் தெரிவுசெய்யப்பட்டன.

---

4 அடையாறு, ஆம்பூர், அன்னூர், அனுப்பர்பாளையம், சித்தோடு, தேவகோட்டை, கணபதி, கும்மிடிப்பூண்டி, துறைமுகம், ஹரூர், ஓசூர் (தெற்கு)-II, ஓசூர் (வடக்கு)-II, குமாரபாளையம், LTU-DC2, LTU-DC3, மடிப்பாக்கம், மயிலாப்பூர்,நாமக்கல் (டவுன்), ஒரகடம், பாடி (அண்ணா நகர்), பல்லடம்-I, பள்ளிபாளையம், பீளமேடு (வடக்கு), பொங்கலூர், பொன்னேரி, ராஜபாளையம்-I, ராஜபாளையம்-II, ராணிப்பேட்டை, ராணிப்பேட்டை சிப்காட், ராயபுரம், சைதாப்பேட்டை, சோழிங்கநல்லூர், ஸ்ரீபெரும்புதூர், தஞ்சாவூர்-II , திருக்கழுக்குன்றம், திருப்பூர் (வடக்கு)-I, திருப்பூர் (வடக்கு)-II, திருப்பூர் கொங்கு நகர், திருப்பூர் லட்சுமி நகர், தூத்துக்குடி-I மற்றும் வேலாண்டிபாளையம்.

5 அடையாறு, அழகாபுரம், ஆலந்தூர், அமைந்தகரை, அம்பத்தூர்.ஐ.இ., ஆம்பூர், அண்ணாநகர், அண்ணாசாலை, அன்னூர், அனுப்பர்பாளையம், அசோக்நகர், ஆத்தூர் (ஊரகம்), அவிநாசி, அவிநாசிரோடு, ஆவாரம்பாளையம், பவானி, ப்ரோரோடு, செங்கல்பட்டு, சென்னிமலை, சேப்பாக்கம், சித்தோடு, குரோம்பேட்டை, தாராபுரம், எழும்பூர், எட்டயபுரம், கணபதி, காந்திநகர், குடியாத்தம் (கிழக்கு), கிண்டி, கும்மிடிப்பூண்டி, துறைமுகம், ஹரூர், ஹஸ்தம்பட்டி, ஓசூர் (வடக்கு)-I, ஓசூர் (வடக்கு)-II, ஓசூர் (தெற்கு)-II, ஜே.ஜே. நகர், கே.கே.நகர், காலடிப்பேட்டை, காங்கேயம், கருமத்தம்பட்டி, கரூர்-I, கரூர்-II, கரூர்-III, கரூர்-IV, கேளம்பாக்கம், கீழ்ப்பாக்கம், கொடுமுடி, கோட்டூர்புரம், கோவில்பட்டி-I, கிருஷ்ணகிரி-I, குமாரபாளையம், குனியமுத்தூர், LTU-DC3 , மதுரை ஊரகம் (தெற்கு), மதுராந்தகம், மணலி, மந்தவெளி, மண்ணடி, மறைமலைநகர், மேடவாக்கம், மேலூர், மேட்டுப்பாளையம் சாலை, மேட்டுப்பாளையம் தாலுக்கா, மேட்டூர் சாலை, முத்தியால்பேட்டை, மயிலாப்பூர், என்.எஸ்.சி. போஸ் ரோடு, நாகர்கோவில்-I, நாகர்கோவில் (ஊரகம்), நாமக்கல் (ஊரகம்), நாமக்கல் (டவுன்), நந்தம்பாக்கம், நந்தனம், நங்கநல்லூர், நிலக்கோட்டை, நொளம்பூர், நுங்கம்பாக்கம், ஒரகடம், பி.என். பாளையம், பாடி (அண்ணாநகர்), பழனி-I, பல்லடம்- I, பல்லடம்-II, பள்ளிபாளையம், பம்மல், பார்க் ரோடு, பட்டரவாக்கம், பீளமேடு (வடக்கு), பீளமேடு (தெற்கு), பெரிய அக்ரஹாரம், பெரியநாயக்கன்பாளையம், பெருந்துறை, போதனூர், பொள்ளாச்சி (ஊரகம்), பாண்டிபஜார், பொங்கலூர், பொன்னேரி, பூந்தமல்லி, போரூர் ஆர்எஸ் புரம், ராஜபாளையம்-I, ராஜபாளையம்-II, ராம் நகர், ராணிப்பேட்டை, ராணிப்பேட்டை சிப்காட், ராசிபுரம், ராயபுரம், சைதாப்பேட்டை, சேலம் ஊரகம், சங்கரி, சரவணம்பட்டி (கிழக்கு), சரவணம்பட்டி (மேற்கு), சாத்தூர், சாத்தூர்-I, சோழிங்கநல்லூர், சிங்காநல்லூர் (வடக்கு), சவுகார்பேட்டை, ஸ்ரீபெரும்புதூர், தி.நகர், தஞ்சாவூர்-II, தேனி-I, தேனி-II (ஆண்டிபட்டி), திண்டல், திருக்கழுக்குன்றம், திருமழிசை, திருப்பத்தூர், திருவான்மியூர், துடியலூர்,திருச்செங்கோடு (டவுன்), திருச்செங்கோடு ஊரகம், திருப்பூர் (வடக்கு) -I, திருப்பூர் (வடக்கு)-II, திருப்பூர் (ஊரகம்)-I, திருப்பூர் (ஊரகம்) II, திருப்பூர் (தெற்கு), திருப்பூர் பஜார், திருப்பூர் மத்தியம்-II, திருப்பூர் கொங்கு நகர், திருப்பூர் லட்சுமி நகர், திருவள்ளூர், திருவேற்காடு, திருச்சி சாலை, தூத்துக்குடி-I, தூத்துக்குடி-II, தூத்துக்குடி-III, உடுமலைப்பேட்டை (வடக்கு), உடுமலைப்பேட்டை (தெற்கு), வள்ளுவர்கோட்டம், வாணியம்பாடி, வேடசந்தூர், வேளச்சேரி, வேலாண்டிபாளையம், வெள்ளக்கோவில், வெங்கலக்கடை தெரு, வேப்பேரி,விருதுநகர்-1 மற்றும் மேற்கு வெளி தெரு.

**தணிக்கை அளவுகோல்கள்**

பின்வரும் ஆதாரங்களில் இருந்து பெறப்பட்ட அளவுகோல்களுக்கு எதிராக தணிக்கை நோக்கங்கள் தரப்படுத்தப்பட்டன:

- தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம், 2017 (TNGST சட்டம், 2017);
- தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள், 2017 (TNGST விதிகள், 2017);
- மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம், 2017 (CGST சட்டம், 2017);
- மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள், 2017 (CGST விதிகள், 2017);
- ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள்வரி சட்டம், 2017 (IGST சட்டம், 2017);
- ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள்வரி விதிகள், 2017 (IGST விதிகள், 2017);
- துறையினால் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் மற்றும் சுற்றறிக்கைகள்.

### 2.4.2 தணிக்கை கண்டுபிடிப்புகள்

தணிக்கை கண்டுபிடிப்புகள் இரண்டு பரந்த பகுதிகளாக, அதாவது முறை சார்ந்த குறைபாடுகள் மற்றும் இணக்க குறைபாடுகள் என வகைப்படுத்தப்படுகின்றன. திருப்புகை கோரல்களின் செயலாக்கத்தின் போதுமான தன்மை மற்றும் செயல்திறன் தொடர்பான குறைபாடுகளை முறை சார்ந்த குறைபாடுகளும், தனிப்பட்ட இனங்களில் சட்டம் மற்றும் விதிகளில் இருந்து விலகல்கள் மற்றும் அதன் விளைவாக வருவாய் இழப்பு ஆகியவற்றை இணக்க குறைபாடுகளும் எடுத்துக்காட்டுகின்றன. தணிக்கையில் கண்டறியப்பட்டவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

### 2.4.3 முறை சார்ந்த குறைபாடுகள்

சட்டம், விதி, அறிவிப்பு மற்றும் சுற்றறிக்கைக்கு இணங்க சரக்குகள் மற்றும் சேவைகள்வரி நெட்வொர்க்கில் (GSTN) வசதிகள் இல்லாமையும் வருவாய் இழப்பு தடுப்பதற்கான சட்டம் அல்லது விதிகளில் ஏற்பாடுகள் இல்லாமையும் முறை சார்ந்த குறைபாடுகளில் அடங்கும். தணிக்கையில் கண்டறியப்பட்டவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

#### 2.4.3.1 வெளிநாட்டிலிருந்து பணம் வசூலான அளவிற்கு திருப்புகைக் கேட்பு கோரிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் இல்லாமை

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள், 2017ன் விதி 89(4) ஆனது, பூஜ்ஜிய-மதிப்பீடு செய்யப்பட்ட சேவைகள்[6] பொறுத்தமட்டில், உள்ளீட்டு வரி வரவினை திருப்புகை செய்வதற்கான சூத்திரத்தை[7] வழங்குகிறது. விதி 89(4) (D) ஆனது பூஜ்ஜிய மதிப்பிடப்பட்ட சேவை வழங்கலில் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் முன்பணங்களின் மொத்ததினை விற்பனை அளவாக வரையறுக்கிறது. இந்த விற்பனை அளவுடன் (89(4)(D)ன் படி பூஜ்ஜிய-மதிப்பீடு செய்யப்பட்ட சேவைகளுக்கான விற்பனை அளவு) பூஜ்ஜியமற்ற மதிப்பீட்டின் விற்பனை அளவை சேர்த்து சீர்செய்யப்பட்ட விற்பனை அளவு என்று விதி 89(4)(E)

---

6 சிறப்பு பொருளாதார மண்டலத்திற்கு ஏற்றுமதி அல்லது வழங்கல் நோக்கத்திற்காக பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குதல்.

7 திருப்புகை தொகை = (பூஜ்ஜிய மதிப்பிடப்பட்ட பொருட்களின் விநியோகத்தின் விற்றுமுதல் + பூஜ்ஜிய மதிப்பிடப்பட்ட சேவைகளின் விற்றுமுதல்) x நிகர உள்ளீட்டு வரி வரவு / சீர்செய்யப்பட்ட மொத்த விற்றுமுதல்.

வரையறுக்கிறது. எனவே, பூஜ்ஜிய மதிப்பீடு செய்யப்பட்ட சேவைகளின் விற்பனை அளவு மட்டுமே உடைய ஏற்றுமதியாளர்களின் நேர்வுகளில், கொடுக்கப்பட்ட சூத்திரத்தில் மேலிலக்கமும் கீழ் இலக்கமும் அதே எண்ணாகவே உள்ளது. மூன்று[8] மதிப்பீட்டு வட்டங்களில் மதிப்பிடப்பட்ட 359[9] இனங்களில் நான்கில், ஏற்றுமதி விற்பனை அளவு ₹ 392.64 கோடியாக இருந்தும், அந்நியச் செலாவணியில் ₹ 379.81 கோடிமட்டுமே வசூலானது. இதனால் ₹ 71.49 இலட்சம் திருப்புகை அதிகமாக வழங்கப்பட்டதை தணிக்கை கண்டறிந்தது. ஆயினும், முறையான அதிகாரிகள் ஏற்றுமதி விற்பனை அளவு அடிப்படையிலேயே திருப்புகை தொகையை அனுமதித்தனர். ஏனெனில், வெளிநாட்டு பணவனுப்பல்கள் வசூலின் அளவிற்குத் திருப்புகையை கட்டுப்படுத்துவதற்கோ அல்லது கோரப்பட்ட ஏற்றுமதி விற்பனை அளவிற்கு ஏற்றவாறு வெளிநாட்டு பணவனுப்பல்கள் குறைவினை சரிசெய்வதற்கோ சட்டத்தில் வழிமுறைகள் இல்லை.

நவம்பர் 2021 மற்றும் பிப்ரவரி 2022க்கு இடைப்பட்ட காலத்தில் இது சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கான பதில் எதிர்நோக்கப்படுகிறது (ஏப்ரல் 2022).

நிறைவுக் கூட்டத்தின் போது (மார்ச் 2022), தணிக்கையால் கண்டறியப்பட்டவைகளை ஏற்றுக்கொண்ட அரசு, இந்த குறைபாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அவையிடம் (GSTC) பரிசீலனைக்கு உள்ளது என்று கூறியது.

### 2.4.3.2 வழங்கப்பட்ட மானியத்திற்கு விகிதாசாரமாக உள்ளீட்டு வரி வரவினை குறைக்க சட்டத்தில் வசதி இல்லாமை

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம், 2017ன் பிரிவு 15(2)(e)ன் படி, வழங்கல் மதிப்பானது மத்திய மற்றும் மாநில அரசுகள் வழங்கும் மானியங்கள் தவிர்த்து விலையுடன் நேரடியாக இணைக்கப்பட்ட மானியங்கள் மட்டுமே உள்ளடக்கும். இந்தியாவில் அனைத்து மானியங்களும் மாநில அல்லது மத்திய அரசினாலேயே வழங்கப்படுகின்றன. தகுதியான உள்ளீட்டு வரி வரவு, விற்பனை அளவு அல்லது சீர்செய்யப்பட்ட விற்பனை அளவு ஆகியவற்றைக் கணக்கிடுவதற்காக மானியத்தின் அளவு விற்பனை அளவில் சேர்க்கப்படவில்லை. இதன் விளைவாக, மானியம் அல்லாத பகுதி தொடர்பான வருவாய் அளவிற்கு தகுதியான உள்ளீட்டு வரி வரவினை கணக்கிடாமல் முழு உள்ளீட்டின் மீதான உள்ளீட்டு வரி வரவே திருப்புகையாக அனுமதிக்கப்பட்டது.

மூன்று[10] வட்டங்களில் மதிப்பிடப்பட்ட 704[11] இனங்களில் நான்கில், விற்பனை விலையில் ஒரு பகுதியாக மானியத்தைச் சேர்க்க சட்டத்தில் வழிவகை இல்லாததால், ₹ 7.24 கோடி அதிகமாக திருப்புகை வழங்கப்பட்டதாக தணிக்கையில் கண்டறியப்பட்டது. எனவே, அனைத்து மானியங்களும் வரி செலுத்துநர்களின் விற்பனைவிலையில் சேர்க்கப்பட்டு பூஜ்ஜிய மதிப்பிடப்பட்ட விற்பனைவிலைக்கு இணையாக கருதப்படலாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

இது சுட்டிக்காட்டப்பட்டபோது (செப்டம்பர் 2021 மற்றும் பிப்ரவரி 2022), மணலி மற்றும் தூத்துக்குடி -II முறையான அதிகாரிகள் (அக்டோபர் 2021 மற்றும்பிப்ரவரி 2022) மத்திய மற்றும் மாநில அரசுகள் வழங்கும் மானியங்கள் வரிக்கு உட்பட்ட விநியோகத்தின் ஒரு பகுதியாகாது என்றும், இதனால் இந்த மானியம் விலக்கு அளிக்கப்பட்டதாக கருதப்படாது மற்றும் உள்ளீட்டு வரி வரவு திரும்பபெறும் உத்தரவாதம் இல்லை என்றும் பதிலளித்தனர். வரி மதிப்பிற்காக மதிப்பிடப்படும்

---

8 சோழிங்கநல்லூர், திருப்பூர் சென்ட்ரல்-II மற்றும் வேலாண்டிபாளையம்.

9 மொத்த 704 மாதிரி இனங்களில் இந்த 359 இனங்கள் பூஜ்ஜியமாக மதிப்பிடப்பட்ட இனங்கள் ஆகும்.

10 அண்ணாசாலை, மணலி மற்றும் தூத்துக்குடி-II.

11 704 இனங்களில், நான்கு இனங்களில் மட்டுமே மானியத்தை கொண்டுள்ளது.

விற்பனை அளவின் மீது மட்டுமே உள்ளீட்டு வரி வரவு கோர முடியும் என்ற தணிக்கையின் வாதத்தை பற்றி இப்பதிலில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. மானியம் தொடர்பான விற்பனை அளவு வரிக்கு சேர்க்கப்படாததால், இந்த விற்பனை அளவு மீது உள்ளீட்டு வரி வரவு பெற முடியாது. எனவே, மானியத்தை பூஜ்ஜிய மதிப்பிடப்பட்ட விற்பனை அளவிற்க்கு இணையாகக் கருதுவதற்கான சட்டத்திருத்தம் செய்ய, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அவையின் கவனத்திற்கு இந்த குறைபாட்டினை கொண்டுவரலாம் என்று தணிக்கை பரிந்துரைத்துள்ளது.

நிறைவுக் கூட்டத்தில் (மார்ச் 2022) இந்த குறைபாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அவையிடம் உள்ளது என்று அரசு பதிலளித்தது.

### 2.4.3.3 தாமதமாக பணத்தைத் திருப்புகை செய்ததற்கான வட்டி

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம், 2017ன் பிரிவு 56ன் படி, எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் பிரிவு 54ன் துணைப்பிரிவு (5)ன் கீழ் திருப்புகை செய்யுமாறு உத்தரவிடப்பட்ட ஏதேனும் வரியானது, துணைப் பிரிவு (1)ன் கீழ் விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தப்படவில்லையெனில், கூறப்பட்ட துணைப் பிரிவின் கீழ், அவையின் பரிந்துரைகள்படி அரசால் வெளியிடப்பட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, ஆறு விழுக்காட்டிற்கு மிகாமல் வட்டி விகிதத்தில், விண்ணப்பம் பெறப்பட்ட நாள் முதல் அறுபது நாட்கள் காலாவதியான தேதியிலிருந்து அத்தகைய வரியைத் திருப்புகை செய்யப்பட்ட தேதி வரை வட்டி செலுத்தப்பட வேண்டும். ஆண்டுக்கு ஆறு விழுக்காடு வட்டி விகிதத்தை அரசு அறிவித்துள்ளது[12].

36[13] வட்டங்களில் பரிசீலிக்கப்பட்ட 704இனங்களில் 71இனங்களுக்கு விண்ணப்பித்த நாளிலிருந்து 60 நாட்கள் காலாவதியான பிறகே, முறையான அதிகாரிகள் இறுதிப் பணத்தைத் திருப்புகை செய்வதலுக்கான உத்தரவை வழங்கியதாக தணிக்கை ஆய்வில் கண்டறியப்பட்டது. தாமதம் ஒன்று முதல் 179 நாட்கள் வரையாக இருந்தது. இதில், 61 இனங்கள் மூன்று மாதங்கள் வரை தாமதமாகவும், 10 இனங்கள் மூன்று மாதங்களுக்கும் மேலாகவும் தாமதமாகியுள்ளன. தாமதமாக வழங்கப்பட்ட இந்தத் திருப்புகைக்கு வட்டி எதுவும் செலுத்தப்படவில்லை. தாமதமாகத் திருப்புகை வழங்கியதற்கான வட்டி ₹ 26.92 இலட்சமாகும். திருப்புகை அனுமதிக்கும் போது, தாமதமான காலத்திற்கு கணினி தானாகவே வட்டியைக் கணக்கிட வேண்டும். ஆனால், அமைப்பில் அதற்கான வசதி எதுவும் செய்யப்படவில்லை.

செப்டம்பர் 2021க்கும் ஜனவரி 2022க்கும் இடையே இது சுட்டிக்காட்டப்பட்டது இதற்கான பதில் எதிர்நோக்கப்படுகிறது (ஏப்ரல் 2022).

நிறைவுக் கூட்டத்தில் (மார்ச் 2022), தாமதமாகத் திருப்புகை செய்ததற்கு இதுவரை எந்த வட்டியும் அளிக்கப்படவில்லை என்றும், தாமதமான திருப்புகை தொகையுடன் தானாக வட்டியை உள்ளீடு செய்வதற்கு அமைப்பில் எந்தவித வசதியும் இல்லை என்றும் அரசு பதிலளித்தது.

12 தமிழ்நாடு வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையின் 29 ஜூன் 2017 தேதியிட்ட G.O.(M.S) எண்.61.

13 அடையார், ஆம்பூர், கணபதி, கிண்டி, கும்மிடிப்பூண்டி, துறைமுகம், ஹரூர், ஒசூர் (வடக்கு)-I, ஒசூர் (வடக்கு)-II, கரூர்-I, கேளம்பாக்கம், பெரிய வரி செலுத்துவோர் பிரிவு DC-III, மடிப்பாக்கம், மண்ணடி, மேலூர், மயிலாப்பூர், நந்தம்பாக்கம், , நுங்கம்பாக்கம், ஒரகடம், பல்லடம்-II, பள்ளிபாளையம், பூந்தமல்லி, ராஜபாளையம்-II, ராணிப்பேட்டை சிப்காட், சோழிங்கநல்லூர், ஸ்ரீபெரும்புதூர், தி.நகர், திருப்பத்தூர், திருவான்மியூர், திருப்பூர் (ஊரகம்)-I, திருப்பூர் (மத்தியம்)-I, திருவள்ளூர், திருவொற்றியூர், திருச்சி சாலை, தூத்துக்குடி-I மற்றும் உடுமலைப்பேட்டை (தெற்கு).

### 2.4.3.4 தற்காலிகத் திருப்புகை இருமுறை செலுத்தப்பட்டமை

திருவள்ளூர் வட்டத்தில் மதிப்பிடப்பட்ட ஒரு வரி செலுத்துநர் ஆகஸ்ட் 2019 மற்றும் செப்டம்பர் 2019 ஆகிய கால கட்டங்களுக்கு வரி செலுத்தாமல் செய்யப்படும் சரக்குகள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியின் அடிப்படையில் உள்ளீட்டு வரி வரவுக்கான திருப்புகை கோரியுள்ளார். வரி செலுத்துநர் அந்த காலத்திற்கு இரண்டு முறை - கைமுறையாகவும், பின்னர் இணையதளம் மூலமாகவும் விண்ணப்பித்துள்ளார். இரண்டு விண்ணப்பங்களுக்கும் ஒரே விண்ணப்ப அடையாள எண் (ARN) வழங்கப்பட்டது மற்றும் ஒரே ARNக்கு இரண்டு முறை ஒப்புகை வழங்கப்பட்டது.

தற்காலிக திருப்புகை வழங்கும் போது, முறையான அதிகாரி இரண்டு விண்ணப்பங்களையும் செயலாக்கி இரண்டு விண்ணப்பங்களுக்கும் தற்காலிக திருப்புகை வழங்கியுள்ளார். அதாவது, ஒரே ARNக்கு, தற்காலிகத் திருப்புகை இரண்டு முறை வழங்கப்பட்டது. இதன் விளைவாக ₹ 25.31 இலட்சம் தற்காலிகத் திருப்புகை அதிகமாக செலுத்தப்பட்டது. செயலாக்கப் பயன்பாட்டு முறையானது கைமுறையிலிருந்து இணையதளத்திற்கு மாற்றப்பட்டுக் கொண்டிருந்த இடைப்பட்ட காலத்தில், அமைப்பனது ஏற்கனவே கைமுறையான திருப்புகை விண்ணப்பம் செயல்பாட்டில் இருந்த போதிலும், திருப்புகை வழங்குவதற்கான புதிய விண்ணப்பத்தையும் அனுமதித்துள்ளது. மேலும், ஏற்கனவே ஒதுக்கப்பட்ட ARNஐயே மீண்டும் வழங்கவும் இயலும். இந்த நேர்வில் ஏற்பட்ட குறைபாடு என்னவென்றால், தற்காலிக திருப்புகையின் இரட்டைக் கட்டணத்தை முறையான அதிகாரி அடையாளம் காணும் நிலையில் இல்லை, மேலும் இறுதிப் பணத்தை திரும்ப வழங்குவது சாதாரண நேர்வைப் போலவே செயல்படுத்தப்பட்டு வழங்கப்பட்டது. இருப்பினும், வரி செலுத்துநர் தானாக முன்வந்து அதிகப்படியான பணத்தைத் திரும்ப அளிக்கவில்லை என்றால், இரட்டிப்புத் திருப்புகை அடையாளம் காணப்பட்டிருக்காது. திருப்புகைகளை கையேட்டிலிருந்து 'இணைய வழி' செயலாக்கத்திற்கு மாற்றும் காலத்தில் வழங்கப்பட்ட அதிகப்படியான தற்காலிகத் திருப்புகையின் இதே போன்ற நேர்வுகள் ஏதேனும் இருந்தால், துறை அதனைக் கண்டறிந்து சரி செய்யவேண்டும்.

இது டிசம்பர் 2021ல் சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கான பதில் ஏதிர்நோக்கப்படுகிறது (ஏப்ரல்2022).

### 2.4.4 இணக்க குறைபாடுகள்

திருப்புகை இனங்களின் விரிவான தணிக்கையின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகளின் அளவு **அட்டவணை 2.2ல்** குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.2: தணிக்கையின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகளின் அளவு**

| தணிக்கை கண்டுபிடிப்புகளின் தன்மை | தணிக்கைக்கான மாதிரிகளின் எண்ணிக்கை | கண்டறியப்பட்ட குறைபாடுகளின் எண்ணிக்கை | மாதிரியின் விழுக்காடாக குறைபாடுகள் |
|---|---|---|---|
| ஒப்புகை வழங்கலில் தாமதம் | 704 | 126 | 17.90 |
| இறுதித் திருப்புகை வழங்கலில் தாமதம் | 704 | 71 | 10.09 |
| பூஜ்ஜிய மதிப்பீடு செய்யபட்ட விநியோகங்களில் தற்காலிக திருப்புகை வழங்கப்படாதது/ தாமதமாக வழங்கப்பட்டது | 359 | 190 | 52.92 |
| தகுதியான உள்ளீட்டு வரி வரவின் தவறான நிர்ணயத்தினால் ஏற்பட்ட அதிகப்படியான திருப்புகைகள் | 359 | 75 | 20.89 |
| பூஜ்ஜிய மதிப்பீடு விற்பனை அளவிற்கான வரிசெலுத்துவோருக்கு அளிக்கப்பட்ட அதிகப்படியான திருப்புகை | 359 | 50 | 13.93 |
| தலைக்கீழ் தீர்வை அமைப்பு இனங்களில் அளிக்கப்பட்ட அதிகப்படியான திருப்புகை | 292 | 45 | 15.41 |

மேலே உள்ள அட்டவணையில் உள்ளபடி 17.90 விழுக்காடு இனங்களில் ஒப்புகை வழங்குவதில் கணிசமான தாமதங்களையும் 10.09 விழுக்காடு இனங்களில் திருப்புகை செய்வதற்கான உத்தரவுகளை வழங்குவதில் குறிப்பிடத்தக்க தாமதங்களையும் தணிக்கை கண்டறிந்தது. 52.92 விழுக்காடு இனங்களில் தற்காலிக திருப்புகை செய்வதில் சிக்கல்/தாமதம் இருப்பதையும் தணிக்கை கண்டறிந்தது. மேலும், உள்ளீட்டு வரி வரவின் தவறான நிர்ணயம் காரணமாக வழங்கப்பட்ட அதிகப்படியான பணம், பூஜ்ஜிய-மதிப்பீடு செய்யப்பட்ட விற்பனை அளவு கொண்ட வரி செலுத்துநருக்கு வழங்கப்பட்ட அதிக திருப்புகை, தலைகீழ் தீர்வை அமைப்பு இனங்களில் விற்பனை அளவிற்கு வழங்கப்பட்ட அதிக திருப்புகை ஆகியவை முறையே 20.89, 13.93 மற்றும் 15.41 விழுக்காடாக இருந்தன.

### 2.4.4.1 ஒப்புகை வழங்குவதில் தாமதம்

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள், 2017ன் விதி 90(2), பணத்தைத் திருப்புகை செய்வதற்கான விண்ணப்பம் முறையான அதிகாரிக்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் அவர் அந்த விண்ணப்பத்தை தாக்கல் செய்த பதினைந்து நாட்களுக்குள் அதன் முழுமைக்காக ஆய்வு செய்து, முழுமையானதாகக் கண்டறியப்பட்டால், GST-RFD-02 படிவத்தில் ஒப்புகையை வழங்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கிறது.

மதிப்பீடு செய்யப் பட்ட 56[14] வட்டங்களில் 704 இனங்களில் 126ல் (17.90 விழுக்காடு), ஒப்புகை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதாக கண்டறியப்பட்டது. தாமதம் ஒன்று முதல் 118 நாட்கள் வரையாக இருந்தது. இதில், 125 இனங்களில் மூன்று மாதங்கள் வரையிலும், ஒரு நேர்வில் மூன்று மாதங்களுக்கும் மேலாகவும் தாமதமானது. எனவே, வழங்கப்பட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஒப்புகை வழங்குவதற்கான காலக்கெடுவை துறை கடைபிடிக்கவில்லை.

இதுசுட்டிக்காட்டப்பட்டபோது (செப்டம்பர் 2021 மற்றும்ஜனவரி 2022க்கு இடையில்), ஆறு[15] முறையான அதிகாரிகள் (அக்டோபர் 2021 மற்றும்பிப்ரவரி 2022க்கு இடையில்) கைமுறையிலிருந்து இணையதளத்திற்கு மாற்றுதலில் தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக தாமதம் ஏற்பட்டதாகக் கூறினர். மீதமுள்ள 50 வட்டங்களில் இருந்து பதில் ஏதிர்நோக்கப்படுகிறது (ஏப்ரல் 2022).

பணத்தைத் திருப்புகை செய்யும் ஒவ்வொரு கட்டத்திற்கும் ஒரு காலக்கெடு குறிப்பிட்டுள்ளதாலும், 15 நாட்களுக்குள் அதற்கான ஒப்புகை வழங்கப்பட வேண்டும் என்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாலும், தரப்பட்ட பதில் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

14 அடையாறு, அன்னூர், அனுப்பர்பாளையம், செங்கல்பட்டு, சித்தோடு, எட்டயபுரம், கணபதி, கிண்டி, கும்மிடிப்பூண்டி, துறைமுகம், ஒசூர்(வடக்கு)- I, ஒசூர் (வடக்கு)-II, ஒசூர்(தெற்கு)-II, கருமத்தம்பட்டி, கோட்டூர்புரம், குமாரம்பாளையம், மடிப்பாக்கம், மணலி, மறைமலைநகர், மயிலாப்பூர், நாமக்கல் (டவுன்), நந்தம்பாக்கம், நுங்கம்பாக்கம், நாகர்கோவில் (ஊரகம்), ஒரகடம், பி.என்.பாளையம், பல்லடம்-I, பல்லடம்-II, பள்ளிபாளையம், பீளமேடு (வடக்கு), பீளமேடு (தெற்கு), பெரியஅக்ரஹாரம், பொள்ளாச்சி, பாண்டி பஜார், பொங்கலூர், ராஜபாளையம்-II, ராணிப்பேட்டை சிப்காட், சைதாப்பேட்டை, சோழிங்கநல்லூர், ஸ்ரீபெரும்புதூர், தி.நகர், தஞ்சாவூர்-II, திருமழிசை, திருப்பத்தூர், திருவான்மியூர், திருப்பூர் (வடக்கு)-II, திருப்பூர் (ஊரகம்-I), திருப்பூர் (மத்தியம்)-II, திருப்பூர் கொங்கு நகர், திருப்பூர் லட்சுமி நகர், திருவள்ளூர், திருவொற்றியூர், திருச்சி சாலை, தூத்துக்குடி-I, வேலாண்டிபாளையம் மற்றும் விருதுநகர்-I.

15 ஒரகடம், ஸ்ரீபெரும்புதூர், தூத்துக்குடி-I, திருப்பூர் (வடக்கு) II, கோட்டூர்புரம் மற்றும் திருவான்மியூர்.

### 2.4.4.2 இறுதித் திருப்புகை செய்வதில் தாமதம்

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம், 2017ன் பிரிவு 54(7)ன் படி, அனைத்து வகையிலும் முழுமையான விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள் துணைப் பிரிவு (5)ன் கீழ் உரிய அதிகாரி உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும்.

36[16] வட்டங்களில் மதிப்பிடப்பட்ட 704 திருப்புகை செய்யப்பட்ட இனங்களில், 71ல் (10.09 விழுக்காடு) இறுதித் திருப்புகை செய்வதில் தாமதம் ஏற்பட்டதை தணிக்கை கண்டறிந்தது. தாமதமானது ஒன்று முதல் 179 நாட்கள் வரையிலாக இருந்தது. இதில், 61 இனங்கள் மூன்று மாதங்கள் வரையிலும், 10 இனங்கள், மூன்று மாதங்களுக்கும் மேலாக தாமதப்படுத்தப்பட்டன.

இது சுட்டிக் காட்டப்பட்டபோது (செப்டம்பர் 2021 மற்றும் ஜனவரி 2022க்கு இடையில்), கைமுறையிலிருந்து இணையதளத்திற்கு மாற்றுதலில் தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக தாமதம் ஏற்பட்டதாக ஐந்து[17] முறையான அதிகாரிகள் (அக்டோபர் 2021 மற்றும் பிப்ரவரி 2022க்கு இடையில்) தெரிவித்தனர். முறையான அதிகாரி, திருச்சி சாலை, கோவிட் பெருந்தொற்று காரணமாக தாமதம் ஏற்பட்டதாக (பிப்ரவரி 2022) கூறியுள்ளார். மீதமுள்ள 30 வட்டங்களில் இருந்து பதில் எதிர்நோக்கப்படுகிறது (ஏப்ரல் 2022).

பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான ஒவ்வொரு கட்டத்திற்கான காலக்கெடுவை சட்டம் குறிப்பிட்டுள்ளதாலும், பெருந்தொற்று காரணமாக இந்த காலக்கெடுவை தளர்த்துவதற்கான குறிப்பிட்ட உத்தரவுகள் எதுவும் பிறப்பிக்கப்படாததாலும் பதில் ஏற்கத்தக்கது அல்ல.

நிறைவுக் கூட்டத்தின் போது (மார்ச் 2022), ஒப்புகை மற்றும் இறுதிப் பணத்தைத் திருப்புகை செய்வதில் உள்ள தாமதம் பெருந்தொற்று காரணமாக ஏற்பட்டதாகவும், அத்தகைய தாமதங்கள் இப்போது கணிசமாகக் குறைந்துள்ளன என்றும் அரசு பதிலளித்தது.

### 2.4.4.3 பூஜ்ஜிய-மதிப்பீடு செய்யப்பட்ட விநியோகத்தின் மீதான தற்காலிகத் திருப்புகை வழங்கபடாமை /தாமதமாக வழங்கப்பட்டமை

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள், 2017ன் விதி 91(2) ன் படி, முறையான அதிகாரி பணக்கேட்பு கோரல் மற்றும் அதற்கு ஆதரவாகச் சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகளை ஆய்வு செய்தபின், *முதன்மை பார்வையில்* வரி செலுத்துபவர் கோரிய திருப்புகை தொகையானது 54ன் துணைபிரிவு (6)ன் விதிகளுக்கு இணங்கியிருப்பதாக கண்டறிந்தால், GST - RFD -04 படிவத்தில் ஒரு உத்தரவை உருவாக்கி, ஒப்புகையின் தேதியிலிருந்து ஏழு நாட்களுக்கு மிகாத காலத்திற்குள் தற்காலிக அடிப்படையில் திருப்புகை தொகையை அனுமதிக்க வேண்டும்.

---

16 அடையாறு, ஆம்பூர், கணபதி, கிண்டி, கும்மிடிப்பூண்டி, துறைமுகம், ஹரூர், ஒசூர் (வடக்கு)-I, ஒசூர் (வடக்கு)-II, கரூர்-I, கேளம்பாக்கம், LTU DC3, மடிப்பாக்கம்,மண்ணடி, மேலூர், மயிலாப்பூர், நந்தம்பாக்கம், நுங்கம்பாக்கம் ,ஒரகடம், பல்லடம்-II, பள்ளிபாளையம், பூந்தமல்லி, ராஜபாளையம்-II, ராணிப்பேட்டை சிப்காட், சோழிங்கநல்லூர், ஸ்ரீபெரும்புதூர், தி.நகர், திருப்பத்தூர், திருவான்மியூர், திருப்பூர்(ஊரகம்)-I, திருப்பூர் (மத்தியம்)-II, திருவள்ளூர், திருவொற்றியூர், திருச்சி சாலை, தூத்துக்குடி-I மற்றும் உடுமலைப்பேட்டை (தெற்கு).

17 ஒரகடம், ஸ்ரீபெரும்புதூர், தூத்துக்குடி-I, பார்க் ரோடு மற்றும் திருவான்மியூர்.

62[18] வட்டங்களில் மதிப்பிடப்பட்ட 359 பூஜ்ஜிய மதிப்பீடு செய்யப்பட்ட இனங்களில், 171ல் (47.63 விழுக்காடு), தற்காலிகத் திருப்புகைக்குத் தகுதியுடையதாக இருந்த போதிலும், தற்காலிகத் திருப்புகை எதுவும் வழங்கப்படவில்லை என்று தணிக்கை கண்டறிந்தது. மேலும், 19 (5.29 விழுக்காடு) இனங்களில், தற்காலிக திருப்புகை வழங்கப்பட்ட 15[19] வட்டங்களில், ஒப்புக்கை அளிக்கப்பட்ட நாளிலிருந்து, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவான ஏழு நாட்களைத் பின்னரே தற்காலிக திருப்புகை வழங்கப்பட்டது. தாமதம் ஒன்று முதல் 40 நாட்கள் வரையாக இருந்தது.

இது சுட்டிக்காட்டப்பட்டபோது (செப்டம்பர் 2021 மற்றும் ஜனவரி 2022க்கு இடையில்), முறையான அதிகாரி, திருவான்மியூர் (ஜனவரி 2022 ) தாமதத்திற்க்கு காரணம் தொழில்நுட்பக் கோளாறுகள் என்றும், பிப்ரவரி 2022ல் முறையான அதிகாரி, திருச்சி சாலை, தாமதத்திற்கு தனிப்பட்ட காரணங்கள் என்றும் கூறினார். மீதமுள்ள 13 வட்டங்களில் இருந்து பதில் எதிர்நோக்கப்படுகிறது (ஏப்ரல் 2022). தகுதியான இனங்களில் தற்காலிக திருப்புகை செய்யாதது தொடர்பான பதில் எதிர்நோக்கப்படுகிறது (ஏப்ரல் 2022).

சட்டரீதியாக குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் தற்காலிக அடிப்படையில் பணத்தைத் திருப்புகை செய்வது தொடர்பான சட்ட ஏற்பாடானது ‘வணிகம் செய்வதை எளிதாக்குதல்’ மற்றும் சம்பந்தப்பட்ட வணிகங்களுக்கு முடக்கப்பட்ட வருவாயை விரைவில் விடுவித்தல் என்ற அரசின் கொள்கையின் ஒரு பகுதியாக இருப்பதால் இந்த பதில் ஏற்கத்தக்கதாக இல்லை.

நிறைவுக் கூட்டத்தின் போது (மார்ச் 2022), தற்காலிக திருப்புகை செய்வதில் தாமதம் தொற்று நோய் காரணமாக ஏற்பட்டதாகவும், அத்தகைய தாமதங்கள் இப்போது கணிசமாகக் குறைந்துள்ளதாகவும் அரசு பதிலளித்தது.

### 2.4.4.4 தகுதிக்குரிய உள்ளீட்டு வரி வரவை தவறாக நிர்ணயம் செய்த காரணமாக அதிகப்படியான திருப்புகை செய்தல்

மத்திய மறைமுகவரிகள் மற்றும் சுங்கவாரியம் (Central Board of Indirect Taxes and Customs (CBIC)) செப்டம்பர் 2018ல் ஒரு விநியோகஸ்தரரின் உள்ளீட்டு வரி வரவு கோரலுக்கு, அதன் தொடர்புடைய வழங்குகைக் கணக்கிற்கு ஆதாரமாக வழங்கப்பட்ட GSTR 2A படிவத்தினை, முறையான அதிகாரி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தெளிவுபடுத்துகின்றது[20]. வணிகவரிகள் ஆணையர், ஜூன் 2020ல், ஒரு சுற்றறிக்கையை[21] வெளியிட்டார். அதில் திரட்டப்பட்ட

---

18 அடையாறு, அழகாபுரம், அம்பத்தூர்.ஐ.இ,ஆம்பூர், அனுப்பர்பாளையம், ஆத்தூர் (ஊரகம்), குரோம்பேட்டை, எழும்பூர், எட்டயபுரம், காந்திநகர், கிண்டி, கும்மிடிப்பூண்டி, துறைமுகம், ஹஸ்தம்பட்டி, கே.கே.நகர், கருமத்தம்பட்டி, கரூர்-II, கரூர்-III, கரூர்-IV, கேளம்பாக்கம், கோடம்பாக்கம், கொடுமுடி, கோட்டூர்புரம், குனியமுத்தூர், மதுரை (ஊரகம்) (தெற்கு), மதுராந்தகம், மேட்டுப்பாளையம் ரோடு, நங்கநல்லூர், நிலக்கோட்டை, நொளம்பூர், ஒரகடம், பி.என்.பாளையம், பல்லடம்-I, பட்டரவாக்கம், பேரூர், போதனூர், பொள்ளாச்சி ஊரகம், பொங்கலூர், பூந்தமல்லி, பேரூர், ராஜபாளையம்-I, ராணிப்பேட்டை சிப்காட், சிங்காநல்லூர் (வடக்கு)-I, தேனி-I, தேனி-II (ஆண்டிபட்டி), திருக்கழுகுன்றம், திருவான்மியூர், திருச்செங்கோடு ஊரகம், திருப்பூர் வடக்கு-I, திருப்பூர் வடக்கு-II, திருப்பூர் ஊரகம் -I, திருப்பூர் ஊரகம் -II, திருப்பூர் தெற்கு, திருப்பூர் பஜார், திருப்பூர் மத்தியம்-II, திருப்பூர் கொங்குநகர், திருப்பூர் லட்சுமிநகர், திருவேற்காடு, தூத்துக்குடி-I, தூத்துக்குடி-II, தூத்துக்குடி-III மற்றும் வேலாண்டிபாளையம்.

19 கிண்டி (ம), ஓசூர் (வடக்கு)-II, பெரிய வரி செலுத்துவோர் பிரிவு DC-III, மறைமலைநகர், மேலூர், மயிலாப்பூர், ஒரகடம், சோழிங்கநல்லூர், ஸ்ரீபெரும்புதூர், தி.நகர், திருவான்மியூர், திருவள்ளூர், திருச்சி சாலை, தூத்துக்குடி-I மற்றும் வேப்பேரி.

20 04 செப்டெம்பர் 2018 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.59/33/2018-GST.

21 20 ஜூன் 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண்10/2020-TNGST.

உள்ளீட்டு வரி வரவின் திருப்புகையினை, விநியோகஸ்தரால் GSTR 1ல் வழங்கப்பட்டு GSTR 2A படிவத்தில் பிரதிபலிக்கும் விவரங்களை உள்ளடிக்கிய விலைப்பட்டியலில் உள்ள உள்ளீட்டு வரி வரவு அளவிற்கு கட்டுப்படுத்த வேண்டும் என்று தெளிவு படுத்தியுள்ளார். தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள், 2017ன் விதி 42(1), விற்பனை அளவானது வணிக வருமானம், வணிக வருமானம் அல்லாத வருமானம், விலக்கு அளிக்கப்பட்ட வழங்குகைகளின் வருமானம் மற்றும் பூஜ்ஜிய மதிப்பிடப்பட்ட வழங்குகைகளின் வருமானம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும் பட்சத்தில் நிகர உள்ளீட்டு வரி வரவு கணக்கிடும் முறையை வரையறுக்கிறது. ஒவ்வொரு வகை விற்பனை அளவின் சுருக்கமும் தனித்தனியாக GSTR-3Bல் தெரிவிக்கப்பட வேண்டும் என்று விதி கட்டாயப்படுத்துகிறது. விதி 42(1)(k) தகுதியான உள்ளீட்டு வரி வரவு கணக்கிடுவதற்கான சூத்திரத்தை பரிந்துரைக்கிறது. விதி 42(1) (m) GSTR-3B ல் தகுதியற்ற உள்ளீட்டு வரி வரவை தள்ளுபடியினை கட்டாயமாக்குகிறது.

பூஜ்ஜிய மதிப்பிடப்பட்ட 359 இனங்களில் 75ல், முறையான அதிகாரிகள், விதி 42(1) (k)யைப் பயன்படுத்தி, GSTR-2Aல் தரப்பட்டுள்ள தகுதிக்குரிய உள்ளீட்டு வரி வரவின் அடிப்படையில் செலுத்த வேண்டிய திருப்புகையை கணக்கிடுவதற்குப் பதிலாக, பணத்தைத் திருப்புகை செய்வதற்கான விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளீட்டு வரி வரவின் படி அளவை கணக்கிட்டதை தணிக்கை கண்டறிந்தது. இதன் விளைவாக ₹ 366.88 கோடி அதிகமாகத் திருப்புகை செய்யப்பட்டது. வெவ்வேறு வகையான இனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

### அ) GSTR-2Aன் படி உள்ளீட்டு வரி வரவினை கணக்கிடாமை

(i) சென்னையில் அதிக வரி செலுத்துவோர் பிரிவு-IIIல் மதிப்பிடப்பட்ட ஒரு வரி செலுத்துநர், ஐந்து திருப்புகை விண்ணப்பங்கள் மூலம் ஏப்ரல் 2019, செப்டம்பர் 2019, அக்டோபர் 2019, நவம்பர் 2019 மற்றும் டிசம்பர் 2019 ஆகிய மாதங்களுக்கான பணத்தைத் திருப்புகை பெறுமாறு கோரியுள்ளார். கோரப்பட்ட மொத்தத் தொகை ₹ 723.61 கோடி. ₹ 49.67 இலட்சத்தை தள்ளுபடி செய்தபின் ₹ 723.11 கோடிக்கு முறையான அதிகாரி ஒப்பளிப்பு வழங்கினார். சரிபார்ப்பின்போது, GSTR-2A மற்றும் GSTR-3B தொகைகளுக்கு இடையே பொருந்தாத தொகைக்கு தள்ளுபடி வழங்கியும்[22] கூட, திருப்புகை அளித்த தினத்தின் நிலவரப்படி, GSTR-2Aல் மதிப்பீட்டாளரிடம் ₹ 535.33 கோடி மட்டுமே உள்ளீட்டு வரி வரவு தொகையாக இருந்ததை தணிக்கை கண்டறித்தது. விண்ணப்பித்த தேதியின்படி GSTR-2Aல் உள்ள தொகையின் அடிப்படையில் தணிக்கை தகுதியான உள்ளீட்டு வரி வரவை நிர்ணயித்து, தொகையை மீண்டும் கணக்கிட்டபோது, தகுதியான திருப்புகை ₹ 365.76 கோடி மட்டுமே எனக் கண்டறியப்பட்டது. மதிப்புகளைத் தவறாக பயன்படுத்தியதால் திருப்புகைக்குத் தகுதியான ₹ 365.76 கோடிக்கு எதிராக ₹ 723.11 கோடியை அனுமதிக்கப்பட்டு ₹ 357.35 கோடி அதிகப்படியாக திருப்புகை செய்வதாக அமைந்தது.

இது சுட்டிக் காட்டப்பட்ட போது (நவம்பர் 2021), மார்ச் 2022ல் பொருந்திய உள்ளீட்டு வரவுகளின் விவரங்களை முறையான அதிகாரி வழங்கினார். திருப்புகைக்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட தேதியன்று GSTR-2Aல் உள்ள உள்ளீட்டு வரி வரவு மட்டுமே திரும்பப் பெறத் தகுதியுடையது என்பதால்,

22 சிபிஐசி அறிவிப்புகள் 9.10.2019 தேதியிட்ட எண். 49/2019 மற்றும் 26.12.2019 தேதியிட்ட மத்திய வரி 75/2019-மத்திய வரி மூலம் சேர்க்கப்பட்ட சிஜிஎஸ்டி விதிகளின் விதி 36 (4).

அத்தேதியில், மார்ச் 2022ல் வழங்கப்பட்ட பொருந்திய உள்ளீடுகள் எடுத்துக்கொள்ளப்பட முடியாது.

நிறைவுக் கூட்டத்தில், பிந்தைய தணிக்கை நடத்தப்பட்டு முடிவுகள் தணிக்கைக்கு தெரிவிக்கப்படும் என்று அரசு பதிலளித்தது (மார்ச் 2022).

(ii) 22[23] வட்டங்களில் மதிப்பிடப்பட்ட 35 இனங்களில் வரிசெலுத்துநர் கோரும் உள்ளீட்டு வரி வரவின் அடிப்படையில் ₹ 32.01 கோடி திருப்புகை செய்யப்பட்டதை தணிக்கைக் கண்டறிந்தது. இருப்பினும், தணிக்கையானது GSTR-2Aல் உள்ள உள்ளீட்டின் அடிப்படையில், தகுதியான உள்ளீட்டு வரி வரவு திருப்புகை தேதியன்று நிர்ணயித்து, பணத்தை மீண்டும் கணக்கிட்டபோது, தகுதியான திருப்புகை ₹ 25.12 கோடி மட்டுமே எனக் கண்டறிந்து. மதிப்புகளைத் தவறாகப் ஏற்றுக் கணக்கிட்டதால், முறையான அதிகாரிகள் ₹ 32.01 கோடி திருப்புகை அளித்தனர். இதன் விளைவாக ₹ 6.89 கோடி கூடுதலாக திருப்புகை செய்யப்பட்டது. இது சுட்டிக் காட்டப்பட்டபோது (நவம்பர் 2021 மற்றும் ஜனவரி 2022க்கு இடையில்), முறையான அதிகாரி, அடையாறு (பிப்ரவரி 2022) வரிசெலுத்துநருக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டது என்று கூறினார். முறையான அதிகாரி, பல்லடம்-I (மார்ச் 2022) GSTR-2Aல் உள்ள உள்ளீட்டு வரி வரவு ₹ 2.10 கோடி என்று பதிலளித்தார்.திருப்புகை கோரிய தேதியன்று GSTR-2Aல் ₹ 1.98 கோடி மட்டுமே இருந்ததால் பதில் ஏற்கத்தக்கது அல்ல. எனவே திருப்புகையானது இந்தத் தொகை அளவிற்கு வரம்பிடப்பட்டிருக்க வேண்டும். மீதமுள்ள இருபது வட்டங்களிலிருந்து பதில் எதிர்நோக்கப்படுகிறது (ஏப்ரல் 2022).

### ஆ) GSTR-3Bன் படி தகுதியான உள்ளீட்டு வரி வரவை குறைக்காமை

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம், 2017ன் பிரிவு 39, ஒரு பதிவு செய்யப்பட்ட நபர், மின்னணு முறையில் மாதாந்திர வருமானத்தையும் உட்புற, வெளிப்புற வழங்குதல்களையும், முந்தைய மாதத்தில் கோரிய உள்ளீட்டு வரி வரவையையும் GSTR - 3B படிவத்தில் பொது வலை முகப்பு மூலம் வழங்க வேண்டும் என வலியுறுத்துகிறது.

கேளம்பாக்கம் மதிப்பீட்டு வட்டத்தில் மதிப்பிடப்பட்ட நேர்வில், ஒரு வரிசெலுத்துநர், ஏப்ரல் 2018 முதல் ஜூன் 2018 வரையிலான மூன்று மாதங்களுக்கு ₹ 1.17 கோடியை கோரியதன் பேரில் முறையான அதிகாரி, அதனை அனுமதித்தார் என்று தணிக்கை கண்டறிந்தது. இருப்பினும், GSTR-3Bல் உள்ள தொகையின் அடிப்படையில் கோரப்பட்ட தேதியன்றான தகுதியான உள்ளீட்டு வரி வரவை நிர்ணயித்து, மீண்டும் தணிக்கை கணக்கிட்டபோது, தகுதியான திருப்புகை ₹ 0.94 கோடி மட்டுமே எனக் கண்டறிந்தது. மதிப்புகளைத் தவறாகப் பயன்படுத்தி, முறையான அதிகாரி, ₹ 0.94 கோடிக்கு எதிராக ₹ 1.17 கோடியை அனுமதித்ததன் விளைவாக, ₹ 0.23 கோடி அதிகமாக திருப்புகை அளிக்கப்பட்டது.

---

23 அடையாறு, அனுப்பர்பாளையம், குடியாத்தம் (கிழக்கு), கும்மிடிபூண்டி, துறைமுகம், அரூர், ஹோசூர் (வடக்கு) -II, ஜே.ஜே. நகர், கிருஷ்ணகிரி-I, மதுராந்தகம், மறைமலைநகர், பல்லடம்-I, பொங்கலூர், பொன்னேரி, பூந்தமல்லி, சோழிங்கநல்லூர், தி.நகர், திருமழிசை, திருச்செங்கோடு ஊரகம், திருப்பூர் (வடக்கு) -II, திருப்பூர் (ஊரகம்) - I மற்றும் வேலண்டிபாளயம்.

இது நவம்பர் 2021ல் சுட்டிக்காட்டப்பட்டது. பதில் எதிர்நோக்கப்படுகின்றது (ஏப்ரல் 2022).

### இ) விதி 42(1)(k)ன் கீழ் தகுதியான உள்ளீட்டு வரி வரவு நிர்ணயம் செய்யப்படாமை

ஒரு வரி செலுத்துநர் உள்நாட்டு விநியோகம் மற்றும் ஏற்றுமதி செய்பவராக இருப்பின், 42(1)(k)ல் குறிப்பிடப்பட்டுள்ள சூத்திரத்தைப் பயன்படுத்தி உள்நாட்டு விநியோக விகிதத்திற்கான உள்ளீட்டு வரி வரவு கணக்கிடப்படுகிறது. மேலும், விதி 42(1) (m)ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் கோரப்படும் அதிகப்படியான உள்ளீட்டு வரி வரவு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

முறையான அதிகாரிகள், 18[24] வட்டங்களில் மதிப்பிடப்பட்ட 34 இனங்களில், விதி 42(1)( k)ல் குறிப்பிட்டுள்ள சூத்திரத்தை தகுதியான உள்ளீட்டு வரி வரவைத் தீர்மானிக்க பயன்படுத்தாமல், வரிசெலுத்துநரின் கோரிக்கையின் அடிப்படையிலேயே பணத்தைத் திருப்புகை செய்தனர். மதிப்புகளைத் தவறாக பயன்படுத்தியதால், முறையான அதிகாரிகள் திருப்புகைக்குத் தகுதியான ₹ 29.57 கோடிக்கு எதிராக ₹ 31.98 கோடியைத் அளித்தனர். இது, ₹ 2.41 கோடி அதிகமாக திருப்புகை செய்ய விளைந்தது. மேலும், ₹ 1.66 கோடி மதிப்பிலான உள்ளீட்டு வரி வரவு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாக உள்ளது.

இது ஜனவரி மற்றும் பிப்ரவரி 2022க்கு இடையில் சுட்டிக்காட்டப்பட்டது. பதில் எதிர்நோக்கப்படுகிறது (ஏப்ரல் 2022).

நிறைவுக் கூட்டத்தின் (மார்ச் 2022), மேற்குறிப்பிட்ட பத்திகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு ஒப்புக்கொண்டது மற்றும் தனிப்பட்ட நபருக்கான குறிப்பிட்ட பதில் அளிக்கப்படும் என்றும் பதிலளித்தது.

### 2.4.4.5 பூஜ்ஜிய-மதிப்பீடு செய்யப்பட்ட விற்பனை அளவு கொண்ட வரி செலுத்துநர்களுக்கு வழங்கப்பட்ட அதிகப்படியான திருப்புகை

சீர் செய்யபட்ட விற்பனை அளவானது, பூஜ்ஜிய-மதிப்பீடு செய்யப்பட்ட விநியோகங்கள் அல்லாத பிற விலக்கு அளிக்கப்பட்ட பொருட்களின் விநியோகத்தின் விற்பனை அளவைத் தவிர்த்து மற்ற அனைத்து விநியோகங்களின் மொத்தமாகும் என்று 89(4)(E) விதி குறிப்பிடுகிறது. GSTR-3B இந்த விதியின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட சீர்செய்யபட்ட வருவாயை பிரதிபலிக்கிறது. ஆய்வு செய்யப்பட்ட 359 இனங்களுள், 50ல், வருவாய்விவர அறிக்கையில் அறிவிக்கப்பட்ட சீர்செய்யப்பட்ட விற்றுமுதல் ஏற்றுக் கொள்ளாததால், தகுதியான தொகையைவிட கூடுதலாக ₹ 9.87 கோடி வழங்கப்பட்டுள்ளது. வெவ்வேறு வகையான இனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

### அ) பயன்படுத்தப்பட்ட உள்ளீட்டு வரி வரவு மற்றும் சீர்செய்யப்பட்ட விற்றுமுதலின் தவறான கணக்கிடல்

15[25] வட்டங்களில் மதிப்பிடப்பட்ட 20 இனங்களில் கோரப்பட்ட உள்ளீட்டு வரி வரவு மற்றும் சீர்செய்யப்பட்ட விற்றுமுதல் ஆகியவை வருவாய் விவர அறிக்கையில் அறிவிக்கப்பட்ட தொகைகளிலிருந்து வேறுபட்டதாக தணிக்கை கண்டறிந்தது.

24 ஆம்பூர், அனுப்பர்பாளையம், கரூர்-II, கரூர்-III, கரூர்-IV, மறைமலைநகர், நாமக்கல்டவுன், போத்தனூர், ராஜபாளையம்-I, ராஜபாளையம்-II, ராணிப்பேட்டை, திருப்பூர் மத்தியம்-II, திருப்பூர் கொங்குநகர், திருவள்ளூர், தூத்துக்குடி-II, தூத்துக்குடி-III, வேடசந்தூர் மற்றும் வேலாண்டிபாளையம்.

25 எட்டயபுரம், ஓசூர் (வடக்கு)- I, கரூர்-II, கரூர்-IV, கேளம்பாக்கம், கீழ்ப்பாக்கம், கோட்டூர்புரம், NSC போஸ் சாலை, சைதாப்பேட்டை, சோழிங்கநல்லூர், தேனி-II (ஆண்டிபட்டி), திருவான்மியூர், தூத்துக்குடி-I, தூத்துக்குடி-II மற்றும் வேளச்சேரி.

முறையான அதிகாரிகள், வருமான விவர அறிக்கையில் அறிவிக்கப்பட்ட தொகைகளை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, வரி செலுத்துநர் தங்கள் விண்ணப்பங்களில் செய்த கோரிக்கைகளின் அடிப்படையில் பணத்தைத் திருப்புகை செய்தனர். தகுதியான உள்ளீட்டு வரி வரவு மற்றும் சீர்செய்யப்பட்ட விற்பனை அளவு ஆகியவற்றின் தவறான ஏற்பு காரணமாக, முறையான அதிகாரிகள் வழங்கப்பட வேண்டிய ₹ 18.47 கோடிக்கு எதிராக ₹ 23.13 கோடி திருப்புகை செய்தனர். இது கூடுதலாக ₹ 4.66 கோடி வழங்குதலில் முடிந்தது. மேலும் ஏழு இனங்களில், ₹ 0.27 கோடி மதிப்பிலான உள்ளீட்டு வரி வரவின் தள்ளுபடி தேவைப்பட்டது.

இது சுட்டிக்காட்டப்பட்ட போது (நவம்பர் 2021 மற்றும் ஜனவரி 2022க்கு இடையில்), முறையான அதிகாரி, திருவான்மியூர், வரி செலுத்துநருக்கு விளக்க கேட்பு அறிக்கை பிப்ரவரி 2022ல் வழங்கப்பட்டிருப்பதாகவும், திருத்த அறிக்கை அனுப்பப்படும் என்றும் பதிலளித்தார் (பிப்ரவரி 2022). மீதமுள்ள 14 முறையான அதிகாரிகளின் பதில் எதிர்நோக்கப்படுகிறது. (ஏப்ரல் 2022).

### ஆ) தகுதியான உள்ளீட்டு வரி வரவு மற்றும் பூஜ்ஜிய மதிப்பீடு விற்றுமுதலின் தவறான கணக்கிடல்

ஆறு[26] வட்டங்களில் மதிப்பிபிடப்பட்ட ஆறு இனங்களில், வரி செலுத்துநர்களால் திருப்புகை செய்தல் விண்ணப்பங்களில் அளிக்கப்பட்ட உள்ளீட்டு வரி வரவு மற்றும் பூஜ்ஜிய மதிப்பிடப்பட்ட விற்பனை அளவின் தொகையானது விவர அறிக்கையில் கூறப்பட்ட தொகையிலிருந்து வேறுபட்டு இருப்பதை தணிக்கை கண்டறிந்தது. வருமான விவர அறிக்கையில் அறிவிக்கப்பட்ட உள்ளீட்டு வரி வரவு மற்றும் பூஜ்ஜிய - மதிப்பீடு செய்யப்பட்ட விற்பனை அளவு ஆகியவற்றை பயன்படுத்துவதற்குப் பதிலாக, விண்ணப்பங்களில் கோரப்பட்ட திருப்புகைத் தொகையின் அடிப்படையில் முறையான அதிகாரிகள் பணத்தைத் திருப்புகை செய்ததால், தகுதியான ₹ 18.56 கோடிக்கு எதிராக ₹ 21.59 கோடி திருப்புகை செய்தனர். இது கூடுதலாக ₹ 3.03 கோடி வழங்குதலில் முடிந்தது. மேற்கூறியவற்றுள் இரண்டு நேர்வுகளில், ₹ 1.00 கோடி மதிப்பிலான உள்ளீட்டு வரி வரவின் தள்ளுபடியும் தேவைப்பட்டது.

நவம்பர் 2021 மற்றும் பிப்ரவரி 2022க்கு இடையில் இது சுட்டிக்காட்டப்பட்டது. பதில் எதிர்நோக்கப்படுகிறது (ஏப்ரல் 2022).

### இ) சீர்செய்யப்பட்ட விற்றுமுதலின் சரியான தொகையை பயன்படுத்தாமை

17[27] வட்டங்களில் மதிப்பிடப்பட்ட 22 இனங்களில் வரி செலுத்துநர்களால் திருப்புகை செய்தல் விண்ணப்பங்களில் அளிக்கப்பட்ட சீர்செய்யப்பட்ட விற்பனை அளவின் தொகையானது விவர அறிக்கையில் கூறப்பட்ட தொகையிலிருந்து வேறுபட்டு இருப்பதைத் தணிக்கை கண்டறிந்தது. முறையான அதிகாரிகள் வருமான விவர அறிக்கையில் அறிவிக்கப்பட்ட, சரிசெய்யப்பட்ட வருவாயை பயன்படுத்துவதற்குப் பதிலாக, திருப்புகை செய்யும் விண்ணப்பத்தில் கோரப்பட்ட சீர்செய்யப்பட்ட விற்பனை அளவு அடிப்படையில் பணத்தைத் திருப்புகை செய்தனர். மறுக்கப்பட வேண்டிய தொகை ₹ 1.43 கோடியாக இருப்பினும் முறையான அதிகாரிகள், ₹ 0.04 கோடியை மட்டுமே மறுத்தனர். இதன் விளைவாக ₹ 1.39 கோடி கூடுதலாக திருப்புகை செய்யப்பட்டது.

---

26 கிண்டி, கும்மிடிப்பூண்டி, கீழ்பாக்கம், பாண்டிபஜார், சரவணம்பட்டி கிழக்கு, மற்றும் திருப்பூர் லட்சுமி நகர்.

27 அடையாறு, ஆம்பூர், குரோம்பேட்டை, எட்டயபுரம், ஒசூர் (வடக்கு)-I, கரூர்-III, கோட்டூர்புரம், நிலக்கோட்டை, ஒரகடம், பொள்ளாச்சி (ஊரகம்), சோழிங்கநல்லூர், திருப்பூர் (வடக்கு)-II, திருப்பூர்(ஊரகம்)-I, திருப்பூர் (தெற்கு), திருப்பூர் லட்சுமி நகர், திருச்சி சாலை மற்றும் தூத்துக்குடி-I.

இது சுட்டிக்காட்டப்பட்ட போது (நவம்பர் 2021 மற்றும் பிப்ரவரி 2022க்கு இடையில்) முறையான அதிகாரி, அடையாறு, பிப்ரவரி 2022ல் இரண்டு வரி செலுத்துநருக்கு நோட்டீஸ் பிப்ரவரி 2022ல் வழங்கப்பட்டதாகவும், உரிய நேரத்தில் தணிக்கைக்கு அறிக்கை அனுப்பப்படும் என்றும் பதிலளித்தார் (பிப்ரவரி 2022). மீதமுள்ள 16 முறையான அதிகாரிகளின் பதில் எதிர்நோக்கப்படுகிறது (ஏப்ரல் 2022).

**ஈ) தகுதியான உள்ளீட்டு வரி வரவு, பூஜ்ஜிய மதிப்பீடு செய்யப்பட்ட விற்றுமுதல் மற்றும் சீர்செய்ய்யப்பட்ட விற்றுமுதல் ஆகியவற்றின் தவறான கணக்கிடல்**

இரண்டு[28] வட்டங்களில் மதிப்பிடப்பட்ட இரண்டு நேர்வுகளில் வரி செலுத்துநர் தங்கள் பணத்தைத் திருப்புகை கோரும் விண்ணப்பங்களில் அளித்த தகுதியான உள்ளீட்டு வரி வரவு, பூஜ்ஜிய மதிப்பிடப்பட்ட விற்பனை அளவு மற்றும் சீர்செய்யப்பட்ட விற்பனை அளவு ஆகியவற்றின் அளவுகள் வருமான விவர அறிக்கையில் அறிவிக்கப்பட்ட தொகையிலிருந்து வேறுபட்டதாக தணிக்கை கண்டறிந்தது. முறையான அதிகாரிகள் இந்த விவரங்களை வருமான விவர அறிக்கையில் அளிக்கப்பட்டவைகளுடன் சரிபார்க்காமல், விண்ணப்பங்களில் வழங்கப்பட்ட விவரங்களின் அடிப்படையிலேயே கோரிக்கைகளை அனுமதித்தனர். மதிப்புகளைத் தவறாகப் பயன்படுத்தியதால், முறையான அதிகாரிகள், தகுதியான ₹ 0.53 கோடிக்கு எதிராக ₹ 1.32 கோடியை திருப்புகை செய்தனர். இதனால் ₹ 0.79 கோடி கூடுதலாக திருப்புகை செய்ய்யப்பட்டது.

நவம்பர் 2021 மற்றும் பிப்ரவரி 2022க்கு இடையில் இது சுட்டிக்காட்டப்பட்டது. பதில் எதிர்நோக்கப்படுகிறது (ஏப்ரல் 2022).

நிறைவுக் கூட்டத்தின் போது (மார்ச் 2022), மேற்குறிப்பிடப்பட்ட பத்திகளின் நடவக்கை எடுக்க அரசு ஒப்புக்கொண்டது. தனிப்பட்ட நேர்வுகளில் குறிப்பிட்ட பதில் அளிப்பதாகவும் கூறப்பட்டது.

### 2.4.4.6 தலைகீழ் தீர்வை கட்டமைப்பின் இனங்களில் வழங்கப்பட்ட அதிகப்படியான திருப்புகை

உள்ளீட்டு வரிவரவுகளைவிட வெளியீட்டு வரி குறைவாக இருப்பதால், தலைகீழ் வரிகட்டமைப்பின் காரணமாக திருப்புகை ஏற்படுகிறது. இந்த நேர்வுகளில், சேர்க்கப்பட்ட உள்ளீட்டு வரி வரவானது வெளியீட்டு வரியில் ஒரு போதும் சரிக்கட்டப்பட இயலாது.எனவே, அவற்றின் திருப்புகையை மட்டுமே கோர முடியும். தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம், 2017ன் விதி 89(4)(E), சேவைகளின் விற்பனை அளவு மற்றும் பூஜ்ஜிய மதிப்பீடு அல்லாத, பிற விலக்கு அளிக்கப்பட்ட பொருட்களின் மதிப்பைத் தவிர்த்து அனைத்து விநியோகங்களின் மொத்தத் தொகையினை சீர்செய்யப்பட்ட விற்பனை அளவு என்று பரிந்துரைக்கிறது. GSTR-3B இந்த விதியின் அடிப்படையிலேயே கணக்கிடப்பட்ட சரிசெய்யப்பட்ட வருவாயை பிரதிபலிக்கிறது. வெளியீட்டு வரியை விட அதிகமாக உள்ளீட்டு வரி மற்றும் பூஜ்ஜிய மதிப்பீடு அல்லது வரி முழுவதுமாக விலக்கப்பட்ட விநியோகம் ஆகியவற்றின் மூலம் சேர்த்து வைக்கப்பட்டு பயன்படுத்தப்படாத உள்ளீட்டு வரி வரவை பிரிவு 54ன் உட்பிரிவு (3)ன் கீழ் திருப்புகை கோரும் நேர்வுகளில், வரிக்காலத்தில் பெறப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட விலைப் பட்டியல்களின் எண்கள் மற்றும் தேதிகள் கொண்ட ஒரு அறிக்கை உடன் ஒரு திருப்புகைக்கான விண்ணப்பம் சமைப்பிக்கப்படலாம் என்று விதி 89(2)(h) அறிவுறுத்துகிறது. இந்த அறிக்கையில் மதிப்பிடப்பட்ட தொகை தலைகீழ் வரி விற்பனை அளவு ஆகும். GSTN தரவுகளின் பகுப்பாய்வு, கொடுக்கப்பட்ட விதிகளில், குறிப்பிடப்பட்டுள்ள முறையைப் பின்பற்றாததன்

28 மயிலாப்பூர் மற்றும் சோழிங்கநல்லூர்.

காரணமாக, தகுதியான தொகையை விட அதிகமாகத் திருப்புகை செய்ப்பட்டது என்பதைக் காட்டுகிறது.தலைகீழ் தீர்வை கட்டமைப்பில்சம்பந்தப்பட்ட 292 நேர்வுகளுள், 45ல், ₹ 9.89 கோடி அதிகமாகத் திருப்புகை செய்யப்பட்டது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வெவ்வேறு வகைகளின் இனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

**அ) சீர்செய்யப்பட்ட விற்றுமுதலின் தவறான ஏற்பு**

தணிக்கையில் ஒன்பது[29] வட்டங்களில், 11 இனங்களில், முறையான அதிகாரிகள் GSTR-3Bல் கொடுக்கப்பட்டுள்ள விற்பனை அளவுகளை, தகுதியான திருப்புகைப் பணத்தைக் கணக்கிட பயன்படுத்தவில்லை என்று தணிக்கை கண்டறிந்தது. பதிலாக, அவர்கள் தங்கள் திருப்புகை விண்ணப்பத்தில் வரி செலுத்துநர் கோரும் தொகையையே நம்பகமாகக் கொண்டிருந்தனர். இதன் விளைவாக, அவர்கள் ₹ 5.28 கோடிக்குப் பதிலாக ₹ 0.09 கோடியை மட்டுமே தள்ளுபடி செய்தனர். இதன் விளைவாக ₹ 5.19 கோடிக்கு கூடுதலாக திருப்புகை செய்யப்பட்ட்து.

இது சுட்டிக்காட்டப்பட்டபோது (டிசம்பர் 2021 மற்றும் பிப்ரவரி 2022க்கு இடையில்), முறையான அதிகாரி, அடையாறு, பிப்ரவரி 2022ல் வரி செலுத்துநருக்கு நோட்டீஸ் பிப்ரவரி 2022ல் வழங்கப்பட்டதாகவும், தணிக்கைக்கு அறிக்கை அனுப்பப்படும் என்றும் கூறினார் (பிப்ரவரி 2022) மீதமுள்ள எட்டு வட்டங்களில் இருந்து பதில் எதிர்நோக்கப்படுகிறது (ஏப்ரல் 2022).

**ஆ) தகுதியான உள்ளீட்டு வரி வரவினை தவறான கணக்கீடு மற்றும் தலைகீழ் வரி விற்றுமுதல் மற்றும் சீர்செய்யப்பட்ட விற்றுமுதல் ஆகியவற்றின் தவறான கணக்கிடல்**

13[30] வட்டங்களில் மதிப்பிடப்பட்ட 22 இனங்களில், முறையான அதிகாரிகள் வருமானவிவர அறிக்கையில் அறிவிக்கப்பட்டபடி உள்ளீட்டு வரி வரவினை பயன்படுத்தவில்லை மற்றும் விதிகள் 89(2) (h) மற்றும் 89(4) (E) ஆகியவற்றின் கீழ் அளிக்கப்பட்ட அறிக்கைகளின் படி சீர்செய்த விற்பனை அளவை பயன்படுத்தவில்லை என்று தணிக்கை கண்டறிந்தது. வருமான விவர அறிக்கையில் அறிவிக்கப்பட்ட உள்ளீட்டு வரி வரவு மற்றும் சீர்செய்யப்பட்ட விற்பனை அளவு ஆகியவற்றை பயன்படுத்துவதற்குப் பதிலாக, முறையான அதிகாரிகள் திருப்புகை விண்ணபத்தில் கோரப்பட்ட தொகைகளின் அடிப்படையிலேயே பணத்தைத் திருப்புகை செய்தனர். தலைகீழ் தீர்வை அளவு மற்றும் சீர்செய்யப்பட்ட விற்பனை அளவு ஆகியவற்றை தவறாக ஏற்றதன் காரணமாக, முறையான அதிகாரிகள் தகுதியான ₹ 9.44 கோடிக்கு பதிலாக ₹ 12.65 கோடியைத் திருப்புகை செய்ததன் விளைவாக ₹ 3.21 கோடி அதிகமாகத் திருப்புகை செய்யப்பட்டது.

இது டிசம்பர் 2021 மற்றும் ஜனவரி 2022க்கு இடையில் சுட்டிக்காட்டப்பட்டது. பதில் எதிர்நோக்கப்படுகிறது (ஏப்ரல் 2022).

29 அடையாறு, ஒசூர்(வடக்கு)-I, ஒசூர்(தெற்கு)-II, பெரியவரிசெலுத்துவோர்பிரிவு(DC-2), சென்னை, நாமக்கல் DC, நாமக்கல்டவுன், பள்ளிபாளையம், பூந்தமல்லிமற்றும்வெள்ளக்கோவில்.

30 ஒசூர், சித்தோடு, ஒசூர்(வடக்கு)-I, காங்கேயம், மேடவாக்கம், பள்ளிபாளையம், பீளமேடு (வடக்கு), பெரியஅக்ரஹாரம், பெருந்துறை, சாத்தூர், திண்டல், திருப்பூர் லட்சுமி நகர் மற்றும் திருப்பூர் கொங்குநகர்.

### இ) தலைகீழ் விற்றுமுதலின் தவறான கணக்கிடல்:

ஐந்து[31] வட்டங்களில் மதிப்பிடப்பட்ட ஐந்து இனங்களில், முறையான அதிகாரிகள் இந்த அறிக்கையிலிருந்து தலைகீழ் வரிவிற்பனை அளவினை ஏற்கவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது. வருமான விவர அறிக்கையில் அறிவிக்கப்பட்டதலைகீழ்வரி விற்றுமுதல் பயன்படுத்துவதற்குப் பதிலாக, முறையான அதிகாரிகள் திருப்புகை விண்ணப்பத்தில் கோரப்பட்ட தொகைகளின் அடிப்படையிலேயே திருப்புகை அனுமதித்தனர். தலைகீழ் வரிவிற்பனை அளவு தவறாக ஏற்கப்பட்டதால், திருப்புகை செய்ய தகுதியான தொகையான ₹ 1.12 கோடிக்குப் பதிலாக முறையான அதிகாரிகள் ₹ 1.78 கோடியைத் திருப்புகை செய்தனர். இதன் விளைவாக அதிகப்படியாக ₹ 0.66 கோடி திருப்புகை வழங்கப்பட்டது.

இது டிசம்பர் 2021 மற்றும் பிப்ரவரி 2022க்கு இடைப்பட்ட காலத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. பதில் எதிர்நோக்கப்படுகிறது (ஏப்ரல் 2022).

### ஈ) தலைகீழ் விற்றுமுதல் மற்றும் சீர்செய்யப்பட்ட விற்றுமுதல் ஆகியவற்றின் தவறான கணக்கிடல்

மதிப்பீடு செய்யப்பட்ட ஐந்து[32] வட்டங்களின் ஐந்து இனங்களில் முறையான அதிகாரிகள் விதி 89 (2)(h)ல் கொடுக்கப்பட்டுள்ளபடி, அறிக்கையின் தலைகீழ் தீர்வை அளவு பயன்படுத்தவில்லை மற்றும் GSTR-3Bன் படியான சீர்செய்யப்பட்ட விற்பனை அளவு பயன்படுத்தபடவில்லை என்று தணிக்கை கண்டறிந்து. முறையான அதிகாரிகள் மேற்கூறப்பட்ட இரண்டு விற்பனை அளவுகளையும் வருமான விவர அறிக்கை படி அல்லாமல் விண்ணப்பதாரரின் கோரலின் படி திருப்புகை செய்தனர். இதனால் தகுதியான ₹ 1.86 கோடிக்கு பதிலாக ₹ 2.52 கோடி திருப்புகை செய்யப்பட்டு, ₹ 0.66 கோடி அதிகமாக வழங்கப்பட்டது**.**

இதுசுட்டிக்காட்டப்பட்டபோது (டிசம்பர் 2021 மற்றும் பிப்ரவரி 2022க்கு இடையில்), முறையான அதிகாரி, திருப்பூர் வடக்கு- I, ₹ 72,498 மற்றும் அதனுடன் வட்டிப் பணமாக ₹ 13,586 வசூசீலிக்கப்பட்டது என்று பதிலளித்தார் (பிப்ரவரி 2022). முறையான அதிகாரி, வரியாகச் வசூலிக்கப்பட்ட உண்மையான தொகையான ₹ 66,940க்குப் பதிலாக, ₹ 6,69,040ஐ கழித்து கணக்கிட்டதால், மேலும் ₹ 2,48,299[33] வசூலிக்கப்பட உள்ளது. மீதமுள்ள நான்கு வட்டங்களில் இருந்து பதில் எதிர்நோக்கப்படுகிறது (ஏப்ரல் 2022).

### உ) தகுதியான உள்ளீட்டு வரி வரவின் தவறான கணக்கீடு மற்றும் சீர்செய்யப்பட்ட விற்றுமுதலின் தவறான ஏற்பு

பெருந்துறை மற்றும் வேலாண்டிபாளையம் வட்டங்களின் முறையான அதிகாரிகள், வருமான விவர அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளபடி, தகுதியான உள்ளீட்டு வரி வரவு மற்றும் சீர்செய்யப்பட்ட விற்பனை அளவை அடிப்படையாக ஏற்கவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது. தகுதியான உள்ளீட்டு வரி வரவு மற்றும்வருமான விவர அறிக்கையில் அறிவிக்கப்பட்ட சீர்செய்யப்பட்ட விற்பனை அளவு ஆகியவற்றை பயன்படுத்துவதற்குப் பதிலாக, முறையான அதிகாரிகள் திருப்புகை விண்ணப்பத்தில் கோரப்பட்ட தொகைகளின் அடிப்படையிலேயே திருப்புகை செய்ய அனுமதித்தனர். உள்ளீட்டு வரி வரவு மற்றும் சீர்செய்யப்பட்ட விற்பனை அளவுகளை, முறையான அதிகாரிகள் தவறாக பயன்படுதியதால், தகுதியான ₹ 0.33 கோடிக்குப் பதிலாக ₹ 0.50 கோடி வழங்கப்பட்டது. இது அதிகப்படியாக ₹ 0.17 கோடி திருப்புகை வழங்க ஏதுவானது.

---

31 அன்னூர், சித்தோடு, பழனி-I, ராயபுரம் மற்றும் வெள்ளக்கோவில்.

32 கரூர்-I, பள்ளிபாளையம், ராயபுரம், திருப்பூர் வடக்கு-I மற்றும் மேற்கு வெளி தெரு.

33 தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட ₹ 3,20,797க்கும் உண்மையில் PO மூலம் பெறப்பட்ட ₹ 72,948க்கும் உள்ள வேறுபாடு.

இது பிப்ரவரி 2022ல் சுட்டிக்காட்டப்பட்டது. பதில் எதிர்நோக்கப்படுகிறது (ஏப்ரல் 2022).

நிறைவுக் கூட்டத்தின் போது (மார்ச் 2022), இந்த பத்திகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு ஒப்புக்கொண்டு தனிப்பட்ட நேர்வுகளுக்கான தனிப்பட்ட பதில் அளிக்கப்படும் என்று பதிலளித்தது.

### 2.4.5 பிற குறைபாடுகள்

#### அ) மின்-கடன் பேரேட்டில் தாமதமாக எதிரீடு செய்யப்பட்ட தொகைக்கான வட்டியை வசூலிக்காதது

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள், 2017ன் விதி 89(3), "விண்ணப்பமானது உள்ளீட்டு வரி வரவின் திருப்புகை தொடர்பானதாக இருந்தால், மின்னணுகடன் பேரேட்டில் (ECL) விண்ணப்பதாரரால் திருப்புகையாகப் பெறப்பட்ட தொகைக்கு சமமான தொகை எதிரீடு செய்யப்படும்" என்று பரிந்துரைக்கிறது. தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம், 2017ன் பிரிவு 50(3), உள்ளீட்டு வரி வரவின் தாமதமான தள்ளுபடிக்கு, ஆண்டுக்கு 24 விழுக்காடு என்ற விகிதத்தில் வட்டிசெலுத்த பரிந்துரைக்கிறது.

திருவொற்றியூர் வட்டத்தில் மதிப்பிடப்பட்ட வரிசெலுத்துநர் ஒருவர், SEZ அலகு/SEZ மேம்படுத்துநர்க்கு வழங்கிய வரி விலக்கு விநியோகத்தின் பேரில், ஜுலை 2017 முதல் மார்ச் 2018 வரையிலான காலகட்டத்தின் பயன்படுத்தப்படாத உள்ளீட்டு வரி வரவு இறுதி திருப்புகை செய்யப்பட்டதைத் தணிக்கை கண்டறிந்தது. விண்ணப்பத்தை சமர்ப்பித்ததேதியான, 14 அக்டோபர் 2019 அன்று, திரட்டப்பட்ட உள்ளீட்டு வரி வரவை ECLல் எதிரீடு செய்யாததால், 27 ஆகஸ்ட் 2021 அன்று DRC-01 படிவத்தில் வணிகருக்கு ECLல் எதிரிடை செய்யாத ₹ 14.41 இலட்சத்தை ஆண்டுக்கு 24 விழுக்காடு வட்டியுடன் செலுத்துமாறு முறையான அதிகாரி, நோட்டீஸ் வழங்கினார். இதைப் பெற்றவுடன், வரி செலுத்துநர் 2021 செப்டம்பர் 02 அன்று ECLல், திருப்புகைத் தொகையான ₹ 14.41 இலட்சத்தை செலுத்தினார். இருப்பினும், 24 விழுக்காடு வட்டியை வரி செலுத்துநர் இன்னும் செலுத்தவில்லை. இது ₹ 6.62 இலட்சம்[34] என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இது செப்டம்பர் 2021ல் சுட்டிக்காட்டப்பட்டது. பதில் எதிர்நோக்கப்படுகிறது (ஏப்ரல் 2022).

#### ஆ) திருப்புகை செய்யும் உத்தரவுகளை, இணை வரி அதிகாரிகளுக்கு தெரிவிப்பதில் தாமதம்

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம், 2017ன்பிரிவு 54(7), அனைத்து வகையிலும் முழுமையான விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள் திருப்புகை செய்வதற்கான உத்தரவை வழங்க வலியுறுத்துகிறது. 21 டிசம்பர் 2017 தேதியிட்ட வாரிய சுற்றறிக்கை எண்.24/24/2017 படி தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் மத்தியவரி ஆணையம் அல்லது மாநிலவரி ஆணையத்தால் வழங்கப்பட்ட திருப்புகைக்கான உத்தரவை, அனுமதி அளிக்கப்பட்ட வரித் தொகை அல்லது வீதவரியை வழங்கும் பொருட்டு, சம்மந்தப்பட்ட இணை வரி அதிகாரிகளுக்கு ஏழு நாட்களுக்குள் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

மதிப்பீட்டு வட்டங்களால் அதன் இணை மத்திய வரி ஆணைய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட திருப்புகை ஒப்பளிப்பு உத்தரவுகளை ஆராய்ந்ததில், 2019-20ஆம்

34 14 அக்டோபர் 2019 முதல் செப்டம்பர் 2, 2021 வரை 24 விழுக்காடு.

ஆண்டில் தானியங்குகைக்கு முந்தைய காலகட்டத்தில் வழங்கப்பட்ட 7,554 திருப்புகை உத்தரவுகளில், ₹ 90.14 கோடியை உள்ளடக்கிய 301 திருப்புகை ஆணைகள், 1 முதல் 287 நாட்கள் வரை தாமதமாக வழங்கப்பட்டிருந்தது. இதில், 289 இனங்கள் மூன்று மாதங்கள் வரை தாமதமாகிவிட்டன, எட்டு இனங்கள் மூன்று முதல் ஆறு மாதங்கள் வரை தாமதமாகியுள்ளன, நான்கு இனங்கள் ஆறு மாதங்களுக்கும் மேலாக தாமதமாக அளிக்கப்பட்டிருந்தன.

இதே போல், மத்தியவரி ஆணையம், மாநிலத்திற்கு வழங்கிய திருப்புகை தொடர்பான தரவுகளை ஆய்வுசெய்ததில், தானியங்குகைக்கு முந்தைய காலகட்டம் தொடர்பான 6,715 திருப்புகை உத்தரவுகளில் ₹ 112.28 கோடி உள்ளடக்கிய 2,880 ஆணைகள் தாமதமாக அனுப்பப்பட்டன. தாமதம் 1 முதல் 848 நாட்கள் வரை இருந்தது. இதில், 2,705 இனங்கள் மூன்று மாதங்கள் வரையிலும், 128 இனங்கள் மூன்று முதல் ஆறு மாதங்கள் வரையிலும், 47 இனங்கள் ஆறு மாதங்களுக்கும் மேலாக தாமதப்படுத்தப்பட்டன.

இது மார்ச் 2022ல் சுட்டிக்காட்டப்பட்டது. பதில் எதிர்நோக்கப்படுகிறது (ஏப்ரல் 2022).

### இ) திருப்புகை கோரல்களின் பிந்தைய தணிக்கை தாமதமாக மேற்கொள்ளப்படல் /நடத்தாமல் இருத்தல்

தவறான திருப்புகைகளால் அரசு கருவூலத்திற்கு ஏற்படும் வருவாய் இழப்பைத் தவிர்ப்பதற்காக, திருப்புகை வழங்குதலின் பிந்தைய தணிக்கை வணிகவரித்துறையின் உள்கட்டுப்பாட்டு வழிமுறையின் ஒருமுக்கிய அங்கமாகும். பிந்தைய தணிக்கைகள் தவறாமல் நடத்தப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் முடிவுகளை மதிப்பிடும் அதிகாரிக்குத் தெரிவித்தால், திருப்புகை செய்வதில் உள்ள பல்வேறு குறைபாடுகள் கண்டறியப்பட்டு, அத்தகைய குறைபாடுகளில் கவனம் செலுத்த முறையான அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும். மேலும், ஏற்கனவே வழங்கப்பட்ட அதிகப்படியான திருப்புகையை மீட்க வழி வகுக்கலாம் அல்லது முன்கூட்டியே சரிசெய்யலாம். இது அரசு வருவாய்க்கு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

15 நவம்பர் 2017 தேதியிட்ட CCT சுற்றறிக்கை எண்17/17/2017-ஜிஎஸ்டி, கைமுறையாகச் செயலாக்கப்பட்ட திருப்புகை விண்ணபங்களின் சம்மந்தப்பட்ட தொகை எவ்வளவாயினும், தனிப்பட்ட விரிவான வழிகாட்டுதல்களை வாரியமானது வெளியிடும் வரை, அதன் முந்தைய தணிக்கை தேவையில்லை என்று குறிப்பிட்டுள்ளது. இருப்பினும், திருப்புகை உத்தரவுகளின் பிந்தைய தணிக்கை தற்போதுள்ள வழிகாட்டுதல்களின்படி தொடரும் என்று தெளிவுபடுத்தப்பட்டது. நிதியமைச்சகத்தால் வெளியிடப்பட்ட மார்ச் 1, 2005 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 809/6/2005-CXல், திருப்புகை உத்தரவுகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் பிந்தைய தணிக்கை முடிக்கப்பட வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 2019 முதல் மார்ச் 2020 வரையிலான காலகட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 504 திருப்புகை இனங்கள் அனைத்தும் திருப்புகை உத்தரவுகள் வழங்கப்பட்ட அதேநாளில் பிந்தைய தணிக்கைக்காகக் குறிக்கப்பட்டன என்பதை இணை ஆணையர் (IT) வழங்கிய தரவுகளிலிருந்து (பிப்ரவரி 2022) தணிக்கை கண்டறிந்தது. 157 இனங்களில் பிந்தைய தணிக்கை பரிந்துரைக்கப்பட்ட நேரத்திற்குள் முடிக்கப்பட்டது என்றும் 347 இனங்கள் (50 தானியங்கும் காலத்திற்கு முந்தையது மற்றும் 297 தானியங்குகைக்கு பிந்தையகாலம் தொடர்பானது). பிந்தைய தணிக்கை மூன்று மாதங்களுக்கு அப்பால் தாமதமாக

முடிக்கப்பட்டது என்றும் தரவுகள் வெளிப்படுத்தின. தாமதம் 41 நாட்கள்முதல் 849 நாட்கள் வரை இருந்தது. இவற்றில், எட்டு இனங்கள் மூன்று மாதங்கள் வரை தாமதமானது, 70 இனங்கள் மூன்று முதல் ஆறு மாதங்கள் வரை தாமதமானது மற்றும் 269 இனங்கள் ஆறு மாதங்களுக்கும் மேலாக தாமதமானது.

2019-20 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட ₹ 723.11 கோடியைத் திருப்புகை செய்வது தொடர்பான பத்தி 7.2.4 (அ)(i)ல் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து இனங்கள் தொடர்பான தணிக்கைக்கு பிந்தைய தணிக்கை அறிக்கை கோரப்பட்டபோது (மார்ச் 2022), சென்னையில் அதிக வரி செலுத்துநர் பிரிவு, முறையான அதிகாரி பதிலளிக்கையில் (மார்ச் 2022), 2019-20ல், அவர் வழங்கிய திருப்புகைக்கான பிந்தைய தணிக்கை நடப்பில் உள்ளது என்று கூறினார். இணை ஆணையர் (சிஸ்டம்ஸ்) மற்றும் முறையான அதிகாரி வழங்கிய பதில்கள் முரண்பாடாக இருப்பது, துறையில் உள்ளகக்கட்டுப்பாடு போதுமானதாக இல்லை என்பதையும், திருப்புகைக்கான பிந்தைய தணிக்கை மற்றும் அதன்மீதான உடனடி நடவடிக்கைக்கு முன்னுரிமை அளிக்கப்படவில்லை என்பதையும் வெளிப்படுத்துகிறது. பிந்தைய தணிக்கையை விரைவாக முடிப்பது, குறிப்பாக, கணிசமான அளவு திருப்புகை சம்பந்தப்பட்ட இனங்களில் முடிப்பது, முறையான அதிகாரிகள் திருப்புகை செய்வதற்கான உத்தரவுகளில் உள்ளகுறைபாடுகளை சரிசெய்து, அதன் மூலம் அரசின் வருவாயைப் பாதுகாக்க உதவும்.

நிறைவுக் கூட்டத்தின் போது (மார்ச் 2022), தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட இனங்களில், பிந்தைய தணிக்கை, முன்னுரிமை அடிப்படையில் செய்யப்படும் என்றும் அறிக்கை தணிக்கைக்கு அளிக்கப்படும் என்றும்அரசு பதிலளித்தது.

### 2.4.6 முடிவுரை

திருப்புகை கோரல் விண்ணப்பத்திற்கு ஏற்பு வழங்குதலில் தாமதங்கள் இருந்தன. அதேபொல், தற்காலிக திருப்புகை மற்றும் இறுதி திருப்புகைக்கான விண்ணப்பங்களிற்கு ஒப்பளிப்பு வழங்குவதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. திருப்புகைக்கான பல்வேறு கட்டங்களில் போதுமான கண்காணிப்பு இல்லாததால் பல இனங்களில் தற்காலிக திருப்புகை வழங்கப்படவில்லை. இதன் விளைவாக, ‘வணிகம் செய்வதை எளிதாக்குதல்’ மற்றும் சம்பந்தப்பட்ட வணிகங்களுக்கு முடக்கப்பட்ட வருவாயை விரைவில் விடுவித்தல் என்ற அரசின் கொள்கை முழுமையாக அடையப்படவில்லை. மானியம் தொடர்பான விற்பனை அளவிற்கு, உள்ளீட்டு வரி வரவை தள்ளுபடி செய்ய சட்டத்தில் வழி இல்லை. பல நேர்வுகளில், பூஜ்ஜியமாக மதிப்பிடப்பட்ட வருவாய் உடைய வரி செலுத்துநர் மற்றும் தலைகீழ் வரி, விற்றுமுதல் வரி செலுத்துநர் ஆகியோருக்கான தகுதியான உள்ளீட்டு வரி வரவு, விற்றுமுதல் மற்றும் சீர்செய்யப்பட்ட விற்பனை அளவு ஆகியவற்றின் சரியான மதிப்புகளைக் கணக்கிடுதலிலும் ஏற்பதிலும் முறையான அதிகாரிகள் தவறியதால், அதிக பணத்தை திருப்புகை செய்ய நேர்ந்தது. திருப்புகை தொடர்பான பிந்தைய தணிக்கை பற்றிய நம்பகமான தரவுகளை துறை கொண்டிருக்கவில்லை மற்றும் ஆய்வுக்கு பிந்தைய தணிக்கை அறிக்கைகள் அளிக்கப்படவில்லை.

### 2.4.7 பரிந்துரைகள்

அரசுக்கு பின்வருவன பரிந்துரைக்கப்படுகின்றது

- **மானியம் தொடர்பான விற்றுமுதலை பூஜ்ஜிய மதிப்பிலான விற்றுமுதலுக்கு நிகராக கருதி, விகிதாசாரமான உள்ளீட்டு வரி வரவினை தள்ளுபடி செய்ய பொருத்தமான விதிகளை அறிமுகப்படுத்த அல்லது தற்போதுள்ள விதிகளை திருத்துமாறு ஜிஎஸ்டிசியை வலியுறுத்த வேண்டும்.**

- பணத்தைத் திருப்புகை செய்யும் போது, தகுதியான உள்ளீட்டு வரி வரவு, விற்பனை அளவு மற்றும் சீர்செய்யப்பட்ட விற்பனை அளவு ஆகியவற்றின் சரியான அளவுகளை முறையான அதிகாரிகள் பயன்படுத்த துறை அறிவுறுத்த வேண்டும்.
- கணிசமான திருப்புகை அளித்தல் சந்தர்ப்பங்களில், முன்னுரிமை அடிப்படையில் பிந்தைய தணிக்கை நடத்தப்படுவதை உறுதிசெய்து, அறிக்கைகள் விரைவாக சமர்ப்பிக்கப்பட்டு, அறிக்கைகள் மீது நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட வேண்டும்.

# அத்தியாயம் -III

# முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம்

# அத்தியாயம் -III

## முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம்

### 3.1 நிதி நிர்வாகம்

இந்திய முத்திரைச் சட்டம், 1899 (IS சட்டம்) பதிவுச் சட்டம், 1908 மற்றும் அவற்றின் கீழ் அமைந்துள்ள விதிகள் ஆகியவற்றை பதிவுத் துறை நிர்வகிக்கிறது. பதிவுத் துறைத்தலைவர் இத்துறைக்கு தலைமை ஏற்கிறார். மூன்று முகாம் அலுவலகங்களுடன் 578 பதிவு அலுவலகங்களை உள்ளடக்கிய 50 பதிவு மாவட்டங்கள் மாநிலத்தில் உள்ளன. ஆவணங்களின்[1] பதிவு, முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் விதித்து வசூலித்தல், பதிவு அலுவலர்களின், அதாவது மாவட்டப் பதிவாளர்கள் / சார் பதிவாளார்களின் கடமையாகும். அரசு அளவிலான மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு, வணிக வரி மற்றும் பதிவுத்துறை செயலரால் மேற்கொள்ளப்படுகிறது.

### 3.2 உள் தணிக்கை

ஒரு நிர்வாகம், கொள்கைப்படுத்தப்பட்ட வழிமுறைகள் நன்கு செயல்படுகின்றனவா என அறிந்து உறுதிப் படுத்திக்கொள்வதில், அகதணிக்கை முக்கிய பங்கு வகிக்கிறது. பதிவு செய்யப்பட ஆவணங்கள் அனைத்தும் அகதணிக்கைக்கு உட்படுத்தப்படுவதற்கான செயல் முறை துறையிடம் உள்ளது. 45 தணிக்கை குழுக்கள் ஒவ்வொன்றும் மாவட்ட பதிவாளர் தலைமையில் இயங்குகின்றன. அனைத்து அலுவலகங்களின் தணிக்கையின் கால அளவு மாத அடிப்படையிலாகும். உள்தணிக்கையை திட்டமிட்டு நடத்துவதற்குத் தேவையான கட்டமைப்பு மற்றும் செயல்முறைகள் பற்றி பதிவுத் துறையின் கையேடு (பகுதி II) விளக்குகின்றது. உள் தணிக்கை வழிகாட்டுதலுக்காக உள்தணிக்கை கையேடு ஒன்றை, துறை தயாரித்து வெளியிட்டுள்ளது. உள்தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய மற்றும் மேற்கொள்ளப்பட்ட விவரங்கள் **அட்டவணை 3.1**ல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.1: உள்தணிக்கை குறித்த விவரங்கள்**

| ஆண்டு | உள்தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய அலுவலகங்களின் எண்ணிக்கை | உள்தணிக்கை மேற்கொள்ளப்பட்ட அலுவலகங்களின் எண்ணிக்கை | உள்தணிக்கையின் நிலுவை | நிலுவையின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| 2016-17 வரை | 6,991 | 5,265 | 1,726 | 25 |
| 2017-18 | 2,426 | 1,916 | 510 | 21 |
| 2018-19 | 3,817 | 3,038 | 779 | 20 |
| 2019-20 | 6,624 | 5,767 | 857 | 13 |
| 2020-21 | 6,594 | 6,141 | 453 | 7 |
| மொத்தம் | **26,452** | **22,127** | **4,325** | |

(ஆதாரம்: துறை அளித்த பதிலுரைகள்)

1 எந்தெந்த பத்திரங்கள் மூலம் அதிகாரம் அல்லது பொறுப்பு உருவாதல், மாறுதல், கூடுதல், மறைதல் அல்லது பதிவாதல் ஏற்படுகின்றதோ அல்லது ஏற்படும் சூழ்நிலை எழுகிறதோ அவை அனைத்தும் "ஆவணங்கள்" என கருதப்படுகின்றன.

தணிக்கை பதிவாளர்களின் காலியிடமே, உள்தணிக்கை குறைவாக மேற்கொள்ளப்பட்டதற்கான காரணமென்று தெரிவித்த துறை, நிலுவைகளை சரிசெய்ய சிறப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும் இதனால் அதிக அலுவலகங்களில் தணிக்கை நடைபெறுகிறதாகவும் தெரிவித்தது. எனினும், இன்னும் 4,325 தணிக்கைகள் நிலுவையிலிருப்பதால், அனைத்து அலுவலக உட்தணிக்கைகளும் குறித்த காலவரையில் முடிவுற துறை தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

31 மார்ச் 2021 அன்று, ₹ 193.64 கோடி மதிப்புடைய 43,360 பத்திகள் **அட்டவணை 3.2**ல் விவரிக்கப்பட்டுள்ளவாறு நிலுவையில் இருந்தன.

**அட்டவணை 3.2: உள் தணிக்கை குறிப்புகளின் விவரங்கள்**

**(₹ கோடியில்)**

| ஆண்டு | ஆரம்ப இருப்பு | | எழுப்பபட்ட தணிக்கை குறிப்புகள் | | தீர்க்கப்பட்ட தணிக்கை குறிப்புகள் | | நிலுவையிலுள்ள தணிக்கை குறிப்புகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | இனங்களின் எண்ணிக்கை | தொகை | இனங்களின் எண்ணிக்கை | தொகை | இனங்களின் எண்ணிக்கை | தொகை | இனங்களின் எண்ணிக்கை | தொகை |
| 2016-17 வரை | 21,249 | 88.12 | 27,147 | 67.09 | 25,798 | 58.90 | 22,598 | 96.31 |
| 2017-18 | 22,598 | 96.31 | 24,078 | 60.16 | 16,354 | 39.49 | 30,322 | 116.98 |
| 2018-19 | 30,322 | 116.98 | 17,106 | 41.66 | 13,213 | 25.21 | 34,215 | 133.43 |
| 2019-20 | 34,215 | 133.43 | 15,642 | 32.16 | 11,176 | 8.41 | 38,681 | 157.18 |
| 2020-21 | 38,681 | 157.18 | 15,467 | 84.67 | 10,788 | 48.21 | 43,360 | 193.64 |

(ஆதாரம்: துறை அளித்த பதிலுரைகள்)

1992-93 முதல் நிலுவையில் உள்ள பழைய பத்திகளை தீர்ப்பதற்கு தணிக்கைக் குழுக்களை ஏற்படுத்தி துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

## 3.3 தணிக்கை மேற்கொண்ட முறை மற்றும் தணிக்கையின் முடிவுகள்

2020-21-ஆம் ஆண்டில், பதிவுத் துறையில்646[2] தணிக்கை மேற்கொள்ளப்படவேண்டிய அலகுகள் இருந்தன. 2019-20-ஆம் ஆண்டின் அலகு வருவாய் நிலை, பதிவுற்ற பத்திரங்கள்/ஆவணங்கள் மற்றும் பத்திரம்/ஆவணம் மூலம் வருவாய் ஆகியவற்றின் அடிப்படையில், அலகுகள், அதிக, இடை நிலை மற்றும் குறைந்த இடர் நிகழ்வதற்கான வாய்ப்புகள் கொண்டவை என வகைபடுத்தப்பட்டன. 646 தணிக்கை மேற்கொள்ளவேண்டிய அலகுகளில் 53-ல் (8.20 விழுக்காடு) தேர்வு ஆய்வு (செப்டம்பர் 2020 முதல் மார்ச் 2021 வரை) செய்யப்பட்டன. தெரிவாய்வு செய்யப்பட்ட அலகுகளின் வருவாய் ₹ 4,762.37 கோடியாக, அதாவது, துறையின், 2019-20 ஆம் ஆண்டின் மொத்த வருவாயான, ₹ 10,855.65 கோடியில் 43.87 விழுக்காடாக இருந்தது.

மதிப்பீடு மற்றும் ஏனைய பதிவுருக்களின் தெரிவாய்வு, முறையற்ற/தவறான நில மற்றும் கட்டிட மதிப்பீடு மற்றும் தவறாக வகைப்படுத்தப்பட்ட பத்திரங்கள்

2 பதிவுத் துறைத் தலைவர் அலுவலகம் (1), துணை பதிவுத் துறைத் தலைவர்களின் அலுவலகங்கள் (9), மாநில வருவாய் அலுவலகங்கள் (முத்திரை) (2), சிறப்பு துணை மாவட்ட அலுவலகங்கள் (9), மாவட்ட பதிவாளர் அலுவலகங்கள் (50) மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்கள் (575).

காரணமாக விற்பனை, குத்தகை, கிரைய ஒப்பந்தம், அதிகாரப் பத்திரம், விற்பனைச் சான்று, விடுதலை மற்றும் பாகபரிவர்த்தனை ஆவணங்களில், 486 நேர்வுகளில் ₹ 127.69 கோடி மதிப்புள்ள, குறைவாக விதிக்கப்பட்ட முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்களை வெளிப்படுத்தியது. வகைப்படுத்தப்பட்ட தணிக்கைப் பத்திகளின் விவரங்கள் **அட்டவணை 3.3**-ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.3: 2020-21க்கான வகைப்படுத்தப்பட்ட தணிக்கைக் குறிப்புகள்**

**(₹ கோடியில்)**

| வரிசை எண் | வகை | இனங்களின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1 | பதிவுத் துறையில் "இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 47-A-ன் கீழ் மதிப்பிடப்பட்டு முடிக்கப்பட்ட ஆவணங்கள்" என்ற தலைப்பில் இணக்கத் தணிக்கை | 1 | 0 |
| 2 | ஆவணங்கள் குறைவாக மதிப்பிடப்பட்ட இனங்கள் | 8 | 6.43 |
| 3 | ஆவணங்களை தவறாக வகைப்படுத்தப்பட்ட இனங்கள் | 260 | 46.25 |
| 4 | கூடுதலாக / தவறாக ஒதுக்கீடு செய்யப்பட்ட மாறுதல் தீர்வை மிகுவரி கொண்டவை | 47 | 6.06 |
| 5 | ஏனையவை | 170 | 68.95 |
| | மொத்தம் | **486** | **127.69** |

2004-05 முதல் 2016-17 வரையிலான காலத்தில் சுட்டிக்காட்டப்பட்ட ஆறு நேர்வுகளில், ₹ 5.39 இலட்சம் தொகைக்கான குறைவு மதிப்பீட்டையும் மற்றும் பிற குறைபாடுகளையும் துறை, 2020-21ல், ஏற்றுக்கொண்டது.

தணிக்கை சுட்டிக்காட்டியபடி ஒரு வரைவு பத்தி சம்பந்தமாக, ₹ 25 இலட்சம், ஜூன் 2021-ல் வசூலிக்கப்பட்டதாக மார்ச் 2022ல் அரசு பதிலளித்தது.

பதிவுத் துறையில் "இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு, 1899, பிரிவு 47-A-ன் கீழ் மதிப்பிடப்பட்டு முடிக்கப்பட்ட ஆவணங்கள்" என்ற தலைப்பில் இணக்கத் தணிக்கை மற்றும் ₹ 4.82 கோடி மதிப்பை உட்படுத்திக் கொண்ட சிற்சில எடுத்துக்காட்டுகள் ஆகியவை பின்வரும் பத்திகளில் இடம் பெற்றுள்ளன.

## 3.4 பதிவுத் துறையில் "இந்திய முத்திரைச் சட்டம் 1899, பிரிவு 47-A-ன் கீழ் மதிப்பிட்டு முடிக்கப்பட்ட ஆவணங்கள்" என்ற தலைப்பில் இணக்கத் தணிக்கை

### 3.4.1 முன்னுரை

எந்தவொரு விற்பனை, பரிமாற்றம், பரிசு, பினாமி பெயரில் விடுதலை அல்லது தீர்வு ஆவணம் / பத்திரம் பதிவு செய்கையில், பதிவு செய்யும் அலுவலர் அப்பத்திரத்தில் சொத்தின் உண்மையான சந்தை மதிப்பு தெரிவிக்கப்படவில்லை என கருதினால், அப்பத்திரத்தைப் பதிவு செய்த பின் அதனை இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவு 47-A(1)-ன் கீழ் சரியான சந்தை மதிப்பீட்டிற்காக ஆட்சியருக்கு அனுப்பலாம். மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை)ஆகியோர் சொத்தின் சந்தை மதிப்பை நிர்ணயிப்பதற்கான "ஆட்சியர்" என நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆட்சியர், ஆவணம் பதிந்து ஐந்து ஆண்டுகளுக்குள் சட்டப்பிரிவு 47-A (3)-ன் கீழ், தானாகவோ பிற காரணங்களுக்காகவோ பதிவு அலுவலரின் மதிப்பீட்டை மறுஆய்வு செய்யலாம். மதிப்பீட்டை எதிர்த்து, ஆவணதாரர்கள்

சட்டப்பிரிவு 47-A (5)-ன் கீழ் தலைமை கட்டுப்பாட்டு வருவாய் அதிகாரியிடம் முறையிடலாம். தலைமை கட்டுப்பாட்டு வருவாய் அதிகாரியும், ஆட்சியரின் மதிப்பீட்டை சட்டப்பிரிவு 47-A(6) மூலம் தன்னிச்சையாக சீராயலாம். பதிவுத் துறை ஆய்வுத் தலைவரே தற்போது தலைமை கட்டுப்பாட்டு வருவாய் அதிகாரியாகவும் பதவி வகிக்கிறார்.

### செயல்முறை அமைப்பு

சட்டப்பிரிவு 47-A (1)-ன் கீழ் உள்ள ஆவணங்கள், மாநில அளவில், மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)[3] தலைமையில் இரண்டு அலுவலகங்கள் மற்றும் சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை)[4] தலைமையில் ஒன்பது அலுவலகங்கள் ஆக, மொத்தம் மாநிலத்தில் இயங்கும் 11 அலுவலகங்களுக்கு அனுப்பப்படுகின்றன. சொத்துக்களை மதிப்பிடுவதில் வட்டாட்சியர்கள் மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோருக்கு உதவி புரிகின்றனர்.

### தணிக்கை நோக்கங்கள்

இத்தணிக்கை கீழ்க்காணும் காரணங்களுக்காக மேற்கொள்ளப்பட்டது:

- சட்டப்பிரிவு 47-A (1)-ன் கீழ் அனுப்பப்படும் இனங்கள் பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றி, விதிக்கப்பட்ட கால வரைமுறைக்குள் மதிப்பீடு செய்யப்பட்டனவா மற்றும் கேட்புகள் எழுப்பப்பட்டு வசூலிக்கப்பட்டனவா என்று அறிதல்.
- உட்கட்டுப்பாட்டு நுட்பங்கள் செயல்பட்டனவா மற்றும் பயனளித்தனவா என அறிதல்.

### தணிக்கை அளவுகோல்கள்

தணிக்கையின் நோக்கம் மற்றும் அளவுகோல்கள் பின்வருவனவற்றிலிருந்து பெறப்பட்டன:

- இந்திய முத்திரைச் சட்டம், 1899;
- தமிழ்நாடு முத்திரை (ஆவணங்கள் குறைத்து மதிப்பிடுதலைத் தடுத்தல்) விதிகள், 1968 மற்றும் பதிவுச் சட்டம், 1908 மற்றும்
- துறையால் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் மற்றும் சுற்றறிக்கைகள்.

### தணிக்கையின் பரப்பு மற்றும் முறைமை

ஜூலை முதல் டிசம்பர் 2021 வரை நடைபெற்ற இத்தணிக்கையில், இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவு 47-A(2)-ன் கீழ் 1 ஏப்ரல் 2018 முதல் 31 மார்ச் 2021 வரை மதிப்பீட்டுக்குள்ளான ஆவணங்கள் மற்றும் அவை சார்ந்த பதிவுருக்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இக்காலவரையில், தணிக்கைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 11 அலுவலங்களில் ₹ 643.82 கோடி குறைவான முத்திரை வரியை உள்ளடக்கிய மொத்தம் 31,767 ஆவணங்கள் இறுதி செய்யப்பட்டன. மேலும், மார்ச் 2021 முடிவுறுகையில், இந்த மொத்த 11 அலுவலகங்களிலும் 2,268 ஆவணங்கள், பிரிவு 47-A(1)-ன் கீழ் முடிவுறாமலிருந்தன. இவற்றுள், தணிக்கைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட

---

3 சென்னை மற்றும் கோவை.

4 கடலூர், மதுரை, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி, வேலூர்மற்றும்விருதுநகர்.

ஆறு அலுவலகங்களில் 1,993 ஆவணங்கள் மதிப்பிடப்படாமல் நிலுவையிலிருந்தன.

தணிக்கை, மாவட்ட வருவாய் அலுவலரின் (முத்திரை) இரண்டு[5] அலுவலகங்களையும், சிறப்பு துணை ஆட்சியரின் (முத்திரை) கீழ் இயங்கும் ஒன்பது அலுவலகங்களில் நான்கையும்[6] தெரிந்தெடுத்தது. வரவு, செயலாக்கம் மற்றும் ஆவண இறுதியாக்கம் தொடர்பான தரவுகள் தணிக்கைக்குட்பட்ட அலுவலகங்களில் கைமுறையாகவே பராமரிக்கப்பட்டன. எனவே, தணிக்கை கால வரையில், அனைத்து ஆவண இறுதியாக்கம் தொடர்பான தரவுகளும் இவ்வலுவலகங்களிடமே பெறப்பட்டு அவை சரிபார்க்கப்பட்டு தெரிந்தெடுக்கப்பட்டன. தணிக்கை காலவரையில் பிரிவு 47-A(1)ன் கீழ் DRO (முத்திரை) / SDC (முத்திரை) ஆகியோருக்கு அனுப்பப்பட்டு, இறுதியாக்கப்பட்ட, மொத்தம் 19,942 ஆவணங்களில், தெரிந்தெடுக்கப்பட்ட ஆறு அலுவலகங்களில், 2,222 ஆவணங்கள் (11.14 விழுக்காடு), அடுக்கு மாதிரி முறையில் தேர்ந்தெடுகப்பட்டன. இதன் விவரங்களை **அட்டவணை 3.4-ல்** காணலாம்.

**அட்டவணை 3.4 : 2018-19 முதல் 2020-21 வரை முடிவுசெய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் தணிக்கைக்கான ஆவண தெரிந்தெடுப்பு**

| வ. எண் | அலுவலகம் | பிரிவு 47-A(2)*-ன் கீழ் இறுதியாக்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை | தணிக்கைக்கு தெரிந்தெடுத்த ஆவணங்களின் எண்ணிக்கை | தெரிந்தெடுத்-தவற்றின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை), சென்னை | 4,393 | 542 | 12.34 |
| 2 | மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை), கோயம்புத்தூர் | 3,790 | 512 | 13.51 |
| 3 | சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை), சேலம் | 3,196 | 307 | 9.61 |
| 4 | சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை), திருச்சிராப்பள்ளி | 2,823 | 239 | 8.47 |
| 5 | சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை), திருநெல்வேலி | 1,887 | 285 | 15.10 |
| 6 | சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை), வேலூர் | 3,853 | 337 | 8.75 |
| | மொத்தம் | **19,942** | **2,222** | **11.14** |

(ஆதாரம்: துறை அளித்த விவரங்கள்)

தொடர்புடைய பதிவுருக்களை சோதனை செய்ய, தணிக்கை, பதிவுத்துறை ஆய்வுத் தலைவர் அலுவலகம் மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் வருகை புரிந்தது. சென்னை பதிவுத்துறை ஆய்வுத் தலைவர் அலுவலகத்தில், தணிக்கை, அதன் காலவரையில் செயல்படுத்தப்பட்ட 275 முறையீட்டு இனங்களை ஆய்வு செய்தது. 2 ஜூலை 2021 அன்று நடைபெற்ற நுழைவு கூட்டத்தில் தணிக்கையின் நோக்கம், அளவுகோல், பரப்பு மற்றும் முறைமை குறித்து அரசு செயலர், வணிக வரி மற்றும் பதிவுத்துறை, அவர்களுக்கு விளக்கவுரை அளிக்கப்பட்டது. இறுதிக் கூட்டம் 29 மார்ச் 2022 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூறப்பட்ட கருத்துரைகள் மற்றும் அரசு அளித்த பதிலுரை தணிக்கை அறிக்கையில் தகுந்தவாறு உட்புகுத்தப்பட்டுள்ளன.

5 சென்னை மற்றும் கோவை.

6 சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர்.

ஏற்பு

தணிக்கையின் சீரான செயல்பாட்டுக்கு பதிவுத் துறை அளித்த ஒத்துழைப்பை தணிக்கை நினைவு கூறுகிறது.

### 3.4.2 தணிக்கை கண்டுபிடிப்புகள்

கள ஆய்வின் போது, தணிக்கை, தெரிந்தெடுக்கப்பட்டுமற்றும் சரி பார்க்கப்பட்ட தரவுகளை, மூலப் பதிவுருக்களோடு ஒப்பிட்டு ஆய்வு செய்தது; முதன்மை பதிவேட்டிலிருந்து பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு மற்றும் சரிபார்ப்பில் கண்டறிந்தவை பின்வருமாறு:

#### 3.4.2.1 குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் தேர்வு மற்றும் இறுதியாக்க முறையில் தாமதம்

தமிழ்நாடு முத்திரை (ஆவணங்களில் குறைவு மதிப்பினைத் தடுத்தல்) விதிகள், 1968-ன் விதி 4-ல் பரிந்துரைக்கப்பட்டுள்ள செயல்முறையின் படி, இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 47-A(1)-ன் கீழ், ஆவணங்கள் பெறப்பட்ட 15 நாட்களுக்குள் ஆவணதாரருக்கு படிவம்-I அறிக்கை அனுப்பி, பதிலுரை கோர வேண்டும். ஆவணதாரரின் பதிலுரையையும் கருத்தில் கொண்டு விதி 5-ன் படி தற்காலிக சந்தை மதிப்பு நிர்ணயித்த பின், விதி 6ன் படி படிவம்-II-ல் தற்காலிக மதிப்பு நிர்ணயம் பற்றியும் இதன் விளைவான வித்தியாச முத்திரைத் தீர்வையையும் ஆவணதாரருக்கு தெரிவிக்க வேண்டும். இதன் பின்னர் ஆவணதாரருக்கு வித்தியாச முத்திரைத் தீர்வையை செலுத்துமாறு இறுதியாணை பிறப்பித்து கேட்புத் தாக்கல் அளிக்க வேண்டும். விதி 7-ன் படி, படிவம்-I அனுப்பப்பட்டு மூன்று மாதங்களுக்குள் இறுதியாணை பிறப்பித்தல் வேண்டும்.

தெரிந்தெடுக்கப்பட்ட அலுவலகங்களில், 2,222 ஆவணங்களை பகுப்பாய்வு செய்ததில், 537 இனங்களில், படிவம்-I அனுப்பிய பின், சந்தை மதிப்பு நிர்ணயம் செய்ததில் அதிக தாமதம் நிகழ்ந்தது கண்டிபிடிக்கப்பட்டது. விவரங்கள் **அட்டவணை 3.5**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.5: படிவம்-I அனுப்பியபின் சந்தை மதிப்பு நிர்ணயிப்பதில் தாமதம்**

| வ எ ண் | படிவம்-I அனுப்பியபின் தாமதத்தின் கால அளவு (பரிந்துரைக்கப்பட்ட 90 நாட்களுக்கு மேல்) | தெரிந்தெடுக்கப்-பட்ட அலுவலகங்களில் இறுதி செய்யப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை* | தணிக்கை தெரிந்தெடுத்த ஆவணங்களின் எண்ணிக்கை | (தெரிந்தெடுக்-கப்பட்ட 2,222 ஆவணங் களில்) மதிப்பு நிர்ணயம் தாமதமான ஆவணங்களின் எண்ணிக்கை | தாமதத்தின் விழுக்காடு (தெரிந் தெடுக்கப்பட்ட 2,222 ஆவணங்களில்) | குறைவு முத்திரைத் தீர்வை (₹ கோடியில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஓராண்டுக்கு மேல் | 19,942 | 2,222 | 131 | 5.90 | 3.01 |
| 2 | ஆறு மாதங்களுக்கு மிகுதியாக ஆனால் ஓராண்டுக்கு குறைவாக | 19,942 | 2,222 | 89 | 4.01 | 2.11 |
| 3 | மூன்று மாதங்களுக்கு மிகுதியாக ஆனால் ஆறுமாதங்களுக்கு குறைவாக | 19,942 | 2,222 | 113 | 5.09 | 3.13 |
| 4 | ஒரு நாள் முதல் மூன்று மாதங்கள் வரை | 19,942 | 2,222 | 204 | 9.18 | 15.69 |
| | மொத்தம் | | | **537** | **24.17** | **23.94** |

(*ஆதாரம்: துறை அளித்த விவரங்கள்)

மதிப்பீட்டிற்காக அனுப்பப்பட்டு தெரிந்தெடுத்த ஆவணங்களில் சுமார் 24 விழுக்காடு ஆவணங்கள் படிவம்-I வழங்கியபின் பரிந்துரைக்கப்பட்ட 90 நாட்கள் கழித்தே மதிப்பீடு செய்யப்பட்டன என்பது மேற்கண்ட அட்டவணையிலிருந்து புலப்படுகிறது. பரிந்துரைக்கப்பட்ட காலவரையினை

பின்பற்றாததால் அரசின் வருமானமான ₹ 23.94 கோடி தாமதமாகவே கிட்டியது.

முதல்-வருகை-முதல்-தெரிவு என்கிற தெளிவான தெரிவு முறை மதிப்பீட்டுக்கான ஆவணங்களின் தேர்வில் பின்பற்றப்படவில்லை. ₹ 83.46 கோடி குறைவு முத்திரைக் கட்டணத்தை உட்படுத்திய, 355 ஆவணங்கள், படிவம்-I வழங்கியதிலிருந்து ஐந்து நாட்களுக்குள்ளாகவே இறுதி செய்யப்பட்டன.

இந்த 355 ஆவணங்களுள், ₹ 26.17 கோடி குறைவு முத்திரைக் கட்டணத்தினை உட்படுத்திய 107 ஆவணங்கள் படிவம்-I வழங்கிய நாளிலேயே இறுதி செய்யப்பட்டன. மதிப்பீட்டுக்கான செயல் முறை, மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / சிறப்பு துணை ஆட்சியரின் (முத்திரை) ஆகியோரால் தாக்கீடு வழங்குதல், ஆவணதாரரிடமிருந்து பதில் பெறுதல், மதிப்பு நிர்ணயத்திற்கான ஆய்வு மற்றும் இறுதி ஆணை வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. இவையனைத்து செயல்முறைகளும் மேற்கூறப்பட்ட ஆவணங்கள் ஒரே நாளில் முடிக்கப்பட்டதை தணிக்கை கண்டறிந்தது. எனவே, மதிப்பீட்டு செயல்முறையும், வருவாய் அலுவலர் (முத்திரை) / சிறப்பு துணை ஆட்சியரின் (முத்திரை) ஆகியோரால் மதிப்பு நிர்ணயம் செயவதற்கான ஆவணத் தெரிவும் எந்தவொரு பரிந்துரைக்கப்பட்ட / வெளிப்படையான முறைகள் பின்பற்றப்படாமல் ஒரு தோராயமான முறையில் செயல்படுத்தப்பட்டன.

இதனைச் சுட்டிக் காட்டியபோது (ஜனவரி 2022), 2020 ஆம் ஆண்டின் சிவில் முறையீடு எண் 2586-ல் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை மேற்கோள் காட்டி, விதி 7-ல் பரிந்துரைக்கப்பட்ட காலவரம்பு வழிகாட்டியேயன்றி கட்டாயமில்லை என அரசு பதிலளித்தது (மார்ச் 2022). எனினும், பதிவுத்துறைத் தலைவர், 29-01-2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 3103/E3/2022 மூலம், விதிகள் பரிந்துரைக்கும் கால வரைக்குள் சொத்து மதிப்பு நிர்ணயிக்குமாறு மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / சிறப்பு துணை ஆட்சியரின் (முத்திரை) ஆகியோருக்கு அறிவுறுதியுள்ளதாகவும் மேலும் கூறப்பட்டது. இந்த பதில் ஏற்புடையதல்ல. ஏனெனில், உச்ச நீதி மன்ற ஆணை, விதி 7 விதித்துள்ள காலவரம்புக்குள் முடிக்கப்படாத மதிப்பீடுகள் செல்லுபடியாகுமா என்ற கேள்விக்கான விடையாகும். ஆனால், தாமதமாகும் மதிப்பீட்டு செயல்முறையால் அரசின் வருமானம் தகுந்த நேரத்தில் ஈட்டப்படாமல் தடைபடுவதே தணிக்கையின் அக்கறையாகும். மேலும், சுட்டிக்காப்பட்டுள்ள இனங்களில் தாமதத்திற்கு காரணங்கள் அளிக்கப்படவில்லை. சுட்டிக்காட்டப்பட்ட சிற்சில இனங்களில் மிக விரைந்து மதிப்பீடு முடிக்கப்பட்டதற்கான விளக்கவுரையும் அளிக்கப்படவில்லை.

### 3.4.2.2 ஆவணங்களின் மதிப்பீட்டில் முரண்பாடுகள்

தமிழ்நாடு முத்திரை (ஆவணங்களில் குறைவு மதிப்பினைத் தடுத்தல்) விதிகள், 1968-ன் விதி 5-ன் படி, நிலத்தின் தற்காலிக மதிப்பைக் கணக்கிடுகையில், ஆட்சியர் அந்த நிலத்தின் வகைப்பாடு மற்றும் அடுத்திருக்கும் அல்லது அருகாமையிலிருக்கும் நிலங்களின் வகைப்பாடுகளை கருத்தில் கொள்ளவேண்டும். தெரிந்தெடுக்கப்பட்ட இனங்களின் தரவுகளை பகுப்பாய்வு செய்தபோது, 74 விழுக்காடு தெரிந்து கொள்ளப்பட்ட இனங்களில், சட்டப்பிரிவு 47-A (2)-ன் கீழ் தீர்மானிக்கப்பட்ட முத்திரைத் தீர்வையானது, பதிவு அலுவலர்கள் கணக்கிட்டு அனுப்பிய குறைவு முத்திரைத் தீர்வையில் மூன்றில் ஒரு பங்கே இருந்தது தெரிய வந்தது. இதன் விவரங்கள் **அட்டவணை 3.6**-ல் விவரிக்கப்பட்டுள்ளது:

அட்டவணை- 3.6: சட்டப்பிரிவு 47-A(2)-ன் கீழ் மதிப்பீட்டின் விவரங்கள்

| வ எண் | கணக்கிட்டு அனுப்பிய குறைவு முத்திரைத் தீர்வையோடு மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / சிறப்பு துணை ஆட்சியரின் (முத்திரை) மதிப்பீடு ஒப்பிடல் | ஆவணங்களின் எண்ணிக்கை | தெரிந்தெடுத்த 2,222 ஆவணங்களில் விழுக்காடு* |
|---|---|---|---|
| 1 | கணக்கிட்டு அனுப்பப்பட்ட குறைவு முத்திரைத் தீர்வையில் 100 விழுக்காடு மதிப்பீடு | 107 | 4.82 |
| 2 | கணக்கிட்டு அனுப்பப்பட்ட குறைவு முத்திரைத் தீர்வையில் 50 முதல் 100 விழுக்காடு மதிப்பீடு | 202 | 9.09 |
| 3 | கணக்கிட்டு அனுப்பப்பட்ட குறைவு முத்திரைத் தீர்வையில் 50 விழுக்காட்டுக்கும் குறைவான மதிப்பீடு | 266 | 11.97 |
| 4 | கணக்கிட்டு அனுப்பப்பட்ட குறைவு முத்திரைத் தீர்வையில் மூன்றில் ஒரு பங்கிற்கும் குறைவான மதிப்பீடு | 1,647 | 74.12 |

(*ஆதாரம்: துறை அளித்த விவரங்கள்)

பத்தி 3.4.2.1-ல் 355 ஆவணங்கள், ஐந்து நாட்களுக்குள் மதிப்பிடப்பட்டதாகவும் அவற்றுள் 107, ஒரே நாளில் மதிப்பிடப்பட்டதாகவும் தணிக்கை ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளது. இப்போது, **அட்டவணை 3.6**ல் இருந்து, 74.12 விழுக்காடு இனங்களில், மதிப்பிடப்பட்ட குறைவு முத்திரைத்தீர்வை, பதிவு அலுவலர்கள் கணக்கிட்டு அனுப்பிய குறைவு முத்திரைத்தீர்வையில் மூன்றில் ஒரு பங்கை விட குறைவாகவே இருந்தது தெரிய வந்துள்ளது. ஒரு சில ஆவணங்களை மட்டும் மிகத் துரிதமாக மதிப்பிடுவதில் மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோர் காட்டிய ஆர்வம் மற்றும் வழிகாட்டி மதிப்புகளோடு ஒப்பிடுகையில் மிக அதிக தள்ளுபடியில் மதிப்பு கணக்கீடு ஆகியன, மதிப்பீட்டு செயல்முறைகள் வெளிப்படைத் தன்மை இல்லாமையையும் ஆவணதாரர்களுக்கு ஆதரவாக அமைந்தமையையுமே குறிப்பிடுகின்றன.

19 இனங்களில், தவறான நில வகைபாட்டின் காரணமாக, முத்திரைத்தீர்வை ₹ 20.96 கோடி (குறைவுத் தீர்வை எனப் பரிசீலனைக்கு அனுப்பப்பட்ட ₹ 21.81 கோடியிலிருந்து, மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / சிறப்பு துணை ஆட்சியரால் விதிக்கப்பட்ட வரி ₹ 0.85 கோடியைக் கழித்ததில் மீதம்) இழப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று தணிக்கை கருதுகிறது. விவரங்கள் **அட்டவணை 3.7**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.7: தணிக்கை குறிப்புகளின் விவரங்கள்

| வ. எண் | ஆண்டுகள் | தெரிந்தெடுத்த இனங்களின் எண்ணிக்கை | எடுத்துக்காட்டு இனங்களின் எண்ணிக்கை | பரிசீலனைக்கான குறைவுத் தீர்வை (கோடியில்) | உறுதி செய்யப்பட்ட குறைவுத் தீர்வை (கோடியில்) | குறிப்புரை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2018-19 | 542 | 2 | 13.48 | 0.05 | தொழில் மயமாக்கப்பட்ட பகுதியை குடியிருப்புப் பகுதி என தவறாக வகைப்படுத்தியமை |
| 2 | 2018-19 முதல் 2020-21 வரை | 2,222 | 11 | 5.45 | 0.45 | குடியிருப்புப் பகுதியை வேளாண்மை நிலமென தவறாக வகைப்படுத்தியமை |
| 3 | 2018-19 2019-20 | 1,395 | 6 | 2.88 | 0.35 | தொழில் மயமாக்கப்பட்ட பகுதியை வேளாண்மை நிலமென தவறாக வகைப்படுத்தியமை |
| | மொத்தம் | | **19** | **21.81** | **0.85** | |

இவ்வினங்கள் பின்வருமாறு:

- மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை), சென்னை அலுவலகத்தில், 542-ல் இரண்டு இனங்களில், தொழில்மயமான நிலப்பகுதி, குடியிருப்புப் பகுதியென வகைப்படுத்தப்பட்டு, சந்தை மற்றும் வழிகாட்டி மதிப்பான ஒரு சதுர அடிக்கு ₹ 500-க்குப் பதிலாக ₹ 240 என மதிப்பிடப்பட்டது. தொழில்மயமான நிலப்பகுதி என வகைப்படுத்தி, பதிவு அலுவலர் குறைவு முத்திரைத் தீர்வை ₹ 13.48 கோடி என பரிசீலனைக்கு அனுப்பிய நிலையில், மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை), சென்னை, இந்நிலப்பகுதியை குடியிருப்புப் பகுதியென வகைப்படுத்தி மதிப்பிட்டு ₹ 0.05 கோடியையே குறைவு முத்திரைத் தீர்வையென தீர்மானித்தார். இத்தவறான நில வகைபாட்டினால் ₹ 13.43 கோடி, குறைவாக விதிக்கப்பட்டிருக்கலாம்.
- தெரிந்தெடுக்கப்பட்ட, மொத்த ஆறு அலுவலகங்களில், 2,222 மதிப்பிட்ட இனங்களில், 11 இனங்கள் குடியிருப்புப் பகுதியென, ஒன்பது பதிவு அலுவலர்களால் பிரிவு 47-A (1)-ன் கீழ் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டன. இந்த 11 இனங்களில் குறைவு முத்திரைத் தீர்வை ₹ 5.45 கோடி என பதிவு அலுவலர்களால் கணக்கிடப்பட்டன. எனினும், மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை) இந்நிலப்பகுதிகளை வேளாண்மை நிலங்கள் என வகைப்படுத்தி, ₹ 0.45 கோடி மட்டுமே குறைவு முத்திரைத் தீர்வையாக கணக்கிட்டனர். வகைபாடு மாற்றத்தால் குறைவு முத்திரைத் தீர்வை ₹ 5 கோடி குறைத்து கணக்கிடப்பட்டது.
- நான்கு அலுவலகங்களில்[7] 1,395 இனங்களில் ஆறு இனங்கள் ஆறு பதிவு அலுவலர்களால், பிரிவு 47-A (1)-ன் கீழ், மதிப்பு நிர்ணயத்திற்கென அனுப்பப்பட்டன. பதிவு அலுவலர்கள் இச்சொத்துக்களை, தொழில் மயமாக்கப்பட்ட பகுதி என வகைப்படுத்தி, ₹ 2.88 கோடி குறைவு முத்திரைத் தீர்வை என மதிப்பிட்டிருந்தனர். எனினும், மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை) இந்நிலப்பகுதிகளை வேளாண்மை நிலங்கள் என வகைப்படுத்தி, ₹ 0.35 கோடி மட்டுமே குறைவு முத்திரைத் தீர்வையாக கணக்கிட்டனர். இவ்வகைபாடு மாற்றத்தால் குறைவு முத்திரைத் தீர்வை ₹ 2.53 கோடி குறைத்து கணக்கிடப்பட்டது.

மேற்கண்ட அனைத்து நிகழ்வுகளிலும், மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/ சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை), தமிழ்நாடு முத்திரை (ஆவணங்களில் குறைவு மதிப்பினைத் தடுத்தல்) விதிகள், 1968-ன் விதி 5-ல் கூறப்பட்டுள்ள நியமங்களை பின்பற்றாததால், சொத்துக்களின் மதிப்புகள் குறைவாகக் கணக்கிடப்பட்டது. இவ்வினங்கள் முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அதிகாரியால் பிரிவு 47-A(6)-ன் கீழ் தன்னிச்சையான பரிசீலனைக்குத் தெரிந்தெடுக்கப்படவில்லை.

இதனைச் சுட்டிக்காட்டுகையில் (ஜனவரி 2022), கள ஆய்வு மேற்கொண்டு இவ்வினங்கள் இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவு 47-A(6)-ன் கீழ் சீராய்வுக்கு தெரிந்தெடுக்கப்படத் தகுந்தவையா என அறியுமாறு துணை ஆய்வுத் தலைவர்கள் வழிநடத்தப்பட்டுள்ளதாக அரசு பதிலளித்தது (மார்ச் 2022).

7 மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) கோவை, சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை) சேலம், சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை) திருச்சிராப்பள்ளி மற்றும் சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை) வேலூர்.

### 3.4.2.3 பிரிவு 47-A (7) ன் விதிமுறைகளை நிறைவேற்றாமை

இந்திய முத்திரைச் சட்டம், 1899 பிரிவு 47-A (6)-ன் படி, முதன்மைக் கட்டுப்பாட்டு வருவாய் அதிகாரி, பிரிவு (2) அல்லது (3)-ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணையை, தன்னிக்சையாகவே வரவழைத்து சோதனை செய்யலாம். இவ்வாணை வருவாய்க்கு பாரபட்சமாய் அமையும் தருணத்தில், அவர் தானே விசாரித்து அல்லது பிறர் மூலம் விசாரணை நடத்தி, அதனை, சட்டத்திற்குட்பட்டு, மறு பரிசீலனை செய்ய, திருத்தியமைக்க அல்லது தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கைகளை தொடங்கி தகுந்த ஆணையைப் பிறப்பிக்கலாம். மேலும், இந்திய முத்திரைச் சட்டம், 1899 பிரிவு 47-A (7)-ன் படி, முதன்மைக் கட்டுப்பாட்டு வருவாய் அதிகாரி, பிரிவு (2) அல்லது (3)-ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கெதிரான நடவடிக்கை கீழ்காணும் சூழ்நிலைகளில் மேற்கொள்ளப்படமாட்டாது.

(அ) அவ்வாணைக்கெதிரான முறையீட்டு காலக்கெடு இன்னும் முடியாத நிலை

(ஆ) அவ்வாணை பிறப்பிக்கப்பட்டு ஐந்தாண்டுகள் கடந்து விட்ட நிலை

2018-19 முதல் 2020-21 வரையிலான, பிரிவு 47-A(6) தொடர்பான கோப்புகளிலிருந்து, முதன்மைக் கட்டுப்பாட்டு வருவாய் அதிகாரி பிரிவு 47-A(6)-ன் கீழ் பிறப்பித்த 20 ஆணைகளில் மூன்றில், நடவடிக்கைகள் இந்திய முத்திரைச் சட்டம், 1899 பிரிவு 47-A(7)-ல் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஐந்தாண்டு காலக்கெடுவுக்குப்பின் தொடங்கப்பட்டன என்பது அறியப்பட்டது. விவரங்கள் கீழ்காணும் **அட்டவணை 3.8**-ல் கொடுக்கப்பட்டுள்ளன:

**அட்டவணை 3.8: தாமதமாக இறுதியாக்கப்பட்ட முறையீட்டு இனங்கள்**

| வ எண் | இறுதியாக்கப் பட்ட ஆண்டு | இறுதியாக்கப் பட்ட இனங்களின் எண்ணிக்கை | தாமதமான இனங்களின் எண்ணிக்கை | விழுக்காடு | தொடர்புள்ள தொகை (₹இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 2018-19 | 8 | 2 | 25.00 | 6.73 |
| 2 | 2019-20 | 2 | 0 | 0.00 | 0 |
| 3 | 2020-21 | 10 | 1 | 10.00 | 12.09 |
| | மொத்தம் | **20** | **3** | **15.00** | **18.82** |

இந்த மூன்று இனங்களில் தொடர்புடைய மொத்தத் தொகையான ₹ 18.82 இலட்சத்தில், ₹ 6.73 இலட்சம் குறைவு முத்திரைத் தீர்வை, இரண்டு இனங்களிலிருந்து வசூலிக்கப்பட்டு விட்டது. ஒரு இனத்தில் ₹ 12.09 இலட்சம் வசூலிக்கப்பட வேண்டியுள்ளது.

இதனைச் சுட்டிக்காட்டிய போது, வில்லங்கச் சான்றிதழில் குறிப்பு ஏற்றப்பட்டுள்ளதாகவும், ஆவணதாரருக்கு குறைவு முத்திரைத் தீர்வை செலுத்தக் கோரி தாக்கீடு வழங்கியுள்ளதாகவும் துறை கூறியது (டிசம்பர் 2021).

இந்திய முத்திரைச் சட்டம், 1899 பிரிவு 47-A(2)-ன் கீழ் ஆணை பிறப்பிக்கப்பட்டு ஐந்தாண்டுகள் கடந்த பின் இந்திய முத்திரைச் சட்டம், 1899 பிரிவு 47-A(6)-ன் கீழ் நடவடிக்கை துவங்கப்பட்டதால், குறைவுத் தொகை வசூலிக்கப்பட இயலாது என கூற முடியாது என்று அரசு, பல்வேறு தீர்ப்புகளைச் சுட்டிக்காட்டி, பதிலளித்தது (மார்ச் 2022). குறைவுத் தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்குமாறு இணை-I சார்பதிவாளர், அரக்கோணம், மாவட்டப் பதிவாளர், அரக்கோணம் மற்றும் சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை), வேலூர், ஆகியோரைப் பணித்துள்ளதாக மேலும் கூறப்பட்டது.

மேற்கோளாகக் கூறப்பட்டுள்ள தீர்ப்புக்கள், சட்டப்பிரிவு இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவு 47-A குறித்து முறையிடப்பட்டவையல்ல. சட்டத்தை அமலாக்கம் செய்யும் அதிகாரிகள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள காலவரையறைகளைப் பின்பற்றுவது கட்டாயம் என தணிக்கை வலியுறுத்துகிறது. கால தாமதமான நடவடிக்கைகள் சட்டத்தின் பார்வையில் எடுபடாதவை.

### 3.4.2.4 உள் தணிக்கை தொடர்பான குறிப்புகள்

- **முதன்மைப் பதிவேடு முறைப்படி பராமரிக்கப்படாமை:** மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை) அலுவலகங்களில் பிரிவு 47-A(1)-ன் கீழ், மதிப்பு நிர்ணயத்திற்கென ஆவணங்கள் பெறப்படும் தேதி மற்றும் தாக்கீடு அளித்தல், சந்தை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டு இறுதி செய்தல் மற்றும் குறைவு முத்திரைத் தீர்வை வசூலித்தல் போன்றவை தொடர்பான தேதிகளைப் பதிவு செய்தலுக்கான மிக முக்கிய பதிவேடு "முதன்மைப் பதிவேடு" ஆகும். இப்பதிவேட்டின் மூலமாகவே ஆவணங்கள் பெறப்பட்டு முடித்தலின் போக்கை மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை) அறிய முடியும். சோதனையின் போது, சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை), திருநெல்வேலி, அலுவலகத்தில் மதிப்பீட்டுக்காக பெறப்பட்ட ஆவணங்கள் தொடர்பான விவரங்கள் பதிவேட்டின் நெடுவரிசையில் நிரப்பப்படாததை தணிக்கை கண்டறிந்தது (அக்டோபர் 2021).

  இதனைச் சுட்டிக்காட்டிய போது (அக்டோபர் 2021), சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை), திருநெல்வேலி, முதன்மைப் பதிவேடு மேம்படுத்தப்பட்டு தணிக்கைக்குத் தெரிவிக்கப்படும் என்று பதிலளித்தார் (அக்டோபர் 2021).

  முதன்மைப் பதிவேடு தகுந்த பராமரிப்பின்றி இருந்ததை, இந்திய கணக்காய்வுத் தலைவரின், மார்ச் 2013-ல் முடிவடைந்த அறிக்கையில் ஏற்கெனவே பத்தி 3.9.4-ல் முதன்மைப்படுத்தக் கூறப்பட்டுள்ளது. 31 மார்ச் 2010 உடன் முடிவடைந்த ஆண்டுக்கான தணிக்கை அறிக்கையில் முதன்மைப் பதிவேடு கணினிமயமாக்கப்படல் வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டது. ஆயினும், 11 ஆண்டுகள் கடந்த பின்னும், பதிவேடு கணனிமயமாக்கப்படல் தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

  இதனைச் சுட்டிக்காட்டிய போது (ஜனவரி 2022), பிப்ரவரி 2018 முதல் விரிவான வலைதள அடிப்படையிலான அமைப்பு முறை செயல்படுத்தப்பட்டபின், துறையின் அனைத்து செயல்பாடுகளும் எண்முறை தளங்களிலேயே நடைபெறுவதாக அரசு பதிலளித்தது. மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை) அலுவலகங்களின் பணிகள் இன்னும் கணிணிமயமாக்கப்படாதலால் இப்பதில் ஏற்புடையதல்ல.

- **மறு ஒத்திசைவில் தாமதம்:** அனைத்து ஆவணங்களும் மதிப்பீடு முடிந்து தமக்கு திரும்பி வந்துவிட்டதை உறுதி செய்ய பதிவு அலுவலர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை) அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்ட ஆவணங்களை, நிலுவையிலுள்ள ஆவணங்களோடு அவ்வப்போது மறு ஒத்திசைவு மேற்கொள்கின்றனர். மறுஒத்திசைவுக்காக கையேட்டு அறிவுரையோ, குறிப்பிடப்பட்ட கால வரைமுறையோ இல்லாதபோதும், பிரிவு 47-A (1)-ன் கீழ் அனுப்பப்படும் ஆவணங்களை கண்காணிப்பதற்கும் போக்குவரத்தின் போதோ அல்லது வேறு காரணங்களினாலோ காணாமல் போன ஆவணங்களை மீட்பதற்கும் இம்முறை ஒரு கருவியாகப் பயன்படுகிறது.

ஐந்து மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை) வரம்பிற்குட்பட்ட, 317 வருவாய் அலுவலகங்களில் 273ல், சம்பந்தப்பட்ட பதிவுகளின் ஆய்வு, ஒரு வருடத்திற்கு மேலாக மறுஒத்திசைவு நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை வெளிப்படுத்தியது.

இது **அட்டவணை 3.9**ல் விளக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.9: 2018-19 முதல் 2020-21 வரை ஆவண மறுஒத்திசைவு நடைபெறாமை**

| வ எண் | அலுவலகத்தின் பெயர் | வரம்பின் கீழுள்ள சார்பதிவாளர் எண்ணிக்கை | மறுஒத்திசைவு மேற்கொள்ளாத அலுவலகங்கள் எண்ணிக்கை | மறுஒத்திசைவு மேற்கொள்ளாத அலுவலகங்களின் விழுக்காடு | மறுஒத்திசைவு மேற்கொள்ளாத ஆண்டுகள் |
|---|---|---|---|---|---|
| 1 | மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை), சென்னை | 67 | 47 | 70 | 2019-20 மற்றும் 2020-21 |
| 2 | மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை), கோவை | 56 | 47 | 84 | 2018-19 முதல் 2020-21 வரை |
| 3 | சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை), திருச்சிராப்பள்ளி | 71 | 56 | 79 | 2019-20 மற்றும் 2020-21 |
| 4 | சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை), திருநெல்வேலி | 62 | 62 | 100 | 2019-20 மற்றும் 2020-21 |
| 5 | சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை), சேலம் | 61 | 61 | 100 | 2018-19 முதல் 2020-21 வரை |
| | மொத்தம் | **317** | **273** | **86** | |

இதனைச் சுட்டிக்காட்டிய போது, மறுஒத்திசைவு நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதாகவும் முடிவுகள் தணிக்கைக்குத் தெரிவிக்கப்படும் என்றும் வருவாய் அலுவலர் (முத்திரை) / சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை) பதிலளித்தனர் (ஆகஸ்ட் மற்றும் நவம்பர் 2021).

அரசு பதிலளிக்கையில் (மார்ச் 2022) தணிக்கைக் குறிப்பு துணைப் பதிவுத் தலைவர்களின் பார்வைக்கு கொணரப்பட்டதாகவும், 30 ஜூன் 2021 வரையுள்ள காலத்தில் அனுப்பப்பட்ட ஆவணங்களின மறுஒத்திசைவிற்கான நிலுவை விவரங்களை அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தது.

### 3.4.3 முடிவுரை

ஆவணங்கள் மிகத் தாமதமாக மதிப்பிடப்பட்டதால், அரசுக்கு உரியதான வருவாய் தாமதமாக கிட்டியது. பிரிவு 47-A (2) -ன் கீழ் மதிப்பீட்டின் செயலாக்கம் நீதி சார்ந்த ஒன்றாக இருப்பினும், வரிசைப் பண்பாடு நடைமுறையில் இல்லாத நிலையில், ஆவண மதிப்பீடானது, முதலில்-வருகை-முதலில் சேவை என்ற முறையைப் பின்பற்றி மேற்கொள்ளப்படவில்லை. தமிழ்நாடு முத்திரை (ஆவணங்களில் குறைவு மதிப்பினைத் தடுத்தல்) விதிகள், 1968, வெறும் அறிவுரை வழங்கும் வகையில் அமைந்துள்ளனவே அன்றி DRO (முத்திரைகள்) / SDC (முத்திரைகள்) அவைகளைப் பின்பற்றுவது கட்டாயமாக்கப்படவில்லை. எனவே, DRO (முத்திரைகள்) / SDC (முத்திரைகள்) ஆவணங்களின் மதிப்பை கணக்கிடும் செயல்முறையில் பரந்த விருப்புரிமையைப் பெற்றிருந்தனர். இதன் விளைவாக, சொத்து மதிப்பீட்டில் முரண்பாடுகள் இருந்தன. மேலும், இவ்விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளின் படி சொத்து மதிப்பீடு நடைபெறவில்லை, இதனால் அரசிற்கு வருவாய் இழப்பு ஏற்படும் நிலை இருந்தது. சட்டப் பிரிவு

47-A(6)-ன் கீழ் மறுஆய்வு, சில இனங்களில் கால மதிப்பிழந்தது. சட்டப்பிரிவுகள் 47-A(1) மற்றும் 47-A(3) ஆகியவற்றின் கீழ், பெறுதல் மற்றும் இறுதி செய்தல் நடவடிக்கைக்கு நுழைவாயிலாகத் திகழும் முதன்மைப் பதிவேடு மேம்ப்படுத்தப்படாதுடன் கணினிமயமாக்கப்படவுமில்லை.

### 3.4.4 பரிந்துரை

அரசுக்கு பின்வருவன பரிந்துரைக்கப்படுகிறது:

- **வருவாய் அலுவலர் (முத்திரை) / சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரால், பிரிவு 47A(1)ன் கீழ் தங்களுக்கு அனுப்பப்பட்ட ஆவணங்களின் சந்தை மதிப்பை நிர்ணயிப்பதில் ஒரு வெளிப்படைத்தன்மை முறை நிறுவப்பட பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா என்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்.**

- **பிரிவு 47Aன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மதிப்பை நிர்ணயம் செய்வதில் பொறுப்பை ஏற்படுத்த தமிழ்நாடு முத்திரை (ஆவணங்களில் குறைவு மதிப்பினைத் தடுத்தல்) விதிகள், 1968ல் பொருத்தமான திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும்.**

#### பிற தணிக்கைக் குறிப்புகள்

மதிப்பீடு மற்றும் முத்திரைத் தீர்வை, பதிவுக்கட்டணம் போன்றவற்றின் வசூல் தொடர்பான துறையில் கிடைக்கப்பெற்ற பதிவுருக்களை ஆராய்ந்ததில் (செப்டம்பர் 2020 முதல் மார்ச் 2021 வரை), ஆவணங்களின் தவறான வகைப்பாடு மற்றும் சொத்துக்களை குறைத்து மதிப்பிடுதல் காரணமாக, குறைவான வருவாய் ஈட்டப்பட்டதனை தணிக்கை அறியப் பெற்றது. இதே தவறுகள் / குறைபாடுகள் மற்ற அலுவலகங்களில் தென்படுகின்றனவா என்று அரசு / துறை சோதனை மேற்கொண்டு அவற்றை திருத்தியமைக்க வேண்டும்.

## 3.5 சொத்தின் குறைவான மதிப்பீட்டினால் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் குறைவாக வசூலித்தமை

அசையாச் சொத்தின் பரிமாற்றத்தின் போது, சந்தை மதிப்பில், மாற்றுத் தீர்வைக்கான மிகுவரி உட்பட ஏழு விழுக்காடு முத்திரைத் தீர்வை விதிக்கப்பட வேண்டும் என்று இந்திய முத்திரைச் சட்டம், 1899-ன் அட்டவணை-I-ன் கீழ் பிரிவுக்கூறு 23 கூறுகிறது. மேலும், பதிவுச் சட்டம், 1908, பிரிவு 78-ன் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள அட்டவணை பிரிவுக்கூறு 1(a)-ன் படி ஒன்று அல்லது நான்கு[8] விழுக்காடு பதிவுக்கட்டணமும் விதிக்கப்பட வேண்டும். இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவு 27-ன் படி, தீர்வையை பாதிக்கும் படியாக உள்ள கை மாறும் தொகை மற்றும் சந்தை மதிப்பினை முழுமையாகவும் நேர்மையாகவும் ஆவணத்தில் தெரிவித்தல் வேண்டும். அரசு ஆணைப்படி[9], மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு ஆதரவாக உறுப்பினர்களால் செயல்படுத்தப்படும் ஆவணங்களுக்கு முத்திரைக் கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

(i) சார்பதிவாளர் குன்றத்தூரில் பதிவுருக்களை சோதனை மேற்கொண்டதில் (மார்ச் 2021), குன்றத்தூர் ‘A’ கிராமத்தில் பல்வேறு சர்வே எண்களில் அமைந்த 5.13 ஏக்கர் நிலம், ஜூன் 2019-ல், ஆறு விக்கிரைய ஆவணங்கள் மூலம் ₹ 7.70 கோடிக்கு விற்பனையானது தெரியவந்தது. தொடர்ந்து, இந்த சொத்தை வாங்கியவர்கள், இந்த முழு சொத்தினையும் ஒரு பதிவு

8 ஒரு விழுக்காடு 08 ஜூன் 2017 வரை; 09 ஜூன் 2017 முதல் நான்கு விழுக்காடு.

9 GO Ms.எண்.2179, விவசாயம் (கூட்டுறவு), தேதி 29 ஜூன் 1966.

செய்யப்பட்ட வீட்டு வசதி கூட்டுறவு சங்கத்திற்கு ₹ 39.79 கோடிக்கு இரண்டு ஆவணங்கள் மூலம் ஜூன் 2019-ல் விற்றனர்.

சொத்துக்களின் மதிப்பு இரண்டு முதல் ஏழு நாட்களில் ஐந்து மடங்கு உயர வாய்ப்பில்லையாதலால், முதல் விற்பனையில் உண்மையான கை மாற்றுத் தொகை முத்திரைத் தீர்வைக்காக மறைக்கப்பட்டு இரண்டாம் விற்பனையில், பதிவுச் செய்யப்பட்ட வீட்டு வசதி கூட்டுறவு சங்கம் வாங்கும் சொத்திற்கான ஆவணத்திற்கு தீர்வை விலக்கு என்பதால், முழுவதுமாக தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும். அதாவது, முதலாவது ஆவணத்திற்கு முத்திரைத் தீர்வு விதிப்பு உள்ளதால் உள்ளபடியான கை மாற்றுத் தொகை மறைக்கப்பட்டு, இரண்டாவது ஆவணத்திற்கு தீர்வை விலக்கு என்பதால் முழுத்தொகை தெரிவிக்கப்பட்டது. ஆயினும், பதிவு அலுவலர் இதனைப் புரிந்து கொள்ளாமல், ஒவ்வொரு ஆவணத்திலும் தெரிவிக்கப்பட்ட மதிப்பின் பேரில் ஆவணங்களைப் பதிவு செய்தார். இதன் விளைவாக, சொத்துக்கள் ₹ 32.09 கோடிக்கு குறைவு மதிப்பிடப்பட்டு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் ₹ 3.53 கோடி குறைவாக வசூலிக்கப்பட்டது**. (இணைப்பு 3.1)**.

இது சுட்டிக்காட்டப்பட்டபோது (ஜனவரி 2022), தென் சென்னை மாவட்டப் பதிவாளர், சார்பதிவாளரை, இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47-A(3)-ன் கீழ் ஆவணங்களை சரிப்பார்க்க அறிவுறுத்தும்படி உத்தரவிடப்பட்டுள்ளார் என்று அரசு பதிலளித்தது (ஜூன் 2022).

ii) திருப்பத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுருக்களை தேர்வாய்வு செய்த போது, பதிவான 168 விக்கிரைய ஆவணங்களில் இரண்டில்[10], நிலம் மற்றும் கட்டிடம் ₹ 1.50 கோடிக்கு விற்கப்பட்டது அறியப்பட்டது (ஜூன் 2019). இந்த மதிப்பின் மீது ₹ 12.00 இலட்சம் முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது. தணிக்கை மேலும் ஆராய்ந்ததில் வழிகாட்டிப் பதிவேட்டின் படி இந்த சொத்தின் மதிப்பு ₹ 2.59 கோடி என அறிந்தது. ஆயினும், இவிக்கிரைய ஆவணங்களை பதிவு செய்த பின் பதிவு அலுவலர் பிரிவு 47-A (1)-ன் படி சந்தை மதிப்பைக் கண்டறியும் பொருட்டு ஆட்சியருக்கு அதை அனுப்பவில்லை. பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளை பதிவு அலுவலர் பின்பற்றாதலால் சொத்து ₹ 1.09 கோடித் தொகைக்கு குறைத்து மதிப்பிட்டப்பட்டு, அட்டவணையில் விளக்கியவாறு ₹ 8.72 இலட்சம் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக்கட்டணம் குறைவாக வசூலிக்கப்பட்டது**. (இணைப்பு 3.2)**.

இதனைச் சுட்டிக்காட்டிய போது (ஜனவரி 2021), அரசு தணிக்கை குறிப்பினை ஒப்புக்கொண்டதுடன் இவ்வாவணங்கள் ஆட்சியருக்கு சந்தை மதிப்பு நிர்ணயித்திற்காக அனுப்பட்டுள்ளதாக தெரிவித்தது (ஜனவரி 2022).

**பரிந்துரை: வழிகாட்டி மதிப்பு அல்லது சந்தை நிலவரப்படி மதிப்பிடப்படாத ஆவணங்கள், சரியான மதிப்பு நிர்ணயத்திற்காக ஆட்சியருக்கு அனுப்பப்பட வேண்டும் என்ற செயல்முறையை உள் தணிக்கை மற்றும் தகுந்த உள் கட்டுப்பாடு மூலம் துறை உறுதி செய்தல் வேண்டும்.**

10 மே 2013 மற்றும் ஜூன் 2014 இல் பதிவு செய்யப்பட்டது.

## 3.6 சொத்தின் இருப்பிடம் பற்றிய தவறான விவரங்களை வழங்கியதன் காரணமாக சொத்தின் குறைவான மதிப்பீடு

இந்திய முத்திரைச் சட்டம், 1899ன் பிரிவு 27ன்படி, வரியுடன் கூடிய எந்தவொரு ஆவணத்தின் கட்டணத்தை பாதிக்கும் விக்கிரயம் விலை மற்றும் சந்தை மதிப்பு முழுமையாகவும் உண்மையாகவும் குறிப்பிடப்பட வேண்டும். இந்திய முத்திரைச் சட்டம், 1899ன் அட்டவணை Iன் பிரிவுக் கூறு 23ன் படி, அசையாச் சொத்துக்கான மாற்றளிப்பிற்கு, ஏழு விழுக்காடு முத்திரை தீர்வை,அதற்கான மிகை வரியுடன் விதிக்கப்படுகிறது, இதில்,சொத்தின் சந்தைமதிப்பில் பதிவுச் சட்டம், 1908 பிரிவு 78ன் கீழ் வழங்கப்பட்ட கட்டண அட்டவணையின் படி, பதிவுக்கட்டணமாக ஒரு விழுக்காடு விதிக்கப்படும்.

(i) திருப்பூரில் உள்ள இணை-I சார்பதிவாளர் அலுவலகத்தின் பதிவேடுகளின் தணிக்கை ஆய்வு (பிப்ரவரி 2021), பிப்ரவரி 2016ல் பதிவு செய்யப்பட்ட விற்பனை ஆவணத்தின் மூலம், முருகேரிபாளையம் இட்டேரி சாலை, திருப்பூரில் உள்ள TS எண்.17/7A2Cல், தொகுதி எண்.3, டி.எஸ்.எண்.17/9 என்ற முகவரியில் அமைந்துள்ள 6,839 சதுரஅடி அளவில் உள்ள நிலத்தை, ₹ 88.92 இலட்சம் மதிப்பிற்கு மாற்றளிக்கப்பட்டது கண்டறிந்தது. அதே சொத்து மீண்டும் 2016 ஏப்ரலில் ₹ 88.92 இலட்சத்துக்குக் கைமாற்றப்பட்டது. இரண்டு முறையும் முத்திரைத்தாள் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணமாக ₹ 7.11 இலட்சம் வசூலிக்கப்பட்டது. இந்த சொத்தானது கல்லூரி சாலையில் அமைந்துள்ளது என்று அதன் மூல ஆவணம் (ஆவணம் எண். 7491/2015)ல் இருந்து கண்டறியப்பட்டது, அதன்படி, அதற்கான வழிகாட்டி விலை மதிப்பு சதுர அடிக்கு ₹ 2,300 ஆகும். நிறைவேற்றுநர்களால் இத்தகவல் மறைக்கப்பட்டதும், இது பதிவு அதிகாரியால் (RO) அடையாளம் காணப்படவில்லை என்பதும் தெளிவாகிறது. கல்லூரி சாலையின் மதிப்பை ஏற்று மதிப்பிட்டால், இரண்டு ஆவணங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள ₹ 88.92 இலட்சத்துக்கு எதிராக சொத்தின் மதிப்பு ₹ 157.30 இலட்சமாக இருக்கும். இதன் விளைவாக, ஆவணங்கள் குறைவாக மதிப்பிடப்பட்டு, முத்திரைக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணமாக ₹ 10.94 இலட்சம் குறைவாக வசூலிக்கப்பட்டது. **(இணைப்பு 3.3).**

(ii) வாலாஜாபாத் சார்பதிவகத்தில் பதிவுருக்களை தேர்வாய்வு செய்த போது (மார்ச் 2021), வாலாஜாபாத் கிராமத்தின் புதிய பு.எண்.271/13 (பழைய பு.எண் 271/2A1)-ல் அமைந்துள்ள 8,720 ச.அடி நிலம், பிப்ரவரி 2018-ல் பதிவான ஒரு விக்கிரைய ஆவணம் மூலம் ₹ 29.21 இலட்சத்திற்கு கிரையமானது தெரிய வந்தது. நில விற்பனையாளர் பு. எண்ணைக் குறிப்பிட்டு, அதன் ஒரு எல்லையில் 'சாலை' என ஆவணத்தில் தெரிவித்திருந்தார். இந்த புல எண்ணுக்கு தகுந்த சந்தை வழிகாட்டியான சதுர அடிக்கு ₹ 335 என்ற மதிப்பினைப் பதிவு அலுவலர் பின்பற்றி முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக்கட்டணமாக ₹ 3.21 இலட்சம் வசூலித்தார்.

மேலும் ஆராய்ந்ததில், செப்டெம்பர் 2011-ல் பதிவான முந்தைய ஆவணத்தில் ஒரு எல்லை "வாலாஜாபாத்-காஞ்சீபுரம் சாலை" என இருந்தது அறியப்பட்டது. எனவே, பிப்ரவரி 2018-ல் பதிவான ஆவணத்தில் இத்தகவல் மறைக்கப்பட்டது உறுதியாகிறது. சந்தை மதிப்பான (வழிகாட்டிப் பதிவேட்டின் படி) ஒரு ச.அடிக்கு ₹ 1,005 என்ற மதிப்பைப் பின்பற்றினால், சொத்தின் மதிப்பு, தெரிவிக்கப்பட்ட

₹ 29.21 இலட்சத்திற்குப் பதிலாக ₹ 87.63 இலட்சமாக உயரும். சொத்து ₹ 58.42 இலட்சத்திற்கு குறைக்கப்பட்டு மதிப்பிடப்பட்டதால், முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக்கட்டணமாக ₹ 6.43 இலட்சம் குறைவாக இருக்கும் **(இணைப்பு 3.4)**

இது சுட்டிக்காட்டப்பட்டபோது (ஜனவரி 2022), வாலாஜாபாத் சார்பதிவாளர் அலுவலகத்தில் எழுப்பப்பட்ட தணிக்கைக் குறிப்பை ஏற்றுக்கொண்ட அரசு, காஞ்சிபுரம் மாவட்டப் பதிவாளரை, சார்பதிவாளருக்கு, IS சட்டத்தின் பிரிவு 47-A(3)ன் கீழ், ஆவணங்களை பரிசீலிக்குமாறு தெரிவிக்க அறிவுறுத்தியிருப்பதாக பதிலளித்தது (ஜூன் 2022). திருப்பூரில் உள்ள இணை-I சார்பதிவாளர் அலுவலகத்தில் எழுப்பப்பட்ட குறிப்பு தொடர்பாக, IS சட்டம், 1899ன் பிரிவு 27 உடன் பிரிவு 64ன் கீழ், அரசிற்கு ஏற்பட்ட வருவாய் இழப்பினை மீட்டுக்கொள்ள வழக்குப் பதிவு செய்ய மாவட்டப் பதிவாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று (ஜூன் 2022) அரசு பதிலளித்தது.

**பரிந்துரை: பதிவு அலுவலர்கள், ஆவணதாரர்கள் தெரிவித்திருக்கும் தகவல்களை மட்டும் சார்ந்தில்லாது, வில்லங்கச் சான்றிதழ் உட்பட அனைத்து தொடர்புடைய ஆவணங்களையும் சோதனை செய்து பின் சொத்தினை மதிப்பிடுகின்றனரா என்பதனை துறை உறுதிசெய்தல் வேண்டும்.**

## 3.7 தீர்வையை பாகப்பிரிவினை என தவறாக வகைப்பாடு செய்தமை

இந்திய முத்திரைச் சட்டம் (IS சட்டம்) 1899ன் **அட்டவணை-Iன்** பிரிவுக் கூறு 45(b)ன் படி, பிரிவுக்கூறு 45(a)ன் கீழ் உள்ளடக்கப்படாத, அதாவது குடும்பம் அல்லாத உறுப்பினர்கள் தொடர்பான பாகப்பிரிவினைக்கான ஆவணத்தில், சொத்தின் பிரிக்கப்பட்ட பங்கின்[11] மதிப்பில் நான்கு விழுக்காடு முத்திரையிடப்பட வேண்டும்.சட்டப்பிரிவுக்கூறு 58(ii)ன் படி, குடும்ப உறுப்பினருக்குச் சாதகமான தீர்வை தவிர,வேறு எந்தத் தீர்வுக்கும் ஏழு விழுக்காடு முத்திரைத் தீர்வை விதிக்கப்படுகிறது. இதற்கான பதிவுக் கட்டணங்கள், பதிவுச் சட்டம், 1908ன் பிரிவு 78ன் கீழ்,கட்டண அட்டவணையின் படி, முறையே ஒரு விழுக்காடு மற்றும் நான்கு விழுக்காடு ஆகும்.

குன்றத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணங்களின் தணிக்கை ஆய்வு (மார்ச் 2021) மே 2018ல் செயல்படுத்தப்பட்டு, பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் மூலம், ஆறு பேர் மற்றும் ஒரு தனியார் நிறுவனம், நும்பல் கிராமத்தின் 98/4A1A1 என்ற புல எண்ணுக்குள் ₹ 43.14 கோடி மதிப்பிலான 3 ஏக்கர் 79 சென்ட் நிலத்தை பிரிவினை செய்ததை வெளிப்படுத்தியது. சொத்து பிரிப்பு, இரண்டு அட்டவணைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டது. தனி நபர்களுக்கு ₹ 39.38 கோடி மதிப்பீட்டில் முதல் அட்டவணையும், நிறுவனத்துக்கு ₹ 3.76 கோடி மதிப்பிலான இரண்டாவது அட்டவணையும் ஒதுக்கப்பட்டது. RO, முத்திரைத்தாள் மற்றும் பதிவுக்கட்டணமாக முறையே ₹ 15.06 இலட்சம் மற்றும் ₹ 3.76 இலட்சம் வசூலித்து ஆவணத்தைப் பதிவு செய்தார்.

ஆவணத்தின் மறுபரிசீலனைகளில் இருந்து, தனி நபர்களால் பிரிவினைக்கு உட்படுத்தப்பட்ட தற்போதைய சொத்தானது, ஏற்கனவே மூதாதையர் சொத்திலிருந்து விற்பனை செய்யப்பட்ட, பிரிக்கப்படாத 14,400 சதுரஅடியின் ஒரு பகுதி என தணிக்கை அடையாளம் கண்டறிந்தது. தற்போதைய பகிர்வு, மேற்கூறிய விற்பனையானது, நிறுவனத்திற்கு கூட்டுஉரிமைகளை வழங்கியுள்ளது என்ற அடிப்படையில் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், நிறுவனமானது

11 அதிக மதிப்புள்ள பங்கைத் தவிர்த்து மீதமுள்ள பங்கு.

14,400 சதுரஅடியின் முழுமையான உரிமையாளராக மட்டுமே உள்ளதால், சொத்தின் இணை உரிமையாளராக இருக்கவில்லை. நிலத்தின் அசல் அளவு, நிறுவனம் மற்றும் தனிநபர்களால் கூட்டாக உரிமைக் கொள்ளப்படவில்லை இணை உரிமையாளர்கள் மட்டுமே ஒரு சொத்தைப் பிரிக்க முடியும் என்பதால், ஆவணத்தை பாகப்பிரிவினை தொடர்பானதாக வகைப்படுத்த முடியாது, இது குடும்பம் அல்லாத தீர்வாக மட்டுமே வகைப்படுத்த முடியும். அதன் அடிப்படையில் முத்திரைக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணமாக, 11 விழுக்காடு ஈர்க்கப்படும்.தலைமைக்கட்டுப்பாட்டு வருவாய் அதிகாரி மற்றும் பதிவுத் துறை ஆய்வுத் தலைவர் ஆகியோரின், 22 ஜனவரி 2019 தேதியிட்ட நடவடிக்கைகள் எண்.30272/P1/2016ல் குறிப்பிட்டவாறு இதேபோன்ற வழக்கில், ஆவணம், குடும்பம் அல்லாத தீர்வுவழக்காக வகைப்படுத்தப்படும் என்ற முடிவால் இந்தக் கருத்து ஆதரிக்கப்பட்டது. எனவே, ஆவணம், குடும்பம் அல்லாத தீர்வு என சரியாக வகைப்படுத்தப்பட்டால், முத்திரைக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் ₹ 41.32 இலட்சம் ஈர்க்கப்படும். இருப்பினும், RO ஆவணத்தை குடும்பம் அல்லாத பிரிவாக வகைப்படுத்தி, பிரிக்கப்பட்ட பங்கைத் தவிர்த்து, சொத்தின் சந்தை மதிப்பில் நான்கு விழுக்காடாக, ₹ 18.81 இலட்சம் மட்டுமே வசூலித்தார். இதன் மூலம் ₹ 22.51 இலட்சம் குறைவாக வசூலிக்கப்பட்டது **(இணைப்பு 3.5)**.

இது சுட்டிக்காட்டப்பட்ட போது (ஜனவரி 2022), உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி[12] ஒரு சொத்தின் உரிமையாளர் மற்றொருவருக்கு சொத்தில் ஒரு பங்கை மாற்றினால், மாற்றப்பட்டவர் அசல் உரிமையாளருடன் இணை உரிமையாளராக மாறுகிறார்" என்று அரசு (ஜூன் 2022) பதிலளித்தது. மேலும், "ஒரு சொத்தின் இணை உரிமையாளர் அதன் உரிமையாளர் அல்ல என்று சொல்வது சரியல்ல" என்ற உச்ச நீதிமன்றத்தின் மற்றுமொரு தீர்ப்பினை[13] அரசு குறிப்பிட்டது.

பின்வரும் காரணங்களுக்காக அரசாங்கத்தின் பதில் ஏற்கத்தக்கது அல்ல:

- முதலில் மேற்கோள் காட்டப்பட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, உரிமையாளர் சொத்தின் ஒரு பங்கை மற்றொருவருக்கு மாற்றினால் மட்டுமே இரண்டாவது நபர் இணை உரிமையாளராக மாறுவார். தற்போதைய வழக்கில், உரிமையாளர் பிரிக்கப்படாத பங்குகளை மற்றொருவருக்கு விற்றார், அதாவது வாங்குபவர் பிரிக்கப்படாத பங்குகளின் முழு உரிமையாளராகிவிட்டார் மற்றும் சொத்தில் கூட்டு உரிமை இல்லை. கூட்டு உரிமை இல்லாத பட்சத்தில் பிரிவினை நடக்காது.
- மேற்கோள் காட்டப்பட்ட இரண்டாவது தீர்ப்பு பொருத்தமற்றது, ஏனெனில் இணை உரிமையாளர் சொத்தின் உரிமையாளர் ஆவார், ஆனால் ஒரு முழுமையான உரிமையாளர் இணை உரிமையாளராக இருக்க முடியாது.

**பரிந்துரை: பதிவு அலுவலர்கள் ஆவணங்களிலுள்ள தகவல்களை ஆழப் படித்தறிந்த பின்னரே, அவற்றை முத்திரை வரி விதித்தலுக்காக பத்திரங்களை வகைப்படுத்துகின்றனர் என்பதனை துறை உறுதி செய்தல் வேண்டும்.**

## 3.8 விற்பனை மதிப்பினை குறைவாக தெரிவித்ததன் காரணமாக முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தின் குறைந்த வசூல்

இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவு 27-ன் படி, ஒரு ஆவணத்தின் தீர்வையை பாதிக்கும் படியான, ஆவணத்தின் விலை மற்றும் சந்தை மதிப்பினை, முழுமையாகவும் உண்மையாகவும் தெரிவித்தல் வேண்டும். இந்திய முத்திரைச் சட்டம், 1899-ன் கீழ் அட்டவணை I-ல் சட்டப்பிரிவு 23-ன் படி அசையாச் சொத்தின் விக்கிரயம், சந்தை மதிப்பில் ஏழு விழுக்காடு முத்திரைத் தீர்வை மற்றும்

12 2004ன் சிவில் மேல்முறையீடு எண்.4420 ல் ராமன் லால் பைலால் படேல் மற்றும் பலர் எதிராக குஜராத் மாநிலம்.

13 ஸ்ரீ ராம் பாஸ்ரிச்சா எதிராக ஜெகநாத் AIR 1976 SC 2335ல் புகாரளிக்கப்பட்டது.

பதிவுச்சட்டம், 1908, சட்டப்பிரிவு 78-ன் கீழ் தயாரிக்கப்பட்ட கட்டண அட்டவணையின் படி ஒரு விழுக்காடு பதிவுக்கட்டணம் ஆகியவற்றிற்கு உட்படுத்தப்பட வேண்டும்.

ஆவணங்களின் தேர்வு ஆய்வில் (ஜனவரி 2021), சூலூரில் உள்ள துணைப் பதிவாளர் அலுவலகத்தில், நிலம்பூர் கிராமத்தில் அமைந்துள்ள புல எண் 125/2C1-ல் உள்ள 1.55 ஏக்கர் நிலமானது, விற்பனை ஆவணம் (ஆவணம் எண்.8395/2012) மூலம், 2 ஜூலை 2012 அன்று பதிவு செய்யப்பட்டது தெரியவந்தது. ஆவணத்தின் மதிப்பு ₹ 1.70 கோடி என குறிப்பிடப்பட்டு, ஆவணத்தை பதிவு செய்யும் போது ROவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆயினும், 2012-13 ஆம் ஆண்டிற்கான வருமான வரிப் பதிவேடுகளில் (31 மார்ச் 2015 தேதியிட்ட மதிப்பீட்டு ஆணை) மேற்கண்ட சொத்தை வாங்கியவர், மேற்கண்ட விற்பனைக்கான தொகையாக, ₹ 5.31 கோடியை தானாக முன்வந்து தெரிவித்தது கண்டறியப்பட்டது. முத்திரைத் தீர்வை பொருத்தமட்டில், ₹ 3.61 கோடியை (வருமான வரிக் கணக்கில் அறிவிக்கப்பட்ட ₹ 5.31 கோடியிலிருந்து விற்பனைப் பத்திரத்தில் மதிப்பாக காட்டப்படும் ₹ 1.70 கோடியை கழித்தல்) மறைத்தது தெளிவாகின்றது. உண்மையான மதிப்பினை மறைத்ததால் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணமாக ₹ 28.89 இலட்சம் குறைவாக செலுத்தப்பட்டது **(இணைப்பு 3.6)**.

தணிக்கை இதனைச் சுட்டிக் காட்டிய போது, இக்குறிப்பின் அடிப்படையில் இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவு 27 மற்றும் 64-ன் கீழ் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு தணிக்கைக்கு தெரிவிக்கப்படும் என்று பதிவு அலுவலர் பதிலளித்தார் (ஜனவரி 2021).

விவரங்கள் அரசுக்கு அனுப்பப்பட்டபோது (ஜனவரி 2022) அதற்கான பதில் விரைவில் அளிக்கப்படும் என்று அரசு பதிலளித்தது (மே 2022). இருப்பினும், இதுவரை பதில் எதிர்நோக்கப்படுகிறது. (ஜூன் 2022).

## 3.9 விக்கிரையம்-மற்றும்-குத்தகை ஒப்படைத்தல் ஆவணத்தை வெறும் குத்தகை ஒப்படைத்தல் ஆவணமாக வகைப்படுத்தியமை

இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவு 5-ன் படி, ஒரே ஆவணத்தில் வெவ்வேறு பரிமாற்றங்கள் உள்ளதாகவோ அல்லது தொடர்புடயதாகவோ இருந்தால், ஒவ்வொரு பரிமாற்றமும் ஒரு ஆவணமாக பதிவு செய்யப்பட்டால் வசூலிக்கப்படும் தீர்வையின் மொத்தமே, இவ்வாவணத்திற்கான, இச்சட்டத்தின் கீழ் வசூலிக்கப்படவேண்டிய தீர்வையாகும். இந்திய முத்திரைச் சட்டத்தின் கீழுள்ள அட்டவணைப் பிரிவுக்கூறு 61-ன் படி குத்தகை ஒப்படைப்பு ஆவணத்திற்கு, ₹ 40 முத்திரைத் தீர்வை வசூலிக்க வேண்டும். இந்திய முத்திரைச் சட்டத்தின் கீழுள்ள அட்டவணைப் பிரிவுக்கூறு 23-ன் படி, அசையாச் சொத்தின் மாற்றத்தின் போது மாற்றுத் தீர்வை மிகுவரி உட்பட ஏழு விழுக்காடு முத்திரைத் தீர்வையும் நான்கு விழுக்காடு பதிவுக் கட்டணமும் வசூலிக்கப்பட வேண்டும்.

சார்பதிவாளர், சூளூர் மற்றும் அவினாசி அலுவலகத்தில் பதிவுருக்களில் சோதனை மேற்கொண்ட போது (ஜனவரி மற்றும் பிப்ரவரி 2021), 1999, 2004, 2014, 2015 மற்றும் 2016-ஆம் ஆண்டுகளில் பதிவான ஐந்து ஆவணங்களின் மூலம் முன்னர் கொடுக்கப்பட்ட குத்தகை, செப்டம்பர் 2018, ஆகஸ்ட் 2019 மற்றும் டிசம்பர் 2019-ல் ஒப்படைக்கப்பட்டதை தணிக்கை அறிந்தது. இவை உதவிப் பொறியாளருக்கு கள ஆய்வுக்கு அனுப்பப்பட்டபோது, குத்தகைக்கு விடப்பட்ட காலி நிலங்களில் கட்டிடம் இருந்தது தெரிய வந்தது. இக்கட்டிடத்தின் மதிப்பை, ₹ 5.15 கோடி என உதவிப் பொறியாளர் கள ஆய்வில் மதிப்பிட்டார் (பிப்ரவரி 2019, டிசம்பர் 2019 மற்றும் ஜனவரி 2020). இந்த மதிப்பீட்டின் படி பதிவு அலுலவர், ஒரு விழுக்காடாக, ₹ 5.16 இலட்சம் பதிவுக்கட்டணம் வசூலித்தார் (நவம்பர் 2019,

டிசம்பர் 2019 மற்றும் ஜனவரி 2020). காலி நிலங்கள் மட்டுமே குத்தகைக்கு விட்டபடியால், ஒப்படைப்பின் போது இருந்த கட்டிடம் உபரி எனக் கருதி விக்கிரயம் என வகைப்படுத்தப்பட வேண்டும். எனவே, இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 5ன் கீழ் இப்பரிவர்த்தனையானது, விக்கிரையம் மற்றும் குத்தகை ஒப்படைத்தல் ஆவணமாக கருதப்பட்டு முத்திரையிடப்பட வேண்டும். ஆனால், பதிவு அலுவலர், முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணமான ₹ 56.61 இலட்சத்திற்கு பதிலாக பதிவுக்கட்டணமாக ₹ 5.16 இலட்சமே வசூலித்திருந்தார். இதனால், ₹ 51.45 இலட்சம் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் குறைவாக வசூலிக்கப்பட்டது **(இணைப்பு 3.7).**

இதனைச் சுட்டிக்காட்டிய போது (ஜனவரி மற்றும் பிப்ரவரி 2021), பதிவுருக்களை ஆராய்ந்த பின் விரிவான பதிலளிப்பதாக பதிவு அலுவலர், அவினாசி தெரிவித்தார் (பிப்ரவரி 2021). பதிவுத் துறைத் தலைவரின், 17 அக்டோபர் 2014 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 43479/பி1/2014னை பின்பற்றியே முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வசூலித்ததாகவும், ஆவணம் ஒரே தன்மை உடையது என்பதால் சட்டப் பிரிவு 5-ஐ இங்கு பயன்படுத்தத் தேவையில்லை என்றும் பதிவு அலுவலர், சூளூர், பதிலளித்தார். கட்டிடம் இருப்பது AEE ஆல் உறுதிப்படுத்தப்பட்டதால் பதில் ஏற்கத்தக்கதல்ல. எனவே, பரிவர்த்தனை இரண்டு வகைப்பாடுகளைக் கொண்டுள்ளது, அதாவது, காலி நிலத்தின் குத்தகையை ஒப்படைத்தல் மற்றும் அசையா சொத்தை அதாவது கட்டிடத்தை மாற்றுதல். எனவே, சட்டத்தின் பிரிவு 5ன் படி முத்திரையிடப்பட வேண்டும்.

இது சுட்டிக்காட்டப்பட்டபோது (ஜனவரி 2022), 1882 ஆம் ஆண்டின் சொத்து பரிமாற்றச் சட்டத்தின் 108 வது பிரிவை அரசு மேற்கோள் காட்டியது. இது "குத்தகை விலக்கு நிர்ணயித்த பிறகும், குத்தகைதாரர் குத்தகைக்கு விடப்பட்ட சொத்து தனது வசம் இருக்கும் வரை,அது அவர் பெறப்பட்ட நிலையிலேயே ஒப்படைக்கப்படும் பொருட்டு, எந்த நேரத்திலும் அவர் பூமியுடன் இணைத்துள்ள அனைத்தையும் அகற்றலாம். ஆனால் ஒப்படைக்கப்பட்ட பின்னர் அகற்றல்கள் மேற்கொள்ள இயலாது". குத்தகைதாரர், அசல் நிலங்களை ஒப்படைத்த பின்னர், அதில் மேற்கொள்ளப்பட்ட மேம்பாடுகளில் உரிமை கோர முடியாது என்ற நிலைப்பாட்டிற்கு ஆதரவாக தீர்ப்புகளை[14] மேற்கோள் காட்டியுள்ளது. ஒரு கட்டிடத்தின் ஒரு பரிவர்த்தனைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கட்டணங்கள் வசூலிக்கப்பட முடியாது என்று நடைமுறைகள்[15] பற்றிய குறிப்பும் செய்யப்பட்டது.

பின்வரும் காரணங்களால் பதில் ஏற்கத்தக்கதாக இல்லை:

- AIR 789 1959 SCR 799ல் உள்ள தீர்ப்பு, குத்தகை அளித்தவரின் அறிவுறுத்தல்களின்படி குத்தகைதாரரால் கட்டப்பட்ட கட்டிடம் பற்றியது. இது அளிக்கப்பட்ட தணிக்கை குறிப்பிற்கு தொடர்புடையது அல்ல.
- AIR 1965 All 527ல், குத்தகைதாரரால் விட்டு செல்லப்பட்ட எஞ்சிய உரம், குத்தகை அளித்தவரால் விற்கப்பட்ட நிலையில், விற்பனைத் தொகையை குத்தகை அளித்தவரே தக்க வைத்துக் கொள்ளலாம் என்று நீதிமன்றம் முடிவு செய்தது. குத்தகைக்கு விடப்பட்ட நிலதில் விட்டு செல்லப்பட்ட உரம் அசையும் சொத்தாக இருப்பதால்,அதனை நிலத்தின் மேம்பாடு என்று

14 டாக்டர் கே.ஏ. தைரியவான்மற்றும்பலர்எதிராக ஜே.ஆர். தாக்கூர் மற்றும் பலர் AIR 789 1959 SCR 799 மற்றும் முனிசிபல் போர்டு எதிராக பீர் சிங் AIR 1965 All 527ல் பதிவாகியுள்ளன.

15 எண். 47346/P1/2013 தேதி 11.02.2014.

கூற முடியாது. எனவே, இந்த வழக்கை தணிக்கைக் குறிப்பிற்குப் பொருத்தமானதாகக் கருத முடியாது.

- மேற்கோள் காட்டப்பட்ட CCRAன் நடவடிக்கைகள் இங்கு பொருத்தமானதாக இல்லை, ஏனெனில் கட்டிடத்தை மாற்றளிப்பதற்கு மட்டுமே நான்கு விழுக்காடு கட்டணத்தை தணிக்கை பரிந்துரைத்துள்ளது. மேலும் கட்டிடத்தின் ஒரு பரிவர்த்தனைக்கு, பலமுறை பதிவு கட்டணம் விதிக்கப்படும் என்ற கேள்வி எழாது.

**பரிந்துரை: குத்தகை ரத்து என்ற பெயரில் அசையா சொத்துக்கள் கைமாறுவதன் மூலம்முத்திரை தீர்வு தவிர்க்கப்படுவதைத் தடுக்க, பதிவு அலுவலர்கள், குத்தகை ரத்து அல்லது ஒப்படைப்பு ஆவணங்களை, அதற்கு தொடர்புடைய ஆதாரங்களைப் ஆராய்ந்து, சரியாக வகைப்படுத்துமாறு துறை, பதிவு அலுவலர்களுக்கு அறிவுறுத்தவேண்டும்.**

# அத்தியாயம் -IV

## வாகனங்கள் மீதான வரி விதிப்பு

# அத்தியாயம்-IV

## வாகனங்கள் மீதான வரி விதிப்பு

### 4.1 வரி நிர்வாகம்

தமிழ்நாட்டில் மாநில போக்குவரத்து ஆணையம் (STA), மோட்டார் வாகன சட்டம், 1988, மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989, தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள், 1989 மற்றும் தமிழ்நாடு மோட்டார் வாகன வரிவிதிப்பு சட்டம் மற்றும் விதிகள், 1974 ஆகியவற்றின் வழிமுறைகளை செயல்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது. மாநில போக்குவரத்து ஆணையர் (TC) தலைமையில் துறை செயல்படுகின்றது.வட்டார போக்குவரத்து அலுவலகங்கள் (ஆர்டிஓக்கள்) TCன் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன. ஆர்டிஓக்களின் கீழ் உள்ள சோதனைச்சாவடிகள் மாநிலங்களுக்கு இடையேயான வாகனங்களின் இயக்கத்தைக் கண்காணிக்கின்றன. அரசுமட்டத்தில் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு கூடுதல் தலைமைச் செயலாளர், உள்துறை (போக்குவரத்து) துறையால் செயல்படுத்தப்படுகிறது.

### 4.2 உள் தணிக்கை

உள் தணிக்கை 1978 ஆம் ஆண்டு முதல் துறையில் இயங்கிவருகிறது. அனைத்து அலுவலகங்களின் முழு விழுக்காடு தணிக்கையை உறுதி செய்வதற்காக துறை உள் தணிக்கை முறையைக் கொண்டுள்ளது. ஒவ்வொன்றுக்கும் ஒரு துணை கணக்கு அதிகாரி என, அவர்கள் தலைமையில், 12 தணிக்கை குழுக்கள் உள்ளன. அலுவலகங்களின் இலக்கான 128க்கு எதிராக, 2020-21ல், 114 அலுவலகங்களில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. 31 மார்ச் 2021 வரை உள்தணிக்கை குறிப்புகளின் நிலுவையில் உள்ள விவரங்களை துறை வழங்கவில்லை.

### 4.3 தணிக்கையின் முடிவுகள்

ஏப்ரல் 2020 முதல் மார்ச் 2021வரையிலான காலகட்டத்தில் நடத்தப்பட்ட 103 துறை அலுவலகங்களில் ஒன்பதில்,பதிவுகளைச் சரிபார்த்ததில், 117 இனங்களில், ₹ 8.04 கோடி, வரி, கட்டணம், அபராதம் மற்றும் பிற குறிப்புகளின் மூலம் குறைவாக வசூலிக்கப்பட்டு /வசூலிக்கப்படாமல் இருப்பது கண்டறியப்பட்டது. அவை பின்வரும் தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன:

**அட்டவணை 4.1: தணிக்கை கண்டுபிடிப்புகள் முடிவுகள்**

**(₹ கோடியில்)**

| வ. எண் | வகை | இனங்களின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1 | வரி குறைவாக வசூலிக்கப்பட்டமை/ வசூலிக்கப்படாமை | 44 | 6.77 |
| 2 | கட்டணங்கள் குறைவாக வசூலிக்கப்பட்டமை/ வசூலிக்கப்படாமை | 09 | 0.53 |
| 3 | தண்ட வரி குறைவாக வசூலிக்கப்பட்டமை/ வசூலிக்கப்படாமை | 04 | 0.02 |
| 4 | பிற | 60 | 0.72 |
| | மொத்தம் | **117** | **8.04** |

(ஆதாரம்: முதன்மை கணக்காய்வு தலைவர் (தணிக்கை-II) தமிழ்நாடு, சென்னை, அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தரவுகளின்படி)

2020-21ஆம் ஆண்டில், துறையானது வரி வசூலிக்கப்படாமை/ குறைவான வசூல் மற்றும் பிற குறைபாடுகள் தொடர்பான 43 இனங்களை ஏற்றுக்கொண்டு, ₹ 0.80 கோடி மீட்டது.

## தணிக்கை குறிப்புகள்

## 4.4 பசுமை வரி விதிக்கப்படாமை

தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டம், 1974ன் பிரிவு 3-A (1) ன் படி, காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை செயல்படுத்தும் நோக்கத்திற்காக "பசுமைவரி" எனப்படும் கூடுதல் வரி, பிரிவு 3ன் கீழ், சாலையில் பயன்படுத்தத்தக்கதான மோட்டார் வாகனங்களின் மீது விதிக்கப்படும் வரியுடன் சேர்த்து விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும். சட்டத்தின் நான்காவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பசுமைவரி விகிதம் பின்வருமாறு.

| வகை | அளவுகோல் | விதிக்கப்பட வேண்டிய பசுமைவரி |
|---|---|---|
| போக்குவரத்து வாகனங்கள் | பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 7 ஆண்டுகள் முடிந்தவுடன் | ஆட்டோ ரிக்ஷா ஆண்டுக்கு ₹ 200 பிற வாகனங்கள்: ஆண்டுக்கு ₹ 500 |
| போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 15 ஆண்டுகள் முடிந்தவுடன் | மோட்டார் வாகனங்கள்: ஐந்து ஆண்டுகளுக்கு ₹ 500<br>மற்ற வாகனங்கள்: ஐந்து ஆண்டுகளுக்கு ₹ 1,000 |

2020-21 ஆம் ஆண்டில், ஏழு[1] வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் (ஆர்டிஓ) தொடர்பாக, தணிக்கைக்காக வழங்கப்பட்ட VAHAN[2] தரவுகளின் சோதனைச் சரிபார்ப்பில், 10,308 போக்குவரத்து வாகனங்கள் மற்றும் 59,966 போக்குவரத்து அல்லாத வாகனங்கள் மீது முறையே ₹ 42.19 இலட்சம் மற்றும் ₹ 357.44 இலட்சம் பசுமை வரி விதிக்கப்படவில்லை. **(இணைப்புகள் 4.1 மற்றும் 4.2).**

இது சுட்டிக்காட்டப்பட்டதன் அடிப்படையில் (டிசம்பர் 2020 மற்றும் ஏப்ரல் 2021க்கு இடையில்), போக்குவரத்துத் துறையானது மே 2021 வரையிலான சமீபத்திய தரவுகளை வழங்கியது, (ஜூன் 2021). அதில் இருந்து தணிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்ட வாகனங்களில், துறை பசுமை வரியாக ₹ 7.81 இலட்சம் (1,561 போக்குவரத்து வாகனங்கள் தொடர்பாக) மற்றும் ₹ 9.05 இலட்சம் (929 போக்குவரத்து அல்லாத வாகனங்கள் தொடர்பாக) வசூலித்ததாக தணிக்கையில் சரிபார்க்கப்பட்டது. மீதமுள்ள வாகனங்கள் தொடர்பான பசுமை வரி வசூல் அறிக்கை எதிர்நோக்கப்படுகின்றது. மேலும் அதை வசூலிக்க கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் துறை உறுதியளித்தது (ஜூன் 2022).

இது அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டு (ஜனவரி 2022) நினைவூட்டப்பட்டது (ஏப்ரல் 2022 மற்றும் ஜூன் 2022); பதில் எதிர்நோக்கப்படுகின்றது (ஜூலை 2022).

---

1 சென்னைசென்ட்ரல், சென்னைதெற்கு, சென்னை (வடமேற்கு), கோயம்புத்தூர் (வடக்கு), ஓசூர், சேலம் (மேற்கு) மற்றும்வேலூர்.

2 சாலைபோக்குவரத்துமற்றும்நெடுஞ்சாலைஅமைச்சகத்திற்கானபோர்டல்.

**பரிந்துரை: எதிர்காலத்தில் வாகனங்களை அடையாளம் கண்டு, பசுமை வரியை உடனடியாக வசூலிப்பதற்கு பொருத்தமான வழிமுறையை அரசு உருவாக்கலாம் மற்றும் இணக்கத்தை உறுதி செய்யும் பொருட்டு, வசூலிக்கப்படும் மீதி வரி குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்படலாம்.**

**(ஆர். அம்பலவாணன்)**
முதன்மை கணக்காய்வு தலைவர் (தணிக்கை-I),
தமிழ்நாடு

சென்னை
நாள்

மேற்கையொப்பமிடப்பட்டது

**(கிரீஷ் சந்திர முர்மூ)**
இந்திய கணக்காய்வு மற்றும்
தணிக்கைத் துறைத் தலைவர்

புது டில்லி
நாள் 16 நவம்பர் 2022

# இணைப்புகள்

## இணைப்பு 3.1

(பார்வை: பத்தி 3.5 (i); பக்கம் 47)

### சொத்தின் குறைவான மதிப்பீடு காரணமாக முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தின் குறைவான வசூல்

(ரூபாயில்)

| விவரங்கள் | பதிவு செய்த தேதி | மாற்றளிக்கப்-பட்ட நிலத்தின் அளவு (ஏக்கரில்) | விற்பனைப் பத்திரங்களில் குறிப்பிடப்-பட்டுள்ள மதிப்பு | முத்திரை வரி ஏழு விழுக்காடு வீதத்தில் | பதிவுக் கட்டணம் நான்கு விழுக்காடு வீதத்தில் |
|---|---|---|---|---|---|
| முந்தைய பரிவர்த்தனைகளின் ஆவண எண்கள் | | | | | |
| 9773/2019 | 18.06.2019 | 1.38 | 2,07,00,000 | 14,49,100 | 8,28,000 |
| 9774/2019 | 18.06.2019 | 1.42 | 2,13,00,000 | 14,91,100 | 8,52,000 |
| 10133/2019 | 25.06.2019 | 0.43 | 64,50,000 | 4,51,600 | 2,58,000 |
| 10134/2019 | 25.06.2019 | 0.54 | 81,00,000 | 5,67,100 | 3,24,000 |
| 10135/2019 | 25.06.2019 | 0.87 | 1,30,50,000 | 9,13,600 | 5,22,000 |
| 10136/2019 | 25.06.2019 | 0.49 | 73,50,000 | 5,14,600 | 2,94,000 |
| முத்திரைத் தீர்வை ஈர்க்கப்பட்ட ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த மதிப்பு (அ) | | **5.13** | **7,69,50,000** | **53,87,100** | **30,78,000** |
| பிந்தைய பரிவர்த்தனைகளின் ஆவண எண்கள் | | | | | |
| 10022/2019 | 21.06.2019 | 2.80 | 21,71,56,800 | வரிவிலக்கு அளிக்கப்பட்டது | 86,86,280 |
| 10167/2019 | 26.06.2019 | 2.33 | 18,07,05,480 | வரிவிலக்கு அளிக்கப்பட்டது | 72,28,220 |
| வரி விலக்கு அளிக்கப்பட்ட ஆவணங்களில் மொத்த மதிப்பு (ஆ) | | **5.13** | **39,78,62,280** | வரிவிலக்கு அளிக்கப்பட்டது | 1,59,14,500 |
| மறைக்கப்பட்ட மதிப்பு (அ-ஆ) | | | **32,09,12,280** | **2,24,63,850** | **1,28,36,490** |
| வசூலிக்கப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை & பதிவுக் கட்டணம் | **3,53,00,340** | | | | |

## இணைப்பு 3.2

**(பார்வை: பத்தி 3.5 (ii); பக்கம் 48)**

**சொத்தின் குறைவான மதிப்பீடு காரணமாக முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தின் குறைவான வசூல்**

| பதிவு செய்த அலுவலகத்தின் பெயர் | சார் பதிவாளர், திருப்பத்தூர் (வேலூர்) | | மொத்தம் |
|---|---|---|---|
| ஆவண எண் | 4861/2014 | 4726/2013 | |
| ஆவணமாக்கப்பட்ட தேதி / பதிவு செய்யப்பட்ட தேதி | 09.06.2014 / 09.06.2014 | 25.01.2013/ 10.05.2013 | |
| ஆவணத்தின் வகை | மாற்றளிப்பு | மாற்றளிப்பு | |
| சொத்து விவரங்கள் | வீட்டு எண்.12, குள்ளப்ப கவுண்டர் தெரு, திருப்பத்தூரில் உள்ள கட்டிடத்துடன் கூடிய 707 சதுர மீட்டர் (7,770 சதுர அடி) நிலம் | திருப்பத்தூர் பஸ்லானிசுவாமி முதலியார் சாலையில் உள்ள கட்டிடத்துடன்கூடிய 211.56 சதுரமீட்டர் நிலம் | |
| ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பு (கட்டிட மதிப்பு உட்பட) | ₹ 85,00,000 (நிலத்தின் மதிப்பு ₹53,63,346 + கட்டடத்தின் மதிப்பு ₹ 31,36,654) | ₹65,00,000 (நிலத்தின் மதிப்பு ₹42,58,703 + கட்டடத்தின் மதிப்பு ₹ 22,41,297) | ₹ 1,50,00,000 |
| வசூலிக்கப்பட்ட முத்திரை தீர்வை (ஏழு விழுக்காடு) | ₹5,95,000 | ₹4,55,000 | ₹10,50,000 |
| வசூலிக்கப்பட்ட பதிவுக் கட்டணம் (ஒரு விழுக்காடு) | ₹85,000 | ₹65,000 | ₹1,50,000 |
| **வசூலிக்கப்பட்ட மொத்த முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் (அ)** | ₹6,80,000 | ₹5,20,000 | ₹12,00,000 |
| சொத்தின் வழிகாட்டி மதிப்பு | சதுர மீட்டருக்கு ₹ 16,150 | சதுர மீட்டருக்கு ₹ 43,060 | -- |
| வழிகாட்டி சந்தை மதிப்பின் படி சொத்தின் மதிப்பு (கட்டிட மதிப்பு உட்பட) | ₹1,45,54,704 (நிலத்தின் மதிப்பு ₹1,14,18,050+ கட்டடத்தின் மதிப்பு ₹ 31,36,654) | ₹1,13,51,071 (நிலத்தின் மதிப்பு ₹91,09,774 + கட்டடத்தின் மதிப்பு ₹ 22,41,297) | ₹ 2,59,05,775 |
| குறைவான மதிப்பீடு | ₹60,54,704 | ₹48,51,071 | ₹1,09,05,775 |
| வசூலிக்கப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் @ 7 + 1 விழுக்காடு(ஆ) | ₹11,64,376 | ₹9,08,085 | ₹20,72,461 |
| வசூலிக்கப்பட வேண்டிய குறைவு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் (ஆ-அ) | **₹ 4,84,376** | **₹ 3,88,085** | **₹ 8,72,461** |

## இணைப்பு 3.3

(பார்வை: பத்தி 3.6 (i); பக்கம் 49)

சொத்தின் இருப்பிடத்தின் தவறான விவரங்களை வழங்கியதன் காரணமாக சொத்தின் குறைவான மதிப்பீடு

| சார்பதிவகத்தின் பெயர் | சார்ப்பதிவாளர் இணை -1, திருப்பூர் | | மொத்தம் |
|---|---|---|---|
| ஆவண எண் | 1409/2016 | 5064/2016 | |
| ஆவணமாக்கப்பட்ட தேதி /பதிவு செய்த தேதி | 04.02.2016 | 18.04.2016 | |
| வகை | மாற்றளிப்பு | மாற்றளிப்பு | |
| நிறைவேற்றுபவரின் பெயர் | திரு. ஸ்ரீனி கிரிஷ் | திரு ஆர்.பாலசுப்ரமணியம் | |
| உரிமை கோருபவர் பெயர் | திரு ஆர்.பாலசுப்ரமணியம் | திரு ஜே.ஜெயகாந்தன் | |
| சொத்து விவரங்கள் | 6,839 சதுர அடி நிலம் TS எண்.17/7A2C, பிளாக் எண்.3, T.S.எண்.17/9, திருப்பூர். | | |
| சதுர அடிக்கு ₹ 1,300/- என்ற அளவில் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பு | ₹ 88,92,000 | ₹ 88,92,000 | ₹ 1,67,84,000 |
| வசூலிக்கப்பட்ட முத்திரை தீர்வை (ஏழு விழுக்காடு) | ₹ 6,22,440 | ₹ 6,22,440 | ₹ 12,44,880 |
| வசூலிக்கப்பட்ட பதிவுக் கட்டணம் (ஒரு விழுக்காடு) | ₹ 88,920 | ₹ 88,920 | ₹ 1,77,840 |
| **வசூலிக்கப்பட்ட மொத்த முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் (அ)** | ₹ 7,11,360 | ₹ 7,11,360 | ₹ 14,22,720 |
| கல்லூரி சாலை, திருப்பூர் -ல் பொருந்தும் மதிப்பான ₹ 2,300 ன் படி மதிப்பிடப்பட்ட சொத்தின் மதிப்பு | ₹ 1,57,29,700 | ₹ 1,57,29,700 | ₹ 3,14,59,400 |
| வசூலிக்கப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை (ஏழு விழுக்காடு) | ₹ 11,01,080 | ₹ 11,01,080 | ₹ 22,02,160 |
| வசூலிக்கப்பட வேண்டிய பதிவுக் கட்டணம் (ஒரு விழுக்காடு) | ₹ 1,57,300 | ₹ 1,57,300 | ₹ 3,14,600 |
| வசூலிக்கப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தின் மொத்தம் (ஆ) | ₹ 12,58,380 | ₹ 12,58,380 | ₹ 25,16,760 |
| வசூலிக்கப்பட வேண்டிய குறைவு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் (ஆ-அ) | **₹ 5,47,020** | **₹ 5,47,020** | **₹ 10,94,040** |

## இணைப்பு 3.4

(பார்வை: பத்தி 3.6 (ii); பக்கம் 49)

### சொத்தின் இருப்பிடத்தின் தவறான விவரங்களை வழங்கியதன் காரணமாக சொத்தின் குறைவான மதிப்பீடு

| | |
|---|---|
| சார்ப் பதிவகத்தின் பெயர் | வாலாஜாபாத் |
| ஆவண எண் | 478/2018 |
| நிறைவேற்றப்பட்ட தேதி /<br>வழங்கும் தேதி /<br>பதிவு செய்த தேதி | 08/02/2018<br>06/05/2016<br>24/06/2019 |
| ஆவண வகை | மாற்றளிப்பு |
| நிறைவேற்றுபவரின் பெயர் | திரு. ஜி. நீலகண்டன் |
| உரிமை கோருபவர் பெயர் | திரு எஸ்.ரவிச்சந்திரன் மற்றும் திரு எஸ்.ரெங்கசாமி |
| சொத்து விவரங்கள் | வாலாஜாபாத் கிராமத்தில் 8,720 சதுர அடி நிலம். |
| ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பு | ₹ 29,21,200 |
| வசூலிக்கப்பட்ட முத்திரை தீர்வை (ஏழு விழுக்காடு) | ₹ 2,04,500 |
| வசூலிக்கப்பட்ட பதிவுக் கட்டணம் (நான்கு விழுக்காடு) | ₹ 1,16,850 |
| வாலாஜாபாத்-காஞ்சிபுரம் சாலைக்கு பொருந்தக்கூடிய சொத்தின் சந்தை மதிப்பு (வழிகாட்டி சந்தை மதிப்பு பதிவேட்டின் படி - ஒரு சதுர அடிக்கு ₹ 1,005) | ₹ 87,63,300 |
| குறைவான மதிப்பீடு | ₹ 58,42,100 |
| வசூலிக்கப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் (7 + 4 விழுக்காடு) | ₹ 9,63,996 |
| ஏற்கனவே வசூலிக்கப்பட்ட முத்திரைக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் | ₹ 3,21,350 |
| வசூலிக்கப்பட வேண்டிய குறைவு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் | **₹ 6,42,646** |

## இணைப்பு 3.5

### (பார்வை: பத்தி 3.7; பக்கம் 50)
### தீர்வையை பாகப்பிரிவினை என்று தவறாக வகைப்படுத்தியமை

| | |
|---|---|
| சார் பதிவகத்தின் பெயர் | சார்ப்பதிவாளர், குன்றத்தூர் |
| ஆவண எண் | 5802/2018 |
| ஆவணமாக்கப்பட்ட தேதி /பதிவு செய்த தேதி | 09/05/2018 |
| வகை | பிரிவினை |
| சம்பந்தப்பட்ட நபர்களின் பெயர் | 1. திருமதி ஃபரிதா மற்றும் 5 பேர்<br>2. M/s. கிரேட்டா எண்டர்பிரைசஸ் மற்றும் டெவலப்பர் பிரைவேட் லிமிடெட் |
| சொத்து விவரங்கள் | திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தாலுகாவில், எண்.67, நும்பல் கிராமத்தில் உள்ள 33 செண்ட் காலி நிலம். |
| ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பு | ₹ 3,75,62,000 |
| வசூலிக்கப்பட்ட முத்திரை தீர்வை (நான்கு விழுக்காடு) | ₹ 15,05,190 |
| வசூலிக்கப்பட்ட பதிவுக் கட்டணம் (ஒரு விழுக்காடு) | ₹ 3,75,620 |
| வசூலிக்கப்பட்ட மொத்த முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் | ₹ 18,80,810 |
| வசூலிக்கப்பட வேண்டிய முத்திரை தீர்வை (ஏழு விழுக்காடு) | ₹ 26,29,340 |
| வசூலிக்கப்பட வேண்டிய பதிவுக் கட்டணம் (நான்கு விழுக்காடு) | ₹ 15,02,480 |
| வசூலிக்கப்பட வேண்டிய மொத்த முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் | ₹ 41,31,820 |
| ஏற்கனவே வசூலிக்கப்பட்டுள்ள முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் | ₹ 18,80,810 |
| வசூலிக்கப்பட வேண்டிய குறைவு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் | **₹ 22,51,010** |

## இணைப்பு 3.6

(பார்வை: பத்தி 3.8; பக்கம் 51)

**விற்பனை அளவைக் குறைத்து தெரிவித்ததன் காரணமாக முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தின் குறைவான வசூல்**

| | |
|---|---|
| சார்ப் பதிவகத்தின் பெயர் | சார் பதிவாளர், சூலூர் |
| ஆவண எண் | 8395/2012 |
| நிறைவேற்றப்பட்ட தேதி / பதிவு செய்யப்பட்ட தேதி | 02/07/2012 |
| வகை | மாற்றளிப்பு |
| நிறைவேற்றுபவரின் பெயர் | திருி.ஆர்.பழனிசாமி மற்றும் திரு பி.தனபால் |
| உரிமை கோருபவர் பெயர் | டாக்டர் வேலச்சாமி ரவீந்திரன் |
| சொத்து விவரங்கள் | நீலம்பூர் கிராமத்தில் R.S.எண்.125/2ல் உள்ள 1.55 ஏக்கர் நிலம். |
| ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பு | ₹ 1,70,29,400 |
| வசூலிக்கப்பட்ட முத்திரை தீர்வை (ஏழு விழுக்காடு) | ₹ 11,92,060 |
| வசூலிக்கப்பட்ட பதிவுக் கட்டணம் (ஒரு விழுக்காடு) | ₹ 1,70,300 |
| வசூலிக்கப்பட்ட மொத்த முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் | ₹ 13,62,360 |
| வருமான வரி பதிவேட்டின்படி மதிப்பு | **₹ 5,31,37,640**<br>(₹ 5,45,00,000<br>(-) ₹ 13,62,360) |
| வசூலிக்கப்பட வேண்டிய முத்திரை தீர்வை (ஏழு விழுக்காடு) | ₹ 37,16,935 |
| வசூலிக்கப்பட வேண்டிய பதிவுக் கட்டணம் (ஒரு விழுக்காடு) | ₹ 5,31,375 |
| வசூலிக்கப்பட வேண்டியு மொத்த முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் | ₹ 42,51,010 |
| ஏற்கனவே வசூலிக்கப்பட்ட முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் | ₹ 13,62,360 |
| வசூலிக்கப்பட வேண்டிய குறைவு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் | **₹ 28,88,650** |

## இணைப்பு 3.7

(பார்வை: பத்தி 3.9; பக்கம் 52)

### விக்கிரையம்-மற்றும்-குத்தகை ஒப்படைத்தல் ஆவணத்தை வெறும் குத்தகை ஒப்படைத்தல்ஆவணம் என்று தவறாக வகைப்படுத்தியமை

(ரூபாயில்)

| வ எண் | அலுவலகத்தின் பெயர் | ஆவண எண் | பதிவு செய்த மாதம் | கட்டிடத்தின் மதிப்பு | 11 விழுக்காடு என்ற வீதத்தில் வசூலிக்கப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் | வசூலிக்கப்பட்ட முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் | வேறுபாடு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சூளூர் | 14353/2019 | டிசம்பர் 2019 | 1,94,56,132 | 21,40,175 | 1,94,670 | 19,45,505 |
| 2 | சூளூர் | 8702/19 | ஆகஸ்ட் 2019 | 20,64,761 | 2,27,124 | 21,100 | 2,06,024 |
| 3 | சூளூர் | 8703/2019 | ஆகஸ்ட் 2019 | 20,64,761 | 2,27,124 | 21,100 | 2,06,024 |
| 4 | சூளூர் | 8704/2019 | ஆகஸ்ட் 2019 | 20,64,761 | 2,27,124 | 21,100 | 2,06,024 |
| 5 | அவிநாசி | 12477/2018 | செப்டம்பர் 2018 | 2,58,12,144 | 28,39,335 | 2,58,125 | 25,81,210 |
| மொத்தம் | | | | **5,14,62,559** | **56,60,882** | **5,16,095** | **51,44,787** |

## இணைப்பு 4.1

### (பார்வை: பத்தி 4.4; பக்கம் 56)
### போக்குவரத்து வாகனங்களுக்கு பசுமை வரி விதியாமை

(ரூபாயில்)

**(i) ஆட்டோ ரிக்ஷா**

| வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் பெயர் | மொத்தம் | | தணிக்கையில் சுட்டிக்கட்டிய பின் வசூலிக்கப்பட்ட வரி | | பாக்கி தொகை | |
|---|---|---|---|---|---|---|
| | வாகனங்கள் | தொகை | வாகனங்கள் | தொகை | வாகனங்கள் | தொகை |
| சென்னை சென்ட்ரல் | 668 | 1,33,600 | இல்லை | | 668 | 1,33,600 |
| சென்னை வடமேற்கு | 877 | 1,75,400 | | | 877 | 1,75,400 |
| சென்னை தெற்கு | 754 | 1,50,800 | | | 754 | 1,50,800 |
| கோவை வடக்கு | 256 | 51,200 | | | 256 | 51,200 |
| ஒசூர் | 39 | 7,800 | | | 39 | 7,800 |
| சேலம் மேற்கு | 53 | 10,600 | | | 53 | 10,600 |
| வேலூர் | 469 | 93,800 | | | 469 | 93,800 |
| மொத்தம் (அ) | **3,116** | **6,23,200** | | | **3,116** | **6,23,200** |

**(i) ஆட்டோ ரிக்ஷா தவிர பிற வாகனங்கள்**

| வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் பெயர் | மொத்தம் | | தணிக்கையில் சுட்டிக்கட்டிய பின் வசூலிக்கப்பட்ட வரி | | பாக்கி தொகை | |
|---|---|---|---|---|---|---|
| | வாகனங்கள் | தொகை | வாகனங்கள் | தொகை | வாகனங்கள் | தொகை |
| சென்னை சென்ட்ரல் | 667 | 3,33,500 | 165 | 82,500 | 502 | 2,51,000 |
| சென்னை வடமேற்கு | 1,080 | 5,40,000 | 205 | 1,02,500 | 875 | 4,37,500 |
| சென்னை தெற்கு | 829 | 4,14,500 | 77 | 38,500 | 752 | 3,76,000 |
| கோவை வடக்கு | 1,863 | 9,31,500 | 790 | 3,95,000 | 1,073 | 5,36,500 |
| ஒசூர் | 467 | 2,33,500 | 65 | 32,500 | 402 | 2,01,000 |
| சேலம் மேற்கு | 1,026 | 5,13,000 | 211 | 1,05,500 | 815 | 4,07,500 |
| வேலூர் | 1260 | 6,30,000 | 48 | 24,000 | 1,212 | 6,06,000 |
| மொத்தம் (ஆ) | **7,192** | **35,96,000** | **1,561** | **7,80,500** | **5,631** | **28,15,500** |
| மொத்தம் (அ +ஆ) | **10,308** | **42,19,200** | **1,561** | **7,80,500** | **8,747** | **34,38,700** |

## இணைப்பு 4.2

### (பார்வை: பத்தி 4.4; பக்கம் 56)
### போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கு பசுமை வரி விதியாமை

**(i)** மோட்டார் சைக்கிள்கள்

| வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் பெயர் | மொத்தம் | | தணிக்கையில் சுட்டிக்கட்டிய பின் வசூலிக்கப்பட்ட வரி | | பாக்கி தொகை | |
|---|---|---|---|---|---|---|
| | வாகனங்கள் | தொகை | வாகனங்கள் | தொகை | வாகனங்கள் | தொகை |
| சென்னை சென்ட்ரல் | 1,651 | 8,25,500 | 11 | 5,500 | 1,640 | 8,20,000 |
| சென்னை வடமேற்கு | 3,218 | 16,09,000 | 21 | 10,500 | 3,197 | 15,98,500 |
| சென்னை தெற்கு | 5,164 | 25,82,000 | 8 | 4,000 | 5,156 | 25,78,000 |
| கோவை வடக்கு | 13,011 | 65,05,500 | 74 | 37,000 | 12,937 | 64,68,500 |
| ஒசூர் | 2,323 | 11,61,500 | 11 | 5,500 | 2,312 | 11,56,000 |
| சேலம் மேற்கு | 15,750 | 78,75,000 | 127 | 63,500 | 15,623 | 78,11,500 |
| வேலூர் | 7,328 | 36,64,000 | 13 | 6,500 | 7,315 | 36,57,500 |
| மொத்தம் (அ) | **48,445** | **2,42,22,500** | **265** | **1,32,500** | **48,180** | **2,40,90,000** |

**(ii)** மோட்டார் சைக்கிள்கள் தவிர பிற வாகனங்கள்

| வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் பெயர் | மொத்தம் | | தணிக்கையில் சுட்டிக்கட்டிய பின் வசூலிக்கப்பட்ட வரி | | பாக்கி தொகை | |
|---|---|---|---|---|---|---|
| | வாகனங்கள் | தொகை | வாகனங்கள் | தொகை | வாகனங்கள் | தொகை |
| சென்னை சென்ட்ரல் | 1,538 | 15,38,000 | 103 | 1,04,000 | 1,435 | 14,34,000 |
| சென்னை வடமேற்கு | 1,419 | 14,19,000 | 91 | 91,000 | 1,328 | 13,28,000 |
| சென்னை தெற்கு | 3,094 | 30,94,000 | 53 | 53,000 | 3,041 | 30,41,000 |
| கோவை வடக்கு | 2,504 | 25,04,000 | 164 | 2,05,500 | 2,340 | 22,98,500 |
| ஒசூர் | 453 | 4,53,000 | 20 | 22,000 | 433 | 4,31,000 |
| சேலம் மேற்கு | 1,969 | 19,69,000 | 213 | 2,72,329 | 1,756 | 16,96,671 |
| வேலூர் | 544 | 5,44,000 | 20 | 25,000 | 524 | 5,19,000 |
| மொத்தம் (ஆ) | **11,521** | **1,15,21,000** | **664** | **7,72,829** | **10,857** | **1,07,48,171** |
| மொத்தம் (அ +ஆ) | **59,966** | **3,57,43,500** | **929** | **9,05,329** | **59,037** | **3,48,38,171** |

© இந்திய கணக்காய்வு மற்றும்
தணிக்கைத் துறைத் தலைவர்
www.cag.gov.in

**https://cag.gov.in/ag1/tamil-nadu/en**